# என் வர்ண நிலா...

## 1

'சென்ட்ரலி'ன் பயணிகள் அறையில் அமர்ந்திருந்தவள் தன்னைச் சுற்றி சுவாரஸ்யமாய் நோட்டமிட்டாள்.

அக்கால சத்திரம் என்பது இப்படித்தான் இருந்திருக்கும். பல்வேறு மொழி, இன மக்கள் வெகு இயல்பாய் 'சளசள'த்து சுற்றிவந்த நூதனக் காட்சி.

மதுரையிலிருந்து அன்று காலைதான் அவர்கள் சென்னை வந்து இறங்கியிருந்தனர். இன்னும் நான்கு மணி நேரத்தில் 'ராஜ்தானி எக்ஸ்பிரஸ்' அவர்களை வடக்கே சுமந்து செல்லும்.

வர்ணா அதிகம் பயணம் செய்ய நேர்ந்ததில்லை.

மதுரையின் சுற்றுப்புற கிராமங்களுக்கு அவ்வப்போது கல்யாணம் காட்சி காண போய் வருவதுண்டு. அதுவும் கூட வெகு அபூர்வம்.

பொண்டாட்டி, புருஷன் பிரிந்து கிடக்கும் குடும்பத்தில்- மழுப்பலில்லாது சொன்னால் - ஓடிப்போன அம்மாவின் பெண்ணான அவளுக்கு ஊரில் நடக்கும் நல்ல காரியங்களுக்குப் போக மனம் வருமா? போனாலும் நல்ல வரவேற்பு கிடைக்குமா?

இளக்கார பார்வைகளும் - ஏளனப் பேச்சுக்களுந்தான்.

'அந்த ஜதாதாவனி போட்ட குட்டியைப் பார்த்தியா?'

'ஆமா அதுக்கென்ன - பேரு வர்ணாதானே?'

'பேரப் பாத்தாலே அவன் ஆத்தாளைப் பத்தி புரிஞ்சிருக்கணுமே'

'ஊகும்-நம்ம பக்கத்தில இதுபோல பேரு கேள்விப்பட்டதில்லை'

'மகளைப் பெத்து சிங்காரமாப் பேரும் வைச்சிட்டு ஓடிப் போயிட்டாளே மகராசி'

'கொஞ்சம் விவரமாச் சொல்லுடி.'

விவரங்களை கேட்பதற்கு முன்பே குன்றிவிடுவான் வர்ணா. பிறகு வீட்டிலேயே அடைபட்டுக்கிடந்தவன்தான்.

ஆக சென்னை ரெயில் நிலையமே அவனுக்கு பிரமிப்பு தந்தது.

அங்கு பெரும்வாரியாகக் குழுமியிருந்தது வடக்கத்தியர்கள்தான். வெள்ளரிப் பழமாய் வெளுத்த தோல்கள் கூட்டுக் குடும்பங்கள் போலும். குழுவாகவே பயணித்தனர்.

'பயணிகள் அறை'க்குள் நுழைந்த கையோடு தோளில் தொங்கிய பருத்த பைகளைக் குடைந்து துவாலைகளுடன் பலர் குளியலறைக்கு ஓடினர். அங்கு அத்தகு வசதி இருப்பதே அறியாத இவன் சுவாரஸ்யமாய் நடப்பவற்றைக் கவனிக்கலானான்.

ஐந்து பத்து நிமிடங்களில் குளித்து வெளியேறினர். பேசித்தபடி, தலைச்சீவி ஒப்பனை நடந்தது. 'பளிச்' என்று கசங்காத உடையில் உதட்டுச் சாயமும் உடைக்குத் தக்க பொட்டுமாய் தயாரானவர்கள், பையின் மற்றொரு மூலையிலிருந்து சிறு அட்டைப் பெட்டிகளை எடுத்துப் பிரித்தனர். 'கம்'மென்று நெய் மணம்! பகிர்ந்து அந்த இனிப்புகளை சாப்பிட ஆரம்பித்தாயிற்று.



இத்தனைக் காலை வேளையில் இனிப்பா? நினைப்பே திகட்டியது.

காதோரம் நரை மின்ன ஆரம்பித்த வடக்கத்திப் பெண்கள் எல்லாரும் பிரம்மாண்ட பருமனில் இருந்ததின் காரணம் இதுதான்போலும்!

நம்மவர்கள் வேறு இனம்.

பிரயாண அயர்ச்சி முழுதுமாய் முகத்தில் வடிய, முகம் கூடக் கழுவாது, கசங்கல் ஆடைகளுடன் சரிந்து கிடந்தனர். பலர் கைகளில் ஆவி பறக்கும் காபி கோப்பைகள்.

பயணிப்பது ஒரு கலை எனத் தோன்றியது.

ஆயிரம் மைல்கள் கடந்தும் முகச் சிரிப்பு மாறாமல், உடை கலையாமல், கிடைத்ததைச் சாப்பிட்டுக்கொண்டு அல்லது பிடித்த சாப்பாட்டைச் சுமந்து கொண்டு!

"சித்தி பசிக்குது.." பிரபு அவள் மீது சாய்ந்தான்.

மொழியைக் கடந்த உணர்வில் பசியும் ஒன்றாயிற்றே- சிறுவன் கூறியது புரிந்தவள் போல முக்காடிட்டிருந்த பருத்த மாது இனிப்புப் பெட்டியை சிறுவனிடம் நீட்டினாள்.

"ஊகும்.. இது வேணாம்.. தோசை.."

அண்ணன் சொன்னதும்தான் சின்ன பவித்ராவும் தன் பசி உணர்ந்தாள் போலும்.

"ம்ம்.. எனக்கும் தோசை."

வர்ணா மெல்ல யாமினியின் பக்கமாய் பார்த்தான். யாமினிதான் இவ்விரு குழந்தைகளின் தாய்.

ஆனால் அவளோ தனக்கு இவர்களுடன் எந்த சம்பந்தமும் இல்லாதது போல ஓர் இருக்கை ஒன்றில் புத்தகத்துடன் சாய்ந்திருந்தாள்.

"யாமினி பிள்ளைகளுக்கு பசிக்கிறதாம்."

“உணவகம் அருகே எங்காவதுதான் இருக்கு.”

விரிந்துக் கட்டிப்போ வர்ணா-எனக்குப் பசிக்கலை”

ஒருவனம் மட்டுமே உயர்ந்த அவன் விழிகள் மீண்டும் புத்தகத்தில் பதிந்து ஓடின.

எழும்பியிருந்து சென்ட்ரல் வருவதற்குள்ளாகவே வர்ணவிந்த விழி பிதுங்கிப்போனது. தலைநகரின் தூசியின் பரபரப்பைப் பார்த்து!

கூடவே குழந்தைகளையும் பெட்டி, பைகளையும் தூக்கியபடி ஓடியது இன்பமாயில்லை-பதட்டம்தான்.

இப்போது உணவகத்தைத் தேடி போய் சாப்பிட்டு வருவது எப்படி? ம்ஹூம். வேறு வழியுமில்லையே.

அவன் இதற்காகத்தானே கூட்டி வரப்பட்டிருக்கிறான். ஏற்கனவே யாமினி இவனிடம் செலவுக்கென்று சில நூறு வகைத்து வைத்திருந்தாள் - ஆக கிளம்ப வேண்டியதுதான்.

குழந்தைகளை பக்கத்துக்கு ஒருவராய் பிடித்தபடி நடந்தான். கோட்டை எழுத்தும், அம்புக்குறிகளும் அவனை அலைக்கழியாது சேரவேண்டிய இடம் சேர்த்தன.

நல்லவேளை உணவகத்தில் கூட்டமில்லை.

ஆனால் தட்டுகளில் தோசை வந்தபிறகுதான் ஏன் அங்கு கூட்டமில்லை என்பது புரிந்தது.

ரப்பர் போல பிய்ந்து தோசை வாயில் இழுபட்டது.

“எனக்கிது பிடிக்கலை...” பிரபு முகம் திருப்பிக்கொண்டான். பவித்ரா மேசையின் கீழே புகுந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தாள்.

“பவி அங்கே என்ன பண்றே?”

“பூ... குட்டிப் பூனை.. நித்தி..”

“அப்போ, சாப்பிட்டுட்டே பார்ப்போம்.”



ஆர்வமாய் மூத்தவனும் குனிய, பஞ்சு பந்துகளாய் அங்குமிங்குமாய் ஓடி பம்மி நின்ற பூனைக்குட்டிகளைக் காட்டியே இவன் தோசைகளை அவர்களுக்கு ஊட்டிவிட்டான். தானும் ருசி பாராது பசிக்கு மென்று வைத்தான்.

வடை சற்று தேவலை. யாமினிக்காய் இரு வடைகளைக் கட்டி வாங்கினான்.

பூனையின் பஞ்சு தேகத்தைத் தொட்டுவிட்ட குதூகலத்தில் எம்பிய பவித்ரா, மேசை விளிம்பில் மோதிக்கொண்டு பெரிதாய் அழ ஆரம்பிக்க, அவளையும் அள்ளிக்கொண்டு கிளம்பினான்.

'தனியாய் இதுகளைக் கூட்டிட்டு என்னால் இரண்டாயிரம் மைல் பிரயாணம் பண்ண முடியாது வர்ணா!' என யாமினி சொன்னதில் அர்த்தம் உண்டுதான். ஆனால் பிரயாண அனுபவமே அற்ற தன்னால் மட்டும் அது முடியுமா? கூட யாமினியும் இருந்தால் தேவலை.

ஆனால் அவளுக்கு நினைத்த நிமிடத்தில் தலைவலி வந்துவிடும்!

'தைலம் தேய்க்கக்கிறியா?' என்றால்-

'இல்லை - புத்தகம் வாசிச்சிட்டு இருந்தாலே வலி போயிடும்' என்று பதில் வரும்!

யாமினி, இவனுடன் ஒரு வருடம் மட்டும் பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிந்தவள். அப்போது ஏற்பட்ட பரிச்சயம்தான். அதாவது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு!

அப்போதே யாமினி உழைக்க சுணங்குவாள். அது பேர்பெற்ற தனியார் பள்ளி - ஆக பல நிகழ்ச்சிகள், போட்டிகள் விழா என்று சதா தடபுடல்படும்.

யாமினிக்கு நல்ல வெறுப்புத் தோல்.

மைதாவைக் குழைத்துப் பூசியது போல! முகம் அதிக லட்சணம் என்றில்லாவிட்டாலும் கூட நிறம் கொடுத்த கர்வம் உண்டு.

பள்ளி விழாக்களில் அடிக்கடி மேடை ஏறும் சந்தர்ப்பம் கிடைக்கும். அவள் பாஸ்கரனைச் சந்தித்தது அப்படி ஒரு விழாவில்தான்.

பாஸ்கரனின் அண்ணன் ஊரில் பெயர்பெற்ற தொழிலதிபர். அவர் அந்த நிகழ்ச்சிக்கு தலைமைதாங்க அழைக்கப்பட்டிருந்தார். கூடவே வேடிக்கைப் பார்க்க வந்த தம்பியின் கண்களில் யாமினி..! அவள் நடையும் நிறமும் பிடித்துப் போக, அவ்வளவும் தொழிலதிபரின் யாமினியும் இருப்பிட அவர்கள் திருமணம் மறுமாதமே நடந்தது.

யாமினி புத்திசாலி - கிடைத்த சந்தர்ப்பத்தை பற்றிக் கொண்டாள். தன்னைப் போன்ற முட்டாளில்லை. ஜெயித்திருக்கிறாள் என நினைத்தாள் வர்ணா.

## 2

ரேங்க் படிவேறும்போதும்கூட அரை மனதுதான்.

ஆனால் இப்போது 'நான் ஜெய்ப்பூர் வரவில்லை' என்று முகம் காட்ட முடியாதே.

சேகரமே பழகிய யாமினியுடன் இரண்டாயிரம் மைல்கள் பிரயாணம், 15 நாட்கள் தங்கல் - இப்படி முடிவெடுத்தது முட்டாள் தனமோ?

ஏனெனில் யாமினிக்கும் பள்ளியில் அத்தனை நல்ல பேர் கிடையாது.

அவளும் அலட்டல் பேர்வழிதான். தான் முன்பு



ஓராண்டு பணிபுரிந்த அதே பள்ளியில்தான் தன் மகனைச் சேர்த்திருந்தாள்.

வர்ணா பெரிய வகுப்புகளுக்கே கற்பிப்பவள் என்றாலும் பாலர் வகுப்பில் இருந்த பிரபுவை அவ்வப்போது எட்டிப் பார்ப்பது உண்டு. அவனுக்கும் இவள் மீது தனி பிரியம்.

அந்த முறையில் யாமினி இன்னும் நெருங்கி வந்தாள்.

"மச்சி"ன்னு எதுக்கு கூப்பிடறே பிரபு? வர்ணா எனக்குத் தங்கை போல, ஆக சித்தின்னே கூப்பிடு இனி" - என்னும் அளவு.

அதற்கேற்ப உரிமை எடுத்துக்கொண்டு வர்ணாவிடம் நூறு வேலைகளைச் சாதித்தும் கொள்வாள்.

அவள் காரில் வந்திறங்கி கதவடைக்கும் தோரணையே அலட்டும். நாளுக்கு ஒரு சேலை மட்டுமல்ல நகையும் மாறும். எப்போதும் 'கன்' நிறங்களில் சரிகைக் கரை ஓடிய மைசூர் பட்டுதான்.

தன் நிறத்திற்கு அவை எடுப்பு என்று அவள் நினைத்தாலும் மிக பருத்துவிட்ட யாமினிக்கு எதுவுமே அழகு சேர்க்கவில்லை.

சோம்பல் வாழ்வு, பெருந்தீனியில் சக ஆசிரியைகள் சொல்வதுபோல் 'வெள்ளைப் பன்றி'யாகத்தான் ஊதிப் போனாள்.

இவள் உடம்பு போலவே பாஸ்கரனது வியாபாரமும் செழித்து விருத்தியானது. நவீன மரச் சாமான்களுக்கு அவன் கடைதான் பிரபலம். இப்போது வட இந்தியாவிலிருந்து கொண்டு வெளிநாட்டிற்கு கட்டில் மேசைகளை ஏற்றுமதி செய்யுமளவு விஸ்தீரணப் பட்டிருந்தது.

டில்லியில் நடக்கும் ஒரு கண்காட்சியில் அவனது மரப் பொருட்கள் இடம் பெறுகின்றனவாம்.

அது முடிந்த கையோடு, இவர்கள் டில்லி போனால் கூட்டிக்கொண்டு ஜெய்ப்பூர். அங்குள்ள வணிகர் ஒருவரோடு இணைந்து பொருட்கள் உற்பத்தி செய்வதுடன், ஏற்றுமதிக்கான ஏற்பாடுகளும் நடக்கின்றதாம்.

இத்தனையும் யாமினி விளக்கியபோது இவன் ஆர்வமாய் கேட்டுக் கொண்டான்.

'இன்று காலை கூட அவரிடமிருந்து போன் வந்தது வர்ணா. பிள்ளைகளுக்கு மார்கழி முழுக்க விடுமுறைதானே - என்னுடன் ஜெய்ப்பூர் வந்து கழியுங்களேன் என்று கெஞ்சுகிறார்' என்றாள்.

"போய் வர்றதுதானே...?"

"யப்பா, இந்த ரெண்டு வாண்டுகளை யார் சமாளிக்கறது? காரில் ஒரு மணி நேரம் போனாலே இதுங்களுக்கு அலுத்துரும். ரெயில்ல டெல்லிக்கு... அதுவும் அவர் துணையில்லாமல்..."

"ம்ம்.. சிரமம்தான்."

"உடனே யாமினி தட்டைத் திருப்பிப் போட்டாள்

"ராஜ்தானிக்கு ஒரு சொகுசு ரெயில் இருக்குதாமே. சென்னையிலிருந்து காலை பதினொன்றுக்குக் கிளம்பினால் முப்பதே மணி நேரத்தில் டெல்லி போய் சேர்ந்திடுமாம்."

"அடடே? அப்போ மறுநாள் காலை நாலு மணிக்கு?"

"சாப்பாடெல்லாம் விதம்விதமாய் ரெயிலுக்குள்ளேயே கிடைக்குமாம். வண்டி முழுக்க குளிர்பதனவசதி - அலுங்காமல் வந்து இறங்கிடலாம்ங்கறார்."

"பிறகென்ன? அந்த ரெயிலில் தொலைபேசி வசதியும் கூட வரப்போறதாய் படிச்சேன். வெளிநாட்டுக்கும் கூட பேசிடலாம். மணிக்கு நூறு ரூபாய்!"

"எல்லாம் சரி... இந்த வாண்டுங்க..."



"டெல்லியில்தான் பாஸ்கர் காத்து நிப்பாரே..."

"ஒருநாள்தான் அங்கே - பிறகு ஜெய்ப்பூர். அங்கே ஊருக்கு வெளியே ஒரு பழத்தோட்ட பங்களாவில் தங்கியிருக்காராம். அங்கே சீதோஷ்ணம் சாப்பாடு... எப்படியோ?"

"உன் சமையல்காரப் பாட்டியை அழைச்சுட்டுப் போ."

"பாட்டி, தன் பேரனைத் தினம் பார்க்காட்டா தலை வெடிச்சுப் போகும் ரகம் - வரமாட்டேங்கறாளே..."

"ம்ம்..."

"ஆனா அங்கே சமைக்க மங்களான்னு நம்ம பக்கத்துப் பொண்ணு ஒருத்தி உண்டாம்."

"வசதியாப் போச்சு"

"மங்களாவை 'மங்கு'ன்னு கூப்பிடுவோம். மக்குன்னா இன்னும் பொருத்துங்கறாரே இவர்? தவிர அங்கே ஊசிக் குளிராம். இதுங்களுக்கு சளி பிடிச்சாலும் நான் அலமலந்துப் போவேன்."

"ஜெய்ப்பூர் ரொம்ப அழகான நகரம் - 'பிங்க் சிட்டி'ன்னு சொல்வாங்க..."

"டெல்லியிலிருந்து ஒரு இராத்திரிப் பயணந்தானாம். இவர் என்னை எப்படி ஆசை காட்டறார் தெரியுமா? கடைத்தெரு முழுக்க டாலடிக்கும் யாமினி - கண்ணாடி வைச்ச தைத்த விதவிதமான உடைகள் பாந்தினி அச்சுச் சேலைகள்னு கண்ணைப் பறிக்கும்ங்கறார்."

"போய்த்தான் வாயேன். குடும்பமாய் நீங்க சேர்ந்து இருக்க நல்ல சந்தர்ப்பம். அழகிய ஊர் ஒன்றைப் பார்த்த திருப்தி..."

"ஏன் வரு? நீ கூட வெளியூர் எங்கும் போனதில்லை இல்லியா?"

"நாலுதடவை சொழவந்தான். பிறகு பழனி, தேனி... கொஞ்சம் கண்ணுக்குக் குளிர்வாய் பார்த்தது வைகை அணைதான்."

"அப்போ எங்கூட வாயேன்."

"நா..நானா?"

"ம்ம்.. உங்கப்பா இறந்தபிறகு நீ வீட்டைவிட்டு வெளியே வர்றதும் அரிதாயிடுச்சு. ஒரு மாற்றத்தானே.. நீ கூட வந்தால் எனக்கும் உதவி. பிள்ளைகளும் சந்தோஷப்படும்... என்ன சொல்றே? உனக்கும் சேர்த்து டிக்கெட் எடுக்க சொல்லிடவா?"

அங்கு இங்கென்று சுற்றி கடைசியில் மூக்கைத் தொட்டுவிட்டான் யாமினி.

மென்மை ஆனால் உறுதியாய் தலையசைத்தாள் வர்ணா.

"இல்லை யாமினி.. நான் வரலை."

யாமினியின் முகம் கன்றிப்போனது.

## 3

அப்பா ஒரு விசித்திர மனிதர்.

இத்தனை வருட வாழ்வில் அவர் தன் மகள் வர்ணாவிற்கு சேர்த்து வைத்துப் போனதெல்லாம் ஒன்றுதான் - அது அறிவுரை!

அதுவும் ஒன்றேதான் - 'பணம்தான் பிரதானம்' என்பதுதான் அது இறக்கும் தருவாயில் கூட..

'கைநிறைய சம்பாதிக்கிறவனாப் பார்த்து கல்யாணம் செய்துகிட்டு சவுக்கியமாய் வாழும்மா' - என்றவர்



பாவம் - வாழ்க்கை அவருக்குக் கற்றுத்தந்த பாடம் அதுதான் போலும்.

சுவரில் தொங்கும் பழைய படத்தில் அப்பா முகம் இப்போது போலில்லாமல் நல்ல தெளிவாய் இருக்கும் சிரிக்கும் கண்கள்.

அருகே நின்ற அம்மா மகா அழகு.

சிலரின் வசீகரம் புகைப்படத்திற்குள் சிறைபடாது.

சிலரிடம் இல்லாத கவர்ச்சி புகைப்படத்தில் சிக்கும்!

வரைந்து வைத்தாற்போல இத்தனை அம்சமாய் அம்மா நிஜமாலுமே இருந்திருப்பாளா?

அப்பாவிடம் கேட்க துணிவில்லாமல் ஒருமுறை வீட்டிற்கு வந்த அம்மாவின் சித்தியிடம் கேட்டிருக்கிறாள்.

அவ அதான் உங்கம்மா நிஜமாலுமே ரம்பைதானடி.. பழுதே இல்லாத அழகு. ஆனால் அப்படியேன் படைக்கணும்னு பிரம்மன் குணத்திலே பழுதை வைச்சிட்டார் போல. அதால் தறிகெட்டு இன்னொருத்தனோட ஓடிட்டா. நம்ப குடும்பத்திலேயே இல்லாத வழக்கம். ஆனா இத்தனவு அழகும் வேறொருத்திகிட்ட பார்த்ததில்லை. இது கறுப்பு வெள்ளைப் படம். நெய் பிணைஞ்ச கடலைமாவு போல நிறமாயிருப்பா. பளபளங்குற தேகம். சிரிக்கையில் பல்லு முத்துசரம்னா, இரண்டு கண்ணபிரண்டும் தங்கக்குண்டு. மாசு மருவில்லாத தண்டு தண்டாத் தொங்கற காலு கை. அசைஞ்சா மயிலுதான்.. அத்தனை ஏன் - உன்னைக் கண்ணாடியில் பாத்திருக்கேயில்லை?"

"ஏம் பாட்டி?"

"அவள் பொண்ணுதானே நீ.. அந்தச் சாயல் இருக்கே."

"நான் ஒண்ணும் நெய் தோய்ச்ச கடலைமாவு போலில்லையே கறுப்பு."

"நிறத்தில நீ உங்கப்பனை கொண்டிருக்கே... ஆனா சுறுசுறுப்பில்லை -அழுவர்த இஞ்சி நிறம்."

"அம்மாவைக் கலர்படம் எடுத்திருக்கணும் பாட்டி."

"போகுதுபோ - உடம்பு என்ன நிறமாயிருந்து என்ன, மனசிலே கறுப்பை வைச்சிட்டாளே."

"அம்.. அம்மா பணத்தாசையில் ஒரு மிராசுதாரர் கூடப் போயிட்டதா.. அது உண்மைதானா பாட்டி?"

"உண்மையில்லாமல் ஊரில மொத்த வாயும் அப்படிப் பேசுமா! ஆரணிப் பட்டும் கருகமணிச் சரமும் போட்டாலே அவள் ரம்பை. ஆனா அவளுக்கது போதலை. 'இன்னும் கொண்டா, மேலும் சம்பாதின்னு உங்கப்பனை அரிச்சுப் பிடுங்கினா. அரசாங்க கணக்கர் உத்யோகத்தில அவன் என்ன பிரட்டுவான்.. வாங்கற சம்பளம் அப்படியே அவள் கையில்தான். ஆனால் ஆசை பெரிசுங்கறப்போ காசு போதலை. அவனும் அதையே சொல்லிச் சொல்ல புருஷன் பொண்டாட்டி உறவில் விரிசல் விட ஆரம்பிச்சிருந்த அந்நேரத்தான் இந்த மிராசு நுழைஞ்சான் போல."

"அவர், அவருக்குக் குடும்பம்?"

இருக்குது ஆனா காசும் இருந்ததுல்ல கூத்தடிக்க?"

"அம்மா அங்கே எப்படி இருந்தாங்க?"

"அங்கேயும் அவள் சீர்படலை - 'சீப்'பட்ட வாழ்வுதான் சுகிச்சோர் நேர்மையில்லாத வாழ்வு சிக்காதுல்லவா?"

"அப்போ சுகிச்சேன் என்ன பாட்டி? அப்பா 'பணம்'ங்கறார்?"

"அவனால வேற முடியலை இறைக்கக் கொட்ட முடியலை அதனால் பணம்னா அவனுக்கு ஏகப்பிரியம்.. அதி யோசிச்சிருந்தால் அவனுக்கு உண்மை புரிஞ்சிருக்கும்."

"அப்படியா!"



"உங்கம்மாவும் காசுக்குத்தானே பறந்தா? உன்னுடைய ஆங்கில ஆசிரியர் தெரியுமில்லே? அவர் சொல்வாரு - 'மோகம் அனைத்திலுமே கண்மூடித்தனம் சிறிது உண்டு. ஆனால் பண மோகத்தில் அது மிக அதிகம்'னு யாரோ அறிஞரு சொன்னதாம். உங்கம்மா தினம் பட்டு உடுத்த, நகையால மேனிய மூட துடிச்சா.. அவள் பொருமினது இன்னும்கூட எங்காதில கேட்குதுடி 'என்னில் கால்வாசி இல்லாதவளுங்க எல்லாம் அரைக் கிலோ நகையச் சுமந்திட்டு காரில் ஊர்வலம் போக, நான் இப்படி'ம்பா. ஆனா நகையும் பட்டுமாய் ஒருநாள் அவளைப் பார்த்தேன் மிராசு தோட்ட வீட்டில் வைச்சு.. சரிகையும் சொர்ணமுமா மின்னினா... ஆனா மூஞ்சியில் அருள் இல்லை, கண்ணுல ஒளி இல்ல. நேர்மையும், அன்புந்தான அழகு? அது மனசுல நிறைஞ்சு கண்ணு வழியே சுரக்கணும்-அதுதான் அம்சம். என்னை வரச்சொல்லி விட்டவள், பத்து நிமிடம் வெறுமே அழுதா.. உம்.."

"அங்கே போய் ரெண்டு வருடத்திலேயே அம்மா செத்திட்டாங்க இல்லையா பாட்டி?"

"வயித்துவலியில் போயிட்டாங்கறது சும்மா. பாவப்பட்ட வாழ்க்கையை அவளே ஓய்ச்சிட்டா. உங்கப்பன் இப்படி முனகியே காலங் கழிக்கிறான்."

ஆசையால் அழிந்த அம்மா மீதோ சுயபரிதாபத்தில் நாட்களைக் கழித்த அப்பா மீதோ அனுதாபம் ஏற்படவில்லை.

ஆனால் அவளையும் அறியாமல் அப்பா சொன்ன அறிவுரைகள் அவளுள் ஊறியிருக்க வேண்டும்.

தன் பெற்றவர்கள் பிரச்சினை அனைத்திற்கும் காரணம் பணம் என்றே முடிவு செய்தாள். போதுமான செல்வம் இருந்தால் வாழ்வு சுகப்பட்டுவிடும் என்ற கணிப்பு.. அது அவளைப் பெற்றவர் மனதில் உருவேற்றியிருந்த பாடம் பசுமரத்தில் ஆணியாய் ஏறிப்போனது.

அதை மனதில்கொண்டுதான் வசந்த் அவளை மணக்கக் கேட்டபோது அவள் மறுத்தாள்.

அவன் மீது எரிப்பு இருந்தது.

அவனைக் கண்டபோதெல்லாம் ஏன்.. அவனை நினைத்த மாத்திரம் இன்பம் பெருகியது. காணாத நாழி எல்லாம் ஏக்கம். எல்லாமிருந்தும், "உங்க சம்பாத்தியத்தில் நாம் நிம்மதியா குடித்தனம் நடத்த முடியாது வசந்த்" என்றாள்!

ஒருகணம் நம்பமுடியாது வெறித்தான். பின் புன்னகையுடன் "நிம்மதியாய் மூனு வேளை நாம் சாப்பிட முடியும். மானமாய் தங்கிக்க சொந்தத்தில் சின்ன வீடு. அதெல்லாம் யோசிக்காமல் உன்னை கல்யாணம் செய்துக்கக் கேட்பேனா வர்ணா?" பொறுமையுடன் விளக்கினான்.

இவளுக்கும் பணத்தின் மீது மோகமில்லை.

ஆனால் அது தனக்கு அரணாயிருக்கும் என்ற நம்பிக்கை. குடித்தன சந்தோசத்திற்கு அதுவே பாதுகாவல் என்ற அப்பாவின் போதனை மூளையும் மனதும் அதில் கட்டுண்டு கிடந்தன.

அவன் மேலும் சம்பாதித்த பின்பே, செழிப்பு கண்ட பின்பே கல்யாண பேச்சு எடுக்கலாம் என்று அவனை நிராட்சண்யமாய் ஒதுக்கினாள்.

'கதவைச் சாத்தடி - கையில்
காசில்லாதவன் கடவுளேயானாலும்
கதவைச் சாத்தடி!'

"இது யார் பாடல் தெரியுமா? தேவரடியார் பாடல்! இப்போ சொல்வது இதைப் போலத்தான் இருக்கிறது-" என்றான் கடைசியில் முழு வெறுப்புடன்.

அதாவது அவள் தாசி போன்று பேசுகிறாளாம்!

கொதித்துக் கூவியது மறுவார்த்தை இல்லாமல் பிரிந்தனர்.



ஆனால் இப்போது ஜெய்ப்பூர் போவது அவனைத் தேடித்தான்.

முதலில் இவள் உடன்போக மறுத்தபின் யாமினி அவனிடம் அதிகம் முகம் கொடுத்து பேசவில்லை. எதேச்சையாய் வசந்த் பற்றி ஒருநாள் பேச்சு வர,

"அடடே... உனக்கும் அவரைத் தெரியுமா? அவர்கூட இப்போது ஜெய்ப்பூரில்தான்- பாஸ்கரனுடன் வியாபார பாகஸ்தர் தெரியுமா?"

"இங்கே மரக்கடை ஒன்றில் கணக்கு வழக்கு பார்த்து வந்த வசந்தையா சொல்கிறாய்?" கேட்ட இவள் இதயம் எகிறியது.

"அவரேதான். அவர் உருவாக்கிய சில மரவடிவங்களுக்கு வடக்கே, வெளிநாட்டில்கூட ஏக மதிப்பாம். கடல் கடந்து கொடி நாட்டியாச்சன்னா.. வருமானம் கோடியைக்கூட தொடும்" யாமினி பேசிக்கொண்டே போக,

"யாமினி.. நானும் ஜெய்ப்பூர் வரேன்" என்றாள் இவள் அவசரமாக.

## 4

அவசர முடிவெடுத்த மனம் பிறகு அல்லாடியது.

காலை லேசாக தண்ணீரில் வைக்கும் பூனை உதறிக்கொள்வது போல - 'இல்லையில்லை.. நான் சும்மாதான் சொன்னேன்' என்று உதறிவிட நினைத்தது.

ஆனால் வசந்தின் நினைப்பு முன்னைவிட அதிகமாய் அவளை ஆக்கிரமித்தன.. ஆசையூட்டின.

அவனை முதன் முதலில் சந்தித்தது கல்லூரியில்தான்.

வர்ணா தபால் மூலம் படிப்பைத் தொடர்ந்து

சென்றிருந்தான். சில சனிக்கிழமைகளில் கல்லூரியிலேயே இவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளைப் பல்கலைக்கழகம் நடத்தியது.

முதன்முதலில் அவள் அப்படிப் போனபோது ஏகத் தயக்கம். தலைவால் புரியவில்லை. எவரிடமும் விசாரிக்கவும் பயம்.

விடுமுறை நாளானதால் கல்லூரி வளாகம் காலியாய் கிடந்தது. பல்கலைக் கழகத்திலிருந்து தனக்கு வந்திருந்த கடிதத்தைத் துடுப்பு போல பற்றியபடி விழித்தவளைப் பார்த்த வசந்த் அருகே வந்தான்.

வாய் திறக்கவில்லை. ஆனால் விழிகளில் கேள்விக் கொக்கி 'என்ன பெண்ணே-ஏனித்தனை மிரட்சி?' என்பதாய்.

"இல்ல. வந்து வகுப்பு எங்கேன்னு?"

"அது நம்மைத் தேடி வராது. நாமதான் தேடிப் பிடிக்கணும்" என்றான் சிரிக்காமல்.

"இல்ல. வந்து 14-ம் எண் வகுப்பு- அப்படித்தான் எழுதி அனுப்பியிருக்காங்க" அவள் நீட்டிய காகிதம் படபடத்தது.

"அதுவா? பதிமூணாம் எண்ணுக்கு அருகேதான் இருக்கு"

விழித்து, பின் சுதாரித்தவள், "சரி, பதிமூணு எங்கே?"

"எங்கே கட்டினாங்களோ அங்கேதான் இருக்குது" என்றான் மிக இயல்பாக.

சிரிப்பதா அழுவதா என்று யோசித்து பின் மிக சிரமமாய் புன்னகைத்தாள்.

"ஆஹ்-அழுவீங்கன்னு நினைச்சேன்" சிரித்தபடி அவளை வகுப்புக்கு அழைத்துப்போய் சேர்த்தான்.

அவன் கேட்காமலேயே இங்கு சில மாணவர்களுக்குத்



தான் விடுமுறை நாட்களில் கணக்கும் விஞ்ஞானமும் கற்றுத்தர வருவதாகக் கூறினான்.

ஒருமுறை கல்லூரி வாசலில் மாணவர்களுக்குள் ஏதோ கலாட்டா. கிளற, முகம் வெளிற ஒடுங்கி நின்றவளை, வீடு வரை கொண்டுபோய் விட்டான்.

"அடடே, இதான் வீடா? எங்க சித்தி வீடும் இதே தெருதான்-நாலாவது வீடு."

"யார்_ லீலாவதி?"

"எங்கம்மாவின் தங்கை அவங்க லீலாவதி என் கஸின்"

பிறகு அடிக்கடி அவனை வீட்டில் பார்க்க முடிந்தது. இவளும் லீலாவதியோடு நெருங்கி இழைந்தாள். உறவு பின்னி பின்னி வளர்ந்தது. காலையில் மரச்சாமான்கள் விற்கும் பெரிய கடையில் வேலை. மாலையில் கற்க வருபவர்களுக்கு ஆசான் என்று அவன் சம்பாதித்தான்.

பெற்றவர்கள் கிராமத்தில். அங்கு ஓரளவு நிலபுலனுண்டு போலும். அவர்கள் கட்டியிருந்த சிறு ஓட்டு வீட்டில்தான் இவன் ஜாகை.

வாழ்க்கையை ஆரம்பிக்க அவன் இத்தனை போதுமென்று நினைத்தான். அவள் ஒப்பவில்லை.

அல்லாடிய மனதிற்கு முடிவுபோல இரயில் வேகமெடுத்தது.

இனி திரும்பி பார்ப்பதில் அர்த்தமில்லை. ஆக நிகழ்காலத்திற்கு இறங்கினாள்.

அவளுக்கு மர பெஞ்சுகள் இட்ட ரயில்கள்தான் பரிச்சயம். ராஜ்தானி எக்ஸ்பிரஸ் மாளிகை போலிருந்தது.

சன்னல்களுக்குத் திரைச்சீலை.

எங்கும் பதமான குளிர். அலங்கார விளக்குகள்.

சாம்பலும் கருநீலமுமான சொகுசு இருக்கைகள்... நீண்ட நடைபாதை. இடையிடையே வெகு சுத்தமாய் கழிப்பறைகள்.

பிள்ளைகள் இருவரையும் கழுவி சீர்படுத்தி உடை மாற்றி விட்டாள். தானும் கழுவித் துடைத்துக்கொண்டபின் உலகம் சற்று பிரகாசமானது போன்ற பிரமை.

இரயில் சிப்பந்தி ஒருவர் ஆளுக்கொரு மிருதுவான கம்பளியும் தலையணையுமாய் விநியோகித்தார். விரித்துப் படுத்தபோது சொக்கியது.

சற்று நேரம் அக்கத்தை அனுபவித்த குழந்தைகள் சற்று நேரத்தில் நழுவி, அக்கம் பக்கத்து குழந்தைகளைத் தேடிக் கிளம்பினர்.

தடுப்பிற்கு அப்பால் ஒரு பெருங்குடும்பம் கட்டுக்கட்டாய் பிரித்துப் போட - ஒரே ஆர்ப்பாட்டந்தான்.

மதிய உணவிற்கான பயணிகளின் தேவையைக் கேட்டு கூடக்கூட பரிமாறினர். பார்க்க நாவு ஊறினாலும் காரம் அதிகம்தான். தயிர் கலந்து பிள்ளைகளுக்கு ஊட்டி சமாளித்தாள் வர்ணா.

அவ்வப்போது பேசிய யாமினி, பெரும்பாலாக உறங்கி இடையிடையே புத்தகம் வாசித்தாள்.

அரைத் தூக்கமும் விழிப்புமாய் பிரயாணப்பட்டது சுக அனுபவம்தான்.

அடுத்த பெட்டிக்கு நடந்தபோதுதான், இடுக்கின் வழியே இரயிலின் மின்னல் வேகம் தெரிந்தது. மற்றபடி குலுங்கலே உணராத பயணம்.

போபால் நிலையத்தில் இரயில் பத்து நிமிடம் நின்றும் ஏற்றும் இறக்கினார்கள். இரும்பு வாணலிகளில் ஏதோ தயாரித்துக் கொண்டிருந்தது.

முட்டைகளை அடையாக வார்த்து அதில் இர



ரொட்டித் துண்டுகளைப் பொதித்து தந்தார்கள். ஆளுக்கொன்றாய் வாங்கிக் கொண்டபோது இரயில் அசைந்தது. பாய்ந்துபோய் ஏறினர்.

"போபால் கேஸ் கசிவு விபத்து நினைவிருக்கா யாமினி? மூணு, நாலு வருடத்துக்கு முன்னே?"

"ம்ம்... பயங்கரம். இப்போ நம்மை இரயில் விட்டுட்டுக் கிளம்பிடுமோன்னும் பயந்துட்டேன்."

இவள் வாழ்க்கையில் அந்த பயங்கர திருப்பம் நேர்ந்தது எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு?

ஐந்து ஆண்டுகள் முழுதாய்...

அப்போது வர்ணாவிற்கு பதினெட்டு வயதுதான். குழந்தைத்தனம் முற்றும் நீங்காதக் குமரித் தோற்றம்.

அனுபவம் அற்ற பருவம்... அப்போது எடுத்த முடிவு சரியாய் இல்லாமல் போனதில் அதிசயம் ஒன்றுமில்லை.

அந்தத் தப்பான முடிவிற்கான தண்டனையையும்தான் அனுபவித்தாயிற்றே... தனிமையில்... சதா வசந்தின் நினைவுகளுடன்...!

பெருமூச்செறிந்தாள் வர்ணா.

5

"ஊண்நிறைஞ்ச பெண்டாட்டியை வைச்சு வாழத் தெரியாதவன் நான். உனக்கும் ஒரு வாழ்க்கை அமைச்சுத் தராமல் போறேன்... நான் பைசாவுக்குப் பிரயோசனமில்லாதவன்மா..." அப்பா அரற்றலுடன்தான் கண்மூடினார்.

அரவிந்தனைப் பார்த்திருந்தால் அவர் மனம் நிறைந்திருக்கும்.

எல்லா வகைகளிலும் அரவிந்தன் தன் மகளுக்கு ஏற்றவன் என்று ஆனந்தமாய் புலம்பி தள்ளியிருப்பார்! அதற்கு கொடுப்பினை இல்லை.

கடைசி வருடம் அவர் வேலைக்குப் போகவில்லை. அலுவலகத்தில் எல்லோரோடும் சண்டை. தான் கையாலாகாதவன் என்ற தாழ்வுணர்ச்சியில் எகிறினார். எதிர்த்தார். நலமறிந்துப் பேசிய நண்பர்களையும் ஒதுக்கித்தள்ளினார்.

அக்கம் பேர் பற்றியும் அவலாதி பேசியதில் அம்மா வந்தது வாசிம் பிறந்த அமில வார்த்தைகள் வயிற்றையும் சேர்ந்து அரித்தது.

'நீபோ.. இதுவரை உனக்கு ஒரு காவக்காரனாக்கும் இருந்தேன். இனி அதுவும் இல்ல போலிருக்கே.. எனக்கப்புறம் உனக்க யாரு வரு குட்டி..'' புலம்பினார்.

அப்படியே குடிக்க ஆரம்பித்தவர்தான்.

கொஞ்சமாய் போட்டுவிட்டு வந்தவர் சத்தமில்லாது படுத்துத் தூங்கவே இவள் ஆரம்பத்தில் கண்டுகொள்ளவில்லை. அப்பா புலம்பாமல் இருந்தால் போதும் என்று எண்ணம்.

ஆனால் குடல் புண்ணைக் குடி கிளறிவிட்டது. அந்நொடிய பழக்கத்தைவிடவும் முடியாமல் மேலும் குடித்து வேதனையில் துடித்துக் கதறி.. கடைசியாய் அடங்கிப்போனார் அப்பா.

இவள் வாழ்க்கை அதே வீட்டில் அதேபோல தொடர்ந்தது தனியாய்த்தான்.

அதைத் தவிர்க்க பள்ளியில் மேலும் வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்த்தாள்.

பல புத்தகங்களைப் படித்து, கவிதைகளைத் திரட்டி



அவன் உருவாக்கிய ஒரு நாட்டிய நாடகம்தான் 'தாய் மண்ணே வணக்கம்.' வந்தே மாதரத்தின் தமிழாக்கம். சுதந்திரப் பொன்விழாவிற்காக அது மேடையேற்றப்பட்டபோது பிரமாத வரவேற்பு.

'இளம் சமுதாயத்தினரிடம் இந்தியான்னா.. 'ஆம்மா.. இங்கே லஞ்சம், ஊழல், சாதிக் கலவரம், மதக் கோளாறுகள், நாளும் அரசியல்'ன்னு முகம்சுளிக்கறாங்க. எந்தப் பரீட்சை எழுதி இங்கிருந்து அயல் மண்ணுக்குத் தப்பி ஓடலாம்னு துடிக்கிறாங்க. அவங்களைத் தட்டி எழுப்பிச்சுங்க உங்க நாடகக் கருத்து. தாய் மண்ணின் வளத்திற்கு தன்னை.. தன் திறமைகளை அர்ப்பணிப்பதே பெருமைன்னு விம்ம வைச்சதுங்க..' என்று எழுச்சியுடன் பாராட்டிய அரவிந்தனது அறிமுகம் அப்போது நேர்ந்ததுதான்.

பள்ளித் தாளாளர் குடும்பத்திற்கு நெருங்கிய அவன், பிறகு அடிக்கடி பள்ளிக்கு வந்தான். நேரே வர்ணாவைத் தேடியே வருவான்.

அது அவளுக்குக் கூச்சமாய் இருந்தாலும் கண்ணியமாய் பழகினான். ஐந்தாம் முறையும் அவன் அழைப்பைத் தட்ட முடியாமல், 'ஆரியபவன்' போய் காபி சாப்பிட்டாள்.

போகும்போதுதான் அவன் வாகனம் 'மாருதி எஸ்டீம்' என்பதைக் கவனித்தாள். வீட்டில் போய் இறக்கி விட்டான்.

அப்பா இருந்தால் மகிழ்ந்திருப்பார்.

நாலு இலட்சம் பெறுமானமுள்ள கார் வைத்திருக்கும் பையன் என்று துள்ளியிருப்பார்.

ஆனால் அவளுக்குள் எதுவுமே கிளறவில்லை.. லயிப்பு இல்லை. சாதாரண நட்பும் மரியாதையும் மட்டுமே அவன்பால். அதையும்கூட வளர்த்திருக்க மாட்டாள்.. ஆனால் இப்படியே ஆண்களைத் தவிர்த்து வந்தாள் தன்

எதிர்காலம் என்ற பதார்த்த கேள்வியைத் தனக்குள்ளே கேட்டபடியே அரவிந்தனுக்கு சற்று இடம் தந்தாள்.

'இவன் நல்லவன் - அன்பு காட்டுபவன்.'

'இவனோடு வாழ்க்கை சுலபமாய் போகும்' என்று தனக்குத்தானே உபதேசித்தாள் - 'பழகு'. புரிந்துகொள். பிறகு முடிவெடு' என்று.

தீர்க்கமே முடிவெடுக்கும் கட்டம் வந்தது.

வர்ஷாவைத் தன் வீட்டிற்கு அழைத்துப்போய் அரவிந்தன் தன் தாயாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தபோது அவன் நோக்கம் புரிந்தது. அந்த அம்மாளும் பிரியம் காட்டினாள்.

ஆக இது மிகப் பாதுகாப்பான கூடு. ஆனால் சம்மதம் சொல்ல முடியவில்லை.

அவன் தாயார் பூஜை அறைக்கு அழைத்துச் சென்று பூவும் குங்குமமும் வைத்து அனுப்பியபின், காரில் திரும்பும் வழியில் அரவிந்தன் அச்சிறு பெட்டியை நீட்டினான்.

"என்.. என்ன இது?"

"சம்பிரதாய கேள்வி எல்லாம் கேட்காதே. சம்பிரதாய பதில் சொல்ல எனக்கு வெட்கமாய் இருக்குது" என்று சிரித்தான்.

"என்னால் ஏதும் அனுமானிக்க முடியவலை, அரவிந்தன்"

"நான் உன்னை கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன். அதற்கு அச்சாரமாய் இந்த மோதிரம்."

வாகனத்தை சாலை ஓரமாய் திருப்பி, நிறுத்தினான். சாலை ஒருசோடியம் விளக்கு ஆவலுடன் உள்ளே எட்டிப் பார்த்தது.

வர்ஷா அம்மஞ்சள் ஒளியில் தங்கச் சிலை போல



தெரிந்தாள். விழி இமைக்க மறந்தவன் போல அவளைப் பார்த்தவன் டப்பாவின் சிறு மூடியை விலக்கினான்.

தீக்கங்கு போன்ற சதுர மாணிக்கக் கல்.

அது அவளை எச்சரிப்பது போல கண்சிமிட்டியது.

"நா... நானும் உங்ககிட்டே பேசணும்னுதான் நினைச்சேன் அரவிந்த்."

"சொல்லு முதல்ல இதை உன் விரல்ல போடறேன். பிறகு எதுவானாலும் சொல்லு."

"இல்ல... இதை நான் ஏத்துக்க முடியாது.."

அவன் முகம் இறுகி இருண்டது.

"அதற்கான காரணத்தைச் சொல்றேன். நாம பழகி நாலு மாதங்கூட ஆகலை அரவிந்த்."

"யுகம் பழகினாற்போல எனக்கொரு உணர்வு.."

"குறுக்கே பேசாதீங்களேன்.. தயவுசெய்து.."

தொடங்கியவள், ஐந்து வருடங்களுக்கு முன் வசந்துடன் நேர்ந்த சந்திப்பு, பழக்கம், பிரிவு பற்றி சொன்னாள். அவன் முகத்தைத் தவிர்த்தாள். அவனும் குறுக்கிடவில்லை. ஆனால் யாமினியோடு தான் ஜெய்ப்பூர் போகப்போவது பற்றியும் அங்கு வசந்த் இருப்பதாய் அறிந்ததாலேயே தான் அம்முடிவிற்கு வந்தது பற்றியும் கூற, அவன் தாங்காமல் சீறினான்.

"ஐந்து வருடத்துக்கு முந்தையக் காதல் இன்னும் உயிரோடு உண்டா, இல்லையா என்று அறியவா? அநாவசிய விளையாட்டு இது வர்ஷா."

அவன் குரலில் இதுவரை இத்தனை கோபம், வருத்தத்தை அவள் கேட்டதில்லை.

"எனக்கு நிச்சயமாகத் தெரிய வேணும் அரவிந்த்."

[illegible], காலம் நீரா என்று?"

"அப்படியே வையுங்க. இந்த இடமாற்றம் எனக்கு அவசியந்தான். என் மனசை நானே ஆராய... உணர ஒரு அவகாசம்."

"அதுவரை இந்த மோதிரம் உன் விரலில்... என் ஞாபகமாய் இருக்கட்டுமே."

"வேணாம்." விரல் மடக்கிக் கொண்டாள்.

"ஏன்... அவன் இதைவிட அழுத்தமான முத்திரை ஏதும் உன்னில் பதித்திருக்கிறானா?"

இது எரிச்சல் சீறல்!

அவள் அதற்குப் பதில் தரவேயில்லை.

## 6

மதுரையில் இரயில் ஏறும்வரை அரவிந்தன் தாயைத் தொலைத்த குழந்தையின் பாவனையோடு பாவமாய் அவள் பின்னே அலைந்தான்.

"மன்னிச்சிரு வர்ணா. நான் அப்படிப் பேசினது மடத்தனம். இத்தனை உண்மையாய் என்னிடம் முழு விவரத்தையும்... நான் கேட்காமலேயே... சொன்ன நீ பவித்ரமானவன்னு உணராமல்... என்னை மன்னிச்சேன்னு சொல்லு."

"போறாலை பட்ட அளவு உங்களுக்கு எம்மேல அன்பு இருக்கு அரவிந்தன்... அவ்வளவுதான். ஆக எதையும் பெரிசு படுத்தாதீங்க. இந்த மூணு வாரத்தில்... உங்களுக்கு ஏதாவது நல்ல வரனாய் அமைஞ்சா..."

"என்னது!"



"அதாவது உங்க அம்மா நல்ல பெண் பார்த்துத் தந்தால் நீங்களும் மறுபரிசீலனை செய்யுங்க..."

"தயவுசெய்து நீ கிளம்பும்மா" அவசரமாய் கைகூப்பி வழியனுப்பினான்!

தன் பேச்சும் நடத்தையும், சிறுபிள்ளைத்தனமோ, சற்று முட்டாள்தனமோ என்ற அச்சமிருந்தது. வேறு ஒருத்தியாய் இருப்பின் ஒழுங்கு சுந்தரியாய் அரவிந்தனை மணந்து-கொண்டு புது வாழ்வு அமைத்திருப்பாள்.

அரவிந்தனுக்குப் பணமிருந்தது. மதுரையில் குளிர்பதனம் செய்யப்பட்ட பெரும் கடை உண்டு. ஆக செல்வாக்கு, வெளிநாட்டுப் படிப்பு, அழகு, பண்பு... இத்தனையும் அமைந்தவனை கடாசிவிட்டு இவள் யாரைத் தேடிப் போகிறாள்?

ராணிபோல ஆள்வதை விட்டுவிட்டு எதை யாசகம் பெறப் போகிறாள்?

ஆனால் முட்டாள் மனசு திமிறுகிறதே...

ஐந்தாண்டுகளுக்கு முன் விறைத்துக்கொண்டு கிளம்பியவனையே எண்ணி ஏங்குகிறதே!

ஒருவேளை வசந்திடம் நேரே போய் நின்று தான் அன்று அவனை ஒதுக்கியதற்காய் மன்னிப்பு கோரினால் இத்தவிப்பு அடங்கிப் போகுமா?

போய்தான் பார்ப்பது-மனோதத்துவத்தில் நாம் மிகப் பயப்படும் இடத்திற்கே நம்மை அழைத்துப்போய் - 'பாரேன், ஒன்றுமில்லை. இதற்கா இத்தனை பயந்தாய்?' என்று அச்சம் அவிழ்ப்பது போல.

ஐந்து வருடங்களுக்கு முன்பு சின்ன சின்ன ஆசை' பாடல் பிரபலம். போகும்முன்பு வசந்தன் - 'உனக்கெல்லாம் பெரிய பெரிய ஆசைகள் தான்' என்று சீறிவிட்டுப் போனான்.

இதை அக்காளையும்விட... வர்ணா மறக்க முயன்ற, நினைக்கவே விரும்பாத மற்றொரு விசயமும் உண்டு.

அது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வசந்தனின் திருமணம் தான்!

தற்செயலாய் அவனது செந்தி இதுபற்றி பேச்செடுக்க, விதிர்த்து வெறுத்துப்போனாள் இவள்.

"ஏ, என்ன... பொண்ணு யாரு?"

"சொந்த அத்தை மகள்தான். அவன் பாட்டிக்கு இந்தக் கல்யாணத்துல ரொம்ப ஆசை. பொண்ணும் பிள்ளையும் விபரமா ஆனப் பாட்டி 'இதோ சாகப்போறேன், அதோ வேகப்போறேன்னு' எல்லாரையும் சரி பண்ணிட்டாங்க. வந்து வெறிபிடிச்சவனாட்டம் சதா வேலை வேலைன்னு திரியும், 'சரி இவனுக்குக் கால்கட்டு போட்டா தம்பி பொறுப்பு வழிஞ்சது'ங்கற எண்ணம் எங்க அக்காளுக்கு."

"கல்கல்யாணம் எங்க?"

"தேனிதான் எங்க பூர்வீகம். ரெண்டு வீடும் ஒன்னுக்குள்ள ஒன்னுங்கறதால மொத்த குடும்பமும் வந்துரும். லீலாவதிகூட கல்லூரி விடுதிலேருந்து நேரே தேனி வந்துருவா. நீயும் வாயேன் வரு."

வருவதா... அக்கல்யாண காட்சியைக் காண்பதா? மனதுக்குள் பொத்தி வைத்து, தினம் கற்பனையில் கண்டு மகிழ்ந்தவனை வேறொருத்தியுடன்... தன் கண்கள் அவிந்து இதயம் வெடித்துவிடாதா?

அன்றிலிருந்து திருமணநாள் வரை தினம் அழுதாள். அந்நிகழ்வு கல்யாண இரவு முன்னில் படுத்துப் புரண்ட பாதிப்பு.

ஆனால் அதன்பிறகு மனதை இறுகக் கட்டி வைத்தாள். வசந்தன் இப்போது வேறு ஒருத்தியின் சொத்து- அவனை



நினைப்பதோ... உருகுவதோ தப்பு- ரொம்பத் தப்பு.

ஆனால் அந்நிலையும் ஆறே மாதங்கள்தான். இவளைத் தேடி வந்த லீலாவதி விபரம் சொல்லும் வரைதான்...

'கல்யாணம் அப்படி விமர்சையாய் நடந்துச்சு வரு- ஆனா யார் கண்ணுபட்டதோ இப்படி ஆயாச்சு."

"எப்படி?"

"வசந்தண்ணனும் அண்ணியும் பிரிஞ்சுட்டாங்க!"

"ஆ- ஆறு மாசத்திலேயா?"

"பேரன் பேத்தி கல்யாணத்தைப் பார்த்த குஷியிலிருந்த பாட்டி இப்போ படுத்தபடுக்கைதான்."

"என்னாச்சு?"

"தான் சின்னப் பொண்ணாம். ஆனா விபரம் பெரியவங்களுக்கும் தெரிஞ்சது போலத் தெரியலை!"

## 7

பள்ளியிலும் உடன் பணிபுரிந்தவர்களில் வர்ணாவிற்கு பிரத்தியேக தோழி யாருமில்லை. அனைவரிடமும் இனிமையாய் பழகுவாள் உதவுவாள் என்றாலும் ஒட்டுதல் ஏற்படவில்லை.

அவர்களது நாவு அலகம், புருஷன், மாமியார், சேலை, உறவு, வேலைக்காரி பிரச்சினைகள் அவளுக்கு அந்நியம்.

'இப்ப எதுக்கு இத்தனை விலையில் சேலை' என்று அதட்டுபவர் இல்லாததால் வரு தோணும்போது சேலை வாங்கிக்கொள்வாள் சுதந்திரமாய்.

இப்பேச்சுக்கள் ஏனோ ரசக்குறைவாய் தோன்ற, அவற்றிலிருந்து ஒதுங்கவே இவள் பள்ளி விடுதியின்

[illegible] அறைக்குப் போய்விடுவாள்.
[illegible] காரணம் ஆயிரம் பிரச்சினைகள் [illegible] குடும்பம் தனக்கில்லையே [illegible] இருக்கலாம்.

[illegible] பேசவும் வாய்ப்பில்லாமலே [illegible] பிடித்துப்போனது. முதன்முறை [illegible] பார்த்ததுமே [illegible] வர்ணா 18 வயதினளாய் இருக்கும்போது [illegible] தொடர்ந்தபடி [illegible] வர்ணாவை [illegible] அம்மா [illegible] அவர் பெயர் [illegible] 'அம்மா' [illegible] குறையின்றி [illegible] இடமிருந்தது.

அடிக்கடி அவர்களுக்குமாய் சேர்த்தே சமைத்து எடுத்துப் போவாள்.

இன்றும் ரசித்து உண்டவர் - "அடடே... சேமியா பாயசமா? தொட்டுக்க மல்லிச் சட்னி. உன் ஆம்படையான் அதிர்ஷ்டம் செய்தவன்" பாராட்டினார்.

"இப்போதைக்கு அதிர்ஷ்டமெல்லாம் உங்களுக்குத்தான்மா."

"அது சரி, எப்போ [illegible]?"

"தெரியலைம்மா. எனக்கு கல்யாணத்தில் நோக்கமில்லை."

"அரவிந்தன் இந்த வாரம் மட்டும் மூணு தடவை இங்கே வந்தாச்சு. அதுவும் உன்னைப் பார்க்கவே!"

"ஆமா... எனக்கு அவர்மேல... காதலும் ஏதும் வரலேம்மா."

"வேணுமானால், நானும் அந்த உணர்வைக் கொஞ்சம் [illegible] நினைக்கிறேன், வர்ணா. ஒரு



ஆளைப் பார்த்த கணமே பெண் கண்கள் படபடக்க, கால்விரல்கள் கோலமிட... இதழ்கட்டைக் கடிக்க."

சிரிப்பில் இவருக்குப் புரையேறியது.

"ஆமா... அவர் எப்போ வருவார்னு சின்ன தவிப்பிருக்காதா, வரலைன்னா நோகாதா... பார்த்தால் பூரிக்காதா?"

"இந்த பூரி, வடை... எதுவுமே அரவிந்தனிடம் உனக்கு ஏற்படலையா?"

புன்னகையுடன் தலையாட்டினாள் வர்ணா.

"உன் தாயைப் பத்தி என்கிட்டே சொல்லியிருக்கே வர்ணா. அந்த மனக் காயத்தினால்கூட... உனக்கது போன்ற இன்ப உணர்வுகள் ஏற்படாமல் போயிருக்கலாம்."

"அந்த இன்பங்களை என் மனசு உணராமல் இல்லேம்மா..." என்றவள் மென்மை [illegible] தேர்ந்த, மனித நேசத்தை விவரித்தாள்.

"அத்தனை பிரியத்தையும் காதைக் காரணம் காட்டி அழிச்சிட்டியா?"

"ஆமாம்மா. அந்த வெறுப்பிலே வெளியூர் போனவர்தான். பிறகு ரெண்டு வருடத்தில் அவருக்குக் கல்யாணம்கூட நடந்திச்சு."

"பெத்தவங்க அந்தப் பெண்ணை வலுக்கட்டாயமாய் கட்டி வைச்சிருப்பாங்க." வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் வர்ணா.

"ஆமா ஆமா அந்த பந்தமும் இருக்கலை. இறந்திட்டிருக்க."

"அதனால இப்போ உனக்கு அவர்மேலே கோபம்."

"எனக்கு எப்பவுமே அவர்மேலே மட்டுந்தான்மா கோபம்!" பெருமூச்செறிந்தாள் வர்ணா.

"வானத்துக்கு ஒரே நிலவுதானே"

"உங்களுக்கு புரியறதில் எனக்குத் திருப்திம்மா."

"புரியாமல் என்ன... எல்லோரும் இந்த வயசைக் கடந்துதான் வர்றோம்."

"அப்படின்னா..."

"எனக்கும் காதல் அனுபவம் உண்டு வர்ணா. அப்போ இள வயசு. ஆசை இருந்த மனசில் நிறைய பயமும் இருந்தது. வீட்டில் அதுபற்றி பேச்செடுக்க முடியாத அளவிற்கு. வீட்டில் தேடி எடுத்த வரனையெல்லாம் கழிச்சுக்கட்டினேன். 'நான் வந்து உங்க வீட்டில் பேசறேன்'னு சொன்ன என்னவரையும் அடக்கிட்டேன். பயமே சத்ருவாயிடுச்சு.

அடுத்தது காலம். அவரும் எத்தனை காலம்தான் வெறும் காதல் பார்வையோடயே கழிப்பார்? ஆனா எனக்கு வேற ஒருத்தரோடு வாழ்வு அமைச்சுக்கற எண்ணம் துளிர்க்க வேயில்லை. நிலா தேயும் வளரும்... ஆனால் வானத்தை மாற்ற முடியுமா? வானம் அதுவேதானே!"

"உண்மைதான். அப்போ நான் இப்படி மறுக்கறதில் தப்பில்லை... இல்லையாம்மா? அவரை மறக்க முயற்சி செய்யணுமா?"

"கடவுள் ஏன் ஆண், பெண்ணுன்னு படைக்கணும்? ஒரு முழுமையின் இரு பாதி அவங்க. அவங்க இணையறதுதான் முறை. முழுமை."

கன்னங்களை உள்ளங்கையில் பதித்துக் கவனமாய் கேட்டிருந்தாள் வர்ணா.

"பைபிளின் ஆரம்பமே கர்த்தர் எப்படி வானத்தை, பூமியை அதில் உள்ளவை அத்தனையும் உண்டாக்கினார் என்பதுதான். ஆணை மட்டுமே முதலில் உருவாக்கியவர் 'மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை



அவனுக்கு உண்டாக்குவேன்'னு முடிவு செய்தார். பிறகு ஆணை உறங்கச் செய்து அவன் விலா எலும்பு ஒன்றை உருவி அதிலிருந்து உருப்பெற்றவள்தான் பெண்."

"ஓகோ..."

"அதாவது அவனுடன் ஒரே மாம்சமாயிருக்கும் துணை. இதற்கான ஒரு புதுமை விளக்கத்தைப் போன வாரம் வாசித்தேன். புதுமைப் பெண்களுக்குப் பிடித்தமான விளக்கம்."

"சொல்லுங்கம்மா"

டிபன் சம்புடங்களைக் கழுவித் துடைத்தபடி கவனித்தாள் வர்ணா.

"கர்த்தர் பெண்ணை உருவாக்க ஆதாமின் தலையிலிருந்தோ காலில் இருந்தோ எலும்பை உருவவில்லை. அவன் நடுப்புறத்திலிருந்து உருவியதிலும் ஒரு அர்த்தமுண்டு. அதாவது பெண்ணை, ஆணுக்கு இணையாக, இசைந்த துணையாக இருக்கும் பொருட்டே உருவாக்கினார். அவளை ஆளவோ, அடிமையாக் கிடக்கவோ அல்ல என்று..."

"பலே! அர்த்தமுள்ள கருத்து. ம்ம். ஒன்னு கேட்கலாமா அம்மா?"

"கேளேன்."

"தாம்பத்யத்தை அழகாய், தெளிவாய் புரிஞ்ச நீங்க ஏம்மா கல்யாணம் செய்துக்கலை..."

"நான் தனியே நின்னது தப்பு. அதையே நீயும் செய்ய வேண்டாமேன்னுதான் இத்தனை விளக்கமும்!"

அன்றிரவு வர்ணா அச்சம்பாஷணையை மீண்டும் மனதுக்குள் அசைபோட்டாள்.

அவளுக்குள் பாதியாய் கிடப்பது போன்ற தவிப்பு

இணையுடன் சேரும் ஆத்திரம் உள்ளே கனர்ந்தது— இல்லையெனில் இம்சையாய்.

## 8

மறுநாள் காலை இரயிலில் பரிமாறப்பட்ட டிபன் முள்ளிருந்தும் அதிக காரம்தான்! ஆனால் மொத்தம் நாலே நிறுத்தங்கள் என்பதால் சில பிஸ்கட், பழங்களைத் தவிர அதிகம் வாங்க முடியவில்லை.

குழந்தைகள் சுற்றிலும் கிடைத்த புது சிநேகிதக் கொண்டாட்டங்களில் சாப்பாட்டு, தூக்கத்திற்கு அதிகம் பஞ்சமில்லை. நெய் சொட்டும் இனிப்புகளைச் சாப்பிட பழகிக்கொண்டனர்.

இரண்டு வயது பனி சதா கொழுக சிணுங்க ரெஜினா தூக்காமல் அணைத்து சற்று நேரம் கொஞ்சி மணிச்சத்தம் கேட்கவில்லை என்றாலும் இவன் பதறிப்போய் பார்த்து வருவான்.

ஆனால் யாமினி குழந்தைகளைப் பற்றி கவலையே படவில்லை. அதற்குத்தான் வர்ணா இருக்கிறாளே.

யாமினியை பெரிய சிநேகிதம் எனப் பீற்றிக் கொள்ள முடியாது. காரியம் ஆகவேண்டுமானால் சிரித்து மற்ற பொழுது காணாமல் நடக்கின்ற ரகம்.

பள்ளியில் பலர் ஆச்சரியமாய் சற்று பாவமாய் கேட்டார்கள் 'என்ன யாமினியோட டைக்கே போறியாமே!'

'இங்கேயே ஒருநாள் பார்த்தா நாலு நாள் பார்க்காம போவா. அவளை நம்பி ஜெய்ப்பூரா?' என்று சில வருத்த விசாரிப்புகள் நடந்தன. ஆனாலும் வசந்தனை சந்திக்கும் ஆசை உந்தியதே!



"டெல்லி 'பிரகதி மைதான்'னில் நடக்கும் கண்காட்சியில் வசந்தனின் மரவேலைகள் சிலதும் இடம்பெறும். ஆக அவரும் அங்கிருப்பார். ஜெய்ப்பூரின் மரவேலைப்பாடு அற்புதம்."

"ஆமா. நான்கூட போன மாசம் இங்கே நடந்த ஒரு வடக்கத்திய கண்காட்சிக்குப் போயிருந்தேன். அபார வேலைப்பாடு... ஆனால் முக்காலி நாம உட்கார்ந்தா முணங்குது— நாற்காலி ஆடுது."

"அதேதான். உத்தரவாதமில்லாத மரம், வேலை. ஆனா, அதில் நுணுக்கமாய் வேலைப்பாடு செய்திருப்பாங்க."

"என்ன பிரயோசனம்? கண்ணு நிறைஞ்சாலும் பொருள் பயன்படணுமே."

"அதில்தான் நம்மாளுங்க திறமை வருது. அங்குள்ள மரச் சாமான்கள் மேம்போக்கானவை. தரமற்றவை. அழகோடு அவற்றையே உழைக்கத் தக்கவையாக இவர்கள் உருவாக்கிறார்கள். விலை கொஞ்சம் அதிகம் போனாலும் தலைமுறை தலைமுறையாக உழைக்கக்கூடியதை விரும்பி வாங்கறாங்களாம். வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி ஆகப் போகுது."

"அங்கில்லாத மேசை, நாற்காலியா?"

"எத்தனை இருந்தாலும் நம்மூர் வேலைப்பாடு தனியில்லையா? அதுவும் ஜெய்ப்பூர் அரண்மனையிலிருந்துங்கூட இவர்கள் சில வளைவுகள் வடிவங்களைத் தங்கள் படைப்புகளில் கொண்டு வந்திருக்காங்க. அபார நுட்ப வேலை. அதுக்கு வெளிநாட்டில் ஏக வரவேற்பு - ஏக விலை!"

"அது சரி. கடல் கடந்துவரும் விசயங்களுக்குத் தனி மவுசுதான். முன்னே நாமும் சிங்கப்பூர் சேலைன்னா எப்படி ஆசைப்படுவோம்!"

"அதேபோலதான் அயல்நாடு போகிற நம்ப ஆட்கள் பெட்டி கொள்ளாம மசாலா, வடகம், பட்டு என்று அள்ளிப் போறது. போலிப் பூச்சரம்கூட முழும் முழுமாய்."

"பாசமில்லாத அது எதுக்கு யாமினி?"

"ஏங்க முகர்ந்து பார்க்கறா? பார்வைக்கு மல்லிகை; கனகாம்பரச்சரம் போலவே இருக்குது. பட்டும் பொட்டுமா அலங்காரம் செஞ்சுக்கறப்போ, பூ இல்லாத சோபிக்காதே. தமிழ் வீட்டு விருந்துகளில் கூட பூரி, வடை.. தோசை சம்பாஜு மணக்குமாம்."

தாம் மண்ணைவிட்டுப் போனாலும், போகுமிடத்தில் தாயகம் போன்ற பிரமையை உருவாக்கும் முயற்சி - பத்தாயிரம் மைல் தொலைவைக் கடந்தபிறகும் மாறாத நேசம்.. வாசாரம்.

இங்கு தோற்ற தன் நேசம்.. இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் ஜெயிக்குமா?

கண்மூடி கடவுளிடம் கேட்டாள் - கசிந்து வந்த இந்துஸ்தானி இசை விநோதமாய் ஒலித்தது - இனிமையாய், சற்றே சோகமாய்!

## 9

வசந்தின் திருமணம் தோற்று துண்டுபட்டதைக் கேட்ட வர்ணா துவண்டுபோனாள். துக்கத்தில் நிறைந்தாள்.

நேசிப்பவர்களின் இழப்பு எல்லாம் தனக்கே நேர்ந்தது போல துடிப்பதுதானே நேசம்!

காதல் கைகூடாத வேர், காதலி எழுதிய கடிதங்களைப் பிறர் முன் பரப்பி நாறடிப்பது எப்படி சாத்தியம்? அவளுக்கு புரியாத விஷயம் அது.

புரிந்தபோதுதான் அதெல்லாம் காதலோடு சேர்ந்து இல்லை என்பது விளங்கியது. அது ஆசை அல்ல- ஆணவ



தன்னது என்று இறுமாந்திருந்த பொருள் கைநழுவிப்போன ஆங்காரம்!

ஒருநாள் மாலை லீலாவதி வீட்டில் வசந்தனது விவாகரத்தைப் பற்றி பேச்செடுத்தாள்.

"அவன் வேலை வேலைன்னு அலையறது அவளுக்கு ஆகலையாம்."

"பெண்ணுங்க கைநிறைய காசு கொண்டுவர்றவனைத்தானே மதிப்பாளுங்கங்கறான் - வசந்தன்னன்."

இவளுக்குள் 'சுருக்'கென்று குத்தியது.

"அதுமட்டுமல்ல.. அவளுக்கு முன்னையே வேறொரு பையன்மேல் நோக்கம் இருந்திருக்கும் போல.. நம்ப பாட்டியின் தொல்லை தாங்காமல் தான் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கா."

"நம்ப பாட்டியும் கொஞ்சமாவா நொச்சு பண்ணிச்சு?"

"அவனென்ன நொச்சு பண்ணினான்..? மேம்போக்கா நடந்ததுதான் அவளை இம்சைபண்ணியிருக்கும்.. போல.."

"ஆக அவளுக்கு இவனோட மனசு ஒப்பலை."

"நம்ப வசந்த் அறிவு, அழகுக்கு இப்படி சோதனை வரவேணாம். கட்டினவ 'நீ வேண்டாம்'கறது வேதனையல்ல?"

"இவளும் ஒட்டாமயேத்தான் கிடந்திருக்கான். ரெண்டு பேரும் கொஞ்சம் சிரத்தை எடுத்து கிட்டவந்திருந்தா சிக்கன்னு இறுகியிருக்கும்."

"நம்ப ஊரிலே குழந்தைதான் பசை. அதுலதான் பெரும்வாரியான குடும்பங்க ஒட்டி நிக்குது."

மாறி மாறி அவர்கள் பேசியதில் இவளுக்கு விரிசல்விட்ட அக்குடும்பத்தின் நிலை ஓரளவு பிடிபட்டது.

அவர்களுக்குக் குழந்தை பிறந்திருந்தால்... நிலைமை

நேரிருக்கக்கூடும். அவளைப் போலவே சதுர முகம், பளபளக்கும் கருவிழிகள், பச்சரிசிப் பற்கள் என்றொரு குட்டிப்பெண் உருவாகியிருந்தால் அவன் நிம்மதியான ஒரு குடும்பஸ்தனாகி இருக்கக்கூடும்.

"ஏண்டி ஒரு உன் கண் கலங்கிடுச்சு?"

"இரண்டும் வசந்தன் பழக்கந்தானே.. அந்தப் பாசம்."

அவன் காட்டிய பாசத்தில் பழுது சொல்ல முடியாது. இவள் மறுத்த பிறகும் பின்னேயே வந்தானே..

"உடனே கல்யாணம் வேண்டாம் வர்ணா. எங்க வீட்டில் பெண் பார்க்க பேச்சு ஆரம்பிச்சாச்சு. எனக்கு உன்னைத் தவிர வேற ஒருத்தியோட என்னைச் சம்பந்தப்படுத்திப் பேசறதுகூட வெறுப்பாயிருக்கு. லீலாவதி, நானு நாளைக்கு ஒரு போட்டோவைக் காட்டி..

"என்னா, இது ஜோர் இல்லை- எனக்கேத்த அண்ணி"ன்னபோது மகா எரிச்சல் கிளம்புது. 'தறுக்'குன்னு குட்டிக்கூட செஞ்சேன். "எனக்கு வர்ணாதான்"னு ஒரு முடிச்சு ... இல்லை.. முதல்ல ஒரு நிச்சயம் பண்ணியாச்சுன்னு இதுமாதிரியான பிரச்சினை வராதில்லையா- உன் சம்மதம் தெரிஞ்சபிறகுதான் நான் எங்க வீட்டில் இதுபத்தின பேச்செடுக்கணும்" என்றானே.

"இந்த நிலைமையில் கல்யாணப் பேச்சே வேணாம் வசந்த். அது சந்தோஷமாயிராது."

"சரி. ரெண்டு வருடம் போகட்டும். நீ படிச்சு முடிச்சதும்கூட நானும் ஏதாவது சம்பாதிக்கிற வழியைப் பார்க்கிறேன்."

"முடியுமா?"

"முடியலைன்னா நம்ப கல்யாணம் இல்லைங்கறியா?"

அவன் பார்வை இடுங்கியது. அதுவரை முகத்தில் தெரிந்த இதமும் இன்பமும் கலைந்துபோயின.



இப்போது அவனைத் தேடி இவள் ஓடுவது- வசந்த் நானுதாக பார்த்துவிட்டதாலா..?

'இல்லை..' மனம் அலறி மறுத்தது.

ஆனால் அவன் அதை நம்ப வேண்டுமே... இந்தக் கவலையோடு டெல்லியில் இறங்கினாள் வர்ணா.

## 10

இதுவரை தமிழ் குரல்களோடு கலந்து காதில் விழுந்த இந்தப் பேச்சுக்கள் இப்போது கலப்படம் நீங்கின. எங்கும் 'கரபுரா' என்ற புதுமொழி புரியவில்லை... ஒரே மலைப்பாயிருந்தது.

வித்தியாசமான உடைகள்.. வாசனைகள்..

பாஸ்கரன் இவர்களைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக ஓடிவந்தான். பிள்ளைகளை அள்ளிய சாக்கில் அப்படியே மனைவியையும் அணைத்துக் கொண்டான். யாமினியின் நெற்றியில் முத்தமிட்டாற் போலகூட தோன்றியது வர்ணா அவசரமாய் பார்வையின் திசையைத் திருப்பினாள். ஆனால் அதே பார்வை வசந்தனுக்காய் துழாவலும் இல்லை..

ஏமாற்றம்தான்- அவனைக் காணோம்.

ஒருவேளை இவள் கண்ணில்படாதே போய்விடுவானோ..? நெஞ்சை அடைத்தது; கண்கள் கரித்தன.

பாஸ்கரன், மரியாதை நிமித்தம் இவளிடம் புன்னகையுடன் பேசிக்கொண்டான்.

"நீங்க வர சம்மதிச்சதில் எனக்கு மகிழ்ச்சி வர்ணா. இல்லைன்னா யாழு கிளம்பியிருக்கவே மாட்டா.' இந்த

றெண்டு வாரமும், வர்ற புது வருடத்தையும் நான் தனிமையில் கழிச்சிருக்கணும்."

ஒட்டலுக்குப் போனார்கள்.

இதமான குளிரில் இருந்தது தலைநகரம்.

விசாலமான சாலைகள்.

அவற்றின் இருபுறமும் பசுங்குடைகளை விரித்து நிற்கின்றாற்போல மரங்கள்.

பழமையும் புதுமையுமான கட்டிடங்கள் மாறி மாறி..

விடுதி அறை நவீனமாய் பெரிதாய் இருந்தது.

"நீங்க குளிச்சு உடை மாத்திடுங்க. நான் போகணும். கண்காட்சி முடியும் நேரம் என்பதால், இந்நேரம் 'ஆர்டர்' கிடைக்கலாம். விட்டுடக் கூடாதே" என்றபடி கிளம்பினான் பாஸ்கர்.

"அப்போ நாங்க?"

"டாக்ஸி இதோதான் நிற்குது. தயாரானதும் ஏறி வந்திடுங்க. கண்காட்சியைப் பார்த்து, அங்கேயே இரவுச் சாப்பாட்டையும் முடிச்சிடலாம். நாளைக்கு ஜெய்ப்பூர் பயணம்."

"ரொம்ப அலுப்பாய் இருக்குது வர்ணா" என்று முதலில் குளித்து உடை மாற்றிய யாமினி, '10 நிமிடம் கண்ணை மூடறேன்' என்று படுத்துவிட்டாள்.

வர்ணா குழந்தைகளைத் தயார் செய்துவிட்டு அவசரமாய் [illegible] மாற்றிக் கொண்டாள்.

வாடகைக் காரில் ஏறிய குழந்தைகள் விழிதட்டாது வேடிக்கை பார்த்தனர். ஒட்டுநரான 'சிங்'கின் தாடி தொப்பியைப் பற்றி தங்களுக்குள்ளேயே ஏதோ கண்ணாலான பேச்சு, சிரிப்பு.



'பிரகதி மைதான் மகாவிஸ்தாரம்.'

நடுவே அகல செயற்கை ஏரி. அதைச் சுற்றிலும் பல வர்ணக் கொடிகள் சோம்பலாய் காற்றில் அசைந்தபடி..

கண்காட்சி மையத்தினுள் நுழைந்தவர்களுக்கு எதைப் பார்ப்பது என்பது புரியாத மயக்கம்..

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நவீன வீட்டுப் பொருட்கள் ஒருபுறமென்றால், அதைப் பார்க்க வந்த நாகரீகக் கூட்டம் மறுபுறம்!

லட்சங்களைக் குறித்த விலைப் பட்டியலை சர்வ அலட்சியமாய் பார்த்து நகர்ந்த உயர்மட்ட மக்கள். சர்வதேச 'சென்ட்'களின் நறுமணம் கனமாய் காற்றில் கலந்து கிடந்தது.

எல்லார் மீதும் வைரம், முத்துக்களின் ஜொலிப்பு.

யாமினியே பிரமிப்பில் சற்று ஒடுங்கியே நடந்தாள் எனில் வர்ணாவைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

எளிய வாழ்வும் சராசரி மக்களையுமே பார்த்திருந்த அவளுக்குக் கண்களை இருட்டியது.

எந்த மாய லோகம் இது.. என்ன திகைப்பு.

பத்துக்கு பதினைந்தே அடி அளவில் இருந்த பாஸ்கரின் காட்சிக்கூடம் வசீகரமாய் இருந்தது.

புது மோஸ்தர் அலங்கார கண்ணாடி மேசை, கட்டில், வெண்கலமும் தேக்கும் கலந்து இழைத்த விளக்குத் தண்டு என்று.. ஆனால் இங்கும் அவளுக்கு ஏமாற்றம்தான். வசந்தனைக் காணோம்.

அவனைப் பார்த்து முழுசாய் ஐந்து வருடமாயிற்றே.. கண்கள் கடுத்தன.. உடம்பெங்கும் ஏக்கம் சிலந்தியாய் வலைபின்னியது.

ஆனால் எதிர்பட்டால் அவன் விழிகளை சந்திக்கும்

தனிமையும் தனக்கில்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்.

வீட்டிற்கான நீரூற்றுகள், குளியல் தொட்டிகளும்கூட நிஜம்நிஜமாய் மயக்கின.

"அப்பா, எனக்குக் காது ரெண்டு கழண்டிடும் போல.. ரொம்ப டயர்டாகுறேன்" - யாமினி முனங்கினாள்.

"வர்ஷா, பக்கத்திலேதான் 'அப்புகர்' ஆ குழந்தைகளுக்கான விளையாட்டு அரங்கம் இருக்கிறது. பிள்ளைகளை அங்கே அழைச்சிட்டுப் போயேன்."

"போகலாம் நித்தி."

"அங்கே என்ன இருக்கும்பா?" கறாராய் விசாரித்தான் பிரபு.

"உன்னைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு வேண்டிய ராட்டினம், பொம்மைக் கார், விளையாட்டுங்கதான்!"

"ஓ. அப்ப போகலாம்."

யாமினிக்கும் பாஸ்கருக்கும் இது தனிமையில் சற்று பேசி மகிழ நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்த வர்ஷா குழந்தைகளை ஆளுக்கு ஒருபுறமாய் பிடித்தபடி கிளம்பினாள்.

ஆசைதீர வகைக்கொன்றாய் ராட்டினங்களில் சுற்றித் திரிந்தபின் இருவருக்குமே நல்ல பசி.

"சமோசா வாங்கித் தரட்டுமா பசி?"

"ஐயைய. பப்பு சோறு."

"பருப்புக்கும், சோறுக்கும் இங்கே எங்கே போறது?" என்றாலும் நாலு பேரிடம் விசாரித்து மீண்டும் 'பிரகதி மைதான்' வந்தவர் அங்குள்ள உணவகத்தில் 'புலாவ்' வகைகள் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு

"ஆம்.. எனக்கு பிரியாணி!"



மூவருக்குமாய் பிரியாணி, சிப்ஸ் வாங்கியவன், வாகான இடம் தேடி அமர்ந்தான். கால்கள் நொந்தன-முதுகும்தான்.

இரவு என்பதால் இடம் முழுக்க ஜாஜ்வல்யமாய் விளக்குகள்.. வண்ணச் சிமிட்டல்களுடன்.

பிள்ளைகளுக்கு ஊட்டியபடி தானும் சாப்பிட்டான். பசி இப்போதுதான் தெரிந்தது- ஒரு வாய் நிறைய சோற்றை திணித்தபோதுதான்-

"விக்கிக்கப்போகுது. கூல்டிரிங்ஸ் வேணுமா?" என்று வந்து நின்றான் வசந்தன்!

அவனுக்கு விக்கியது! மெல்ல முயன்றான். ஏனோ வாய் ஒத்துழைக்கவில்லை. விழிகள் இமைக்காது வெறித்தன... தவிப்போடு!

பணம் நிகழ்த்தும் மாயங்கள் அவனிலும்..

சதை அளவாய், அழகாய் கூடி, சருமம் பளபளத்தது.

நிறத்தில் புது மெருகு.. கேசமும்கூட அசாத்திய கருமையில்!

உயர்தரமான துணிகளில் அவன் கம்பீரம் மேம்பட்டது. ஆனால் அவனுடைய முகத்திலிருந்து அவளால் எதையும் கணிக்க முடியவில்லை. வெற்று முகம்.

ஆனால் சிக்கிய பார்வைகளைப் பிரிக்க முடியாமல்..

"எனக்கு கூல்டிரிங்ஸ்..." மவுன மாயத் திரையை பவித்திராவின் கீச்சுக் குரல் கிழித்தது.

"சீ.. இப்படி யார்கிட்டேயும் கேக்கலாமா?" பிரபு அண்ணனா தோரணையில் அதட்டினான்.

"என்கிட்ட கேட்கலாம் பிரபு. நான்தான் வசந்த- உங்கப்பா சிநேகிதன்."

- இயல்பாக நடந்தது அறிமுகம்.

"ஓ- நீங்கதானா?"

"ம்ம். இப்ப சொல்லு என்ன வேணும்? ஐஸ்கிரீம்?"

"எதுனாலும்."

சற்றே வெட்கத்துடன் தலையசைத்தான் பிரபு.

"எனக்கு கஸ்டிரின்ஸ் மாமா."

"நல்லது மாமி."

பயின் சிறு குடும்பலை கண்டிவிட்டபடி கிளம்பினான்.

குளிர் பானங்களுடன் அவன் திரும்பியபோது, இவள் சாப்பிட்ட சிறு மேசையைத் துடைத்து காகிதத் தட்டுக்களை ஒதுக்கினாள். பின்னவளின் கை, வாய் கழுவித் துடைத்தாள். குப்பையை அதற்கான தொட்டியில் போடப் போனவளின் முதுகுப்புறம், வெகு அண்மையில் அவன் குரல் கேட்டது.

"ஆக இந்த ஆயா வேலை செய்யத்தான் அன்று என்னைப் புறக்கணித்தாயா?"

ஊசிச் சொற்களைப் பேசியவன் உதடுகளில் ஏளனச்சிரிப்புக்கள் கசிந்து வழிந்தன.

## 11

"பப்பா, எவ்ளோ பெரிசு" பிரபு சொன்னதை, பெரியவர்கள் தங்கள் மவுனத்தால் ஆமோதித்தனர்.

செங்கோட்டை பிரமிப்பூட்டும் பிரமாண்டத்தில் நின்றது.

'இதுவும் ஷாஜகான் கட்டியதுதான். அதுவும் நான்குபுறமும் பெரும் வாயில்கள் உள்ள இத்தனைப் பெரிய



கோட்டையை ஒன்பதே ஆண்டுகளில் கட்டி முடித்து-விட்டார். உள்ளே ஒரு நகரம் போலிருக்கும்" விளக்கிய வசந்தன், வாகனத்தை அதற்குரிய இடத்தில் நிறுத்தினான். செங்கோட்டையின் வாயிலை எட்டுவதற்குள் பலவியா-பாரிகள் இவர்களைச் சூழ்ந்து அரித்தனர்.

வர்ணா, வெட்டப்பட்ட முள்ளங்கிகளை ஆசையாய் வாங்கினாள். கடித்து மெல்லுவதற்குள் வாயோரம் அதன் சாறுவடிந்தது.

கொம்புவளைந்த ஒரு பரும் ஆடு இவர்களையே ஏக்கமாய் பார்க்க, அதற்கும் ஒரு முள்ளங்கி வாங்கி நீட்டினாள். ஆவலாய் கவ்வி மென்றது.

விசாலமான வாசல் வழியே கோட்டைக்குள் நுழைய உடல் சிலிர்த்தது... சரித்திரத்தில் பல நூற்றாண்டுப் பார்த்த வாசல் அல்லவா? உள்ளே இருமருங்கும் கடைகள்... சங்கு வளைகள், வாட்கள் செருப்பு கேடயங்கள் என்று பல நூதனப் பொருட்களை விற்றபடி.

யாமினி உடனே அத்தனையும் வாங்கத் தயாரானாள்.

"இப்போ வேண்டாம். உள்ளே தர்பார் அறை, ரங்-மஹால், அருங்காட்சியகம், தோட்டம் எல்லாம் உண்டு. சுற்றி பார்த்தப்பிறகு வரும் வழியில் வாங்கலாம். இல்லைன்னா வீண் சுமை." என்றான் வசந்தன்.

"நல்லவேளை சொன்னேப்பா! இல்லை அத்தனையும் நான்தான் இவள் பின்னாடியே சுமந்து திரியணும்! நன்றி நவின்றான் பாஸ்கர்!

"ரங்'ன்னா நிறம். இந்த நீரூற்றின் நடுவே பல வர்ண ரத்தினங்கள் இருந்ததாம். சுற்றிலும் பதிக்கப்பட்ட கண்ணாடிகள் மூலம் நாலா பக்கமும் அவ்வர்ணங்கள் தெறிக்குமாம்... அதான் இந்தப் பெயர். இந்த பளிங்கு மேடையைப் பார்த்தீங்களா?"

"ஆஹா! எத்தனை வேலைப்பாடு!"

"இதில்தான் தங்கமயில் சிம்மாசனம் இருந்ததாம். இரு மயில் இணைந்து தோகை விரித்தாற்போன்ற ஆசனம். முழுக்க நவரத்தினங்களால் ஜொலிக்குமாம்!"

"அடடே! இப்பவே அலங்காரம் கண்ணைப் பறிக்குது. சிம்மாசனமும் இருந்திருந்தால்... கற்பனை செய்யக்கூட முடியலை!"

"அதைக் கண்ட ஆத்திரத்தில்தான் போர், கொலை, கொள்ளைகள் எல்லாம் நடந்தன. அப்போதும் சரி, இப்போதும் சரி, பொருளாசையை மனுஷன் வெல்ல முடியலையே- அதனால் பல இழப்புகள். ஆனால் அவன் திருந்தவில்லை..." இவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி பேசினான் வசந்தன்.

பனிக்கினால் உருவாகி, ஓங்கி நின்ற கட்டிடங்களின் சவுந்தர்யத்தில் இலயித்து நின்ற வர்ணா தலைகுனிந்தான்... ஒதுங்கிப்போய் நின்றான்.

இப்படி வார்த்தைகளால் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் கூறுபோடப் போகிறான் போலும்... பெருமூச்சு வெளிப்பட்டது.

அன்றிரவே ஜெய்ப்பூர் பயணம்.

குளிர் பற்களைக் குலுக்கியது. அத்தனை பேரும் சால்வையும் கம்பளியுமாய் முடங்கியிருந்தனர். கார் கண்ணாடிகள் ஏற்றப்பட்டிருந்தன. வசந்தனுடையதைத் தவிர. அவன் வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தான். உரசிப்போன பனிக்காற்றில் அவன் முடி கலைவதைப் பார்த்த அவளது கை குறுகுறுத்தது. 'ஒரு கம்பளிக் குல்லாய் போடக்கூடாதா?' என மனம் உருகியது. ஆனால் கரிசனை பேசப்போய் இடிசொல்தான் வாங்கிக் கட்டிக்கொள்ள நேரும்.



அன்று செங்கோட்டையிலிருந்து திரும்பியபோது நேர்ந்த சம்பவம்... அவர்கள் வாகனத்தை நோக்கி நடந்தபோது- அந்த பருத்த ஆடு மீண்டும் இவளை நோக்கி விரைந்தது. மிக நெருங்க, யாமினி வாங்கியிருந்த பல பொருட்களைச் சுமந்து வந்த வர்ணா அலறினான்... ஒதுங்கினான்... ஆனால் அது அவனைக் குறிவைத்துத் தொடர்ந்தது.

வசந்தன் அவர்களுக்கு இடையில் புகுந்தான். "ஒன்னுமில்லை- நீ அதுக்கு நீட்டிய முள்ளங்கியை அது மறக்கவில்லை. இன்னுமொன்று கிடைக்காதாங்கற நப்பாசை..."

அவன் விழித்தான். "நிஜமாலுமா? இத்தனை பேரில் குறிப்பாய் என்னை நினைவுவைச்சிருந்து- ஆச்சரியமாயில்லை... இதற்கா துரத்தறியுன்றோம்...!"

"அதுங்களுக்கு நன்றியும் நேசமும் அதிகம். சில மனிதர்களுக்கு இந்த விஷயத்திலே நாலறிவுகூட இருப்பதில்லை" என்றானே உதடு சுழித்தபடி.

மனசில் இப்போது 'சுருக்'கென குத்தியது. கண்ணை மூடி சாய்ந்து கொண்டான். ஆனால் அரைமணி நேரம் கழித்து அவனைப் பார்த்த போது நாவை அடக்க முடியவில்லை.

"கு- குளிர் காற்று இப்படி அடிக்குதே. இதோ- இந்த மப்ளரை காதோடு சேர்த்து தலையில் சுற்றிக்கொண்டால்..." தயக்கத்துடன் நீட்டினான்.

"இத்தனை வருடங்கள் இப்படி அனல், குளிரில்தான் கழிந்திருக்குது. மனுஷன் இப்படி பாடுபட்டாத்தானே நாலு காசு சேரும்!"

மறுபடி கண் மூடிக்கொண்டான்- இமை வழியே கண்ணீர் வழிந்தது.

போல் சேர்ந்த அசதியில் எல்லோரும் அப்படியே படுத்துத் தூங்கிப்போயிற்று.

கம்பளியிலிருந்து வந்த பழம் நெடியை முழுதும் உணராதபடி உறக்கம் செய்தது. ஆனால் காலையில் கண்விழித்த போது அடுக்கடுக்காய் தும்மல்கள் கிளம்பின. தொடைகளில் சிவப்பாய் சின்ன தடிப்புகள்.

குழந்தைகளை எழுப்பி, பால் குடிக்கச் செய்து, வெளியே விளையாடவிட்டவள், முதல் வேலையாகப் படுக்கையைத் தட்டிப் போட்டாள். மெத்தை, கம்பளிகளை வெயிலில் பரத்தினாள். தலையணை உறைகளைத் துவைத்து காயவிட்டாள். அறையைப் பெருக்கித் துடைத்த பின்பே, குழந்தைகளைக் குளிப்பாட்டி தானும் தலைக்கு ஊற்றினாள்.

அதுவரை கண்ணில்படாத மங்கு இப்போதுதான் தலை நீட்டினாள். இங்குள்ள சாப்பாட்டு வகைகளைச் சாப்பிட்டு உருண்டுவிட்ட உடல்வாகும் சற்று அசட்டுத்தனமாக முகமும் கொண்ட மங்கு என்ற மங்களம்.

"மாஜி... தோசா தயார்."

"நல்லது. ஆனா என்ன இங்கே இத்தனை தூசும் அழுக்கும்? நாங்கள் குழந்தைகளோட வரப்போறோம்னு தெரியுமில்லையா?"

"தெரியும் மாஜி. ஆனா இங்கே கடும் வேலை. மரவேலை செய்ற ஆசாரிமார் எட்டு பேர் பின் போர்ஷனில உண்டு. அவங்களுக்கும் சேர்த்து நானு சமைக்கணும். கம்மாயில்லை. பாணைப் பசி. நா எத்தனை செஞ்சாலும் சோளப்பொரி போல காணா பண்ணிடுவங்க. அதாம்..."

"சரி. இப்ப தோசைக்குத் தொட்டுக்க என்ன?"

"சப்ஜி"

"வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு நாலு நாளாச்சு. ஆக உன்



சமையல் அமிர்தமாய் ருசிக்க போறது. உன் சப்ஜியும் எப்படி இருக்குதுன்னு பார்த்திருவோம்."

துளி தொட்டு நாக்கில் வைத்தாள். வாய் முழுக்க தீ பற்றிக் கொண்டது! மகா காரம்!

"ஐயோ! சப்ஜின்னா ஏதோ பருப்பு, கிழங்கு கலந்து செய்திருப்பே. மசாலா தோசைன்னு சொல்லி சமாளிக்கலாம்னா..."

"தொட்டுக்கற எல்லாமும் சப்ஜிதான மாஜி? காரம் தூக்கலா இருந்துச்சுன்னாத்தான் கூலிக்காரங்களுக்கு இஷ்டம்."

"எங்களுக்குக் கஷ்டம் போ..." சலித்த வர்ணா, தேங்காயை உடைத்து துருவலானாள்.

பழையதானாலும், அதிகம் பயன்படாத மிக்ஸி இருந்தது. அதில் சட்னியை அரைத்து எடுத்தபோது சுவரின் மறுபக்கத்திலிருந்து பாஸ்கரனின் குரல் கேட்டது.

"இந்த ஊர் 'பிங்க் சிட்டி'ன்னு பேர் பெற்றது. வீதியில ஒட்டகங்கள் நடக்கும். மேகம் வரை ரகம்ரகமாய் பட்டம் விடுவாங்க. இங்குள்ள வாண்டுங்க. கடைகளை ஏறி இறங்கறதில் உனக்கு அலுக்கவே அலுக்காது பாரேன். எழுந்திரு யாழு."

"ப்ச்... அதுக்காக நான் இப்பவே எழுந்து என்ன பண்ணணுங்கறீங்க? குளிர் பிடுங்குது. கம்பளிங்க வேறு நாறுது... சே..."

யாமினியால் விரட்டப்பட்ட பாஸ்கரன் வெளியே வர, அவன் முகத்தைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

"இந்தாங்க காபி..." வர்ணா நீட்டினாள் ஆறுதலாய்.

# 12

ஊமிளிக்கு தோசைகளை கட்டிலிலேயே பரிமாறிய வர்ணா, வீட்டின் வாசலில் வந்து நின்றாள்.

மிக பழங்காலத்து வீடு அது. முன்புறம் 'வழவழ' என்று ஓடிய திண்ணை அழகுதான். ஆனால் அழுக்கு, மரங்கள் உதிர்ந்த சருகுகள், தூசி, தும்பை என்று- சகல குப்பைகளோடு பரிதாபமாய் கிடந்தது.

"மங்கு.. இதை முதல்ல பெருக்கிடலாம்.. வா." அழைத்தாள்.

மங்கு சோம்பேறி ரகம் என்றாலும், பேச்சுத் துணை கிடைத்தபின் சற்றுவேகமாகத்தான் சுழன்றாள்-அதிலும் தமிழில் பேச ஆள் கிடைத்த உற்சாகம் வேறு.

மங்களம் சிறுவயதில் விருதுநகர் பக்கம் வளர்ந்தவளாம். பிறகு இங்கு வந்தது. பல வருடங்களாய் இங்கேயே வேலை பார்ப்பது என்று கதை அளந்தபடி பெருக்கினாள். மறுபுறத்தைப் பெருக்கி அள்ளிய வர்ணா, நீர் தெளித்தாள்.

கழுவிவிட்ட பவள தரையில், குழந்தைகள் கொண்டு வந்திருந்த சாக்கட்டியைக் கொண்டு, நடுவே விளக்குக் கோலம் வரைந்தாள்.

"ஹா! மாதீ- இப்ப நம்மூர் போலிருக்குது.."

"சமையலும் அதுபோலவே கொஞ்சம் செய்யேன் மங்கு"

"நீங்க காட்டித் தந்தா செய்றேன். எனக்கு இப்போ எல்லாம் இந்த ஊர் பழக்கவழக்கந்தான் மாதீ."

"எனக்குந்தான் வேற வேலை என்ன? வா."

மங்களா உதவியுடன் அன்றைய மதிய உணவிற்கான ரசம் வைத்து பருப்பு வறுத்து, அப்பளம் பொரித்தபின் உடம்பு



அலுத்தது. ஆனாலும் குழந்தைகளின் அழுக்குத் துணிமணிகள் சேர்ந்து கிடந்தனவே.

நான்கு நாட்களாய் பயண பரபரப்பில் துவைக்க ஏது, சந்தர்ப்பம், சமயம்?

அவற்றைப் பிரித்து ஊறவிட்டாள்.

கையோடு சிறு இஸ்திரி பெட்டியும் கொண்டு-வந்திருந்ததால் தோய்த்த துணிகளை நாளை சீராய் தேய்த்தும் அடுக்கிவிடலாம்.

அவளுக்குப் புரிந்தது-எந்த மாற்றமுமே வாழ்வுக்கு சுவைகூட்டும் என்பது.

வசந்தனின் குத்தல் பேச்சு, மங்குவின் மோசமான சமையல், இந்த பழங்கட்டிடம், அழுக்குத் தண்ணீர், குளிர், புரியாத மொழி அத்தனையையும் மீறி உலகம் புதிதாய் சோபித்தது.

வேலை இருந்த பரபரப்பில் நீண்ட கூந்தலை சுழற்றி கொண்டையாய் இறுக்கியவள், சேலையைத் தூக்கி செருகிக்கொண்டு வேலையில் இறங்கினாள்.

அத்தனை துணிகளையும் 'பளீர்' எனத் துவைத்தாயிற்று.

முறுக்கி உதறிக் காயப்போடும் வேளை அவன் காலடி ஓசை கேட்டது. ஓர விழி ஓட்டினாள்.

கழுவப்பட்ட திண்ணையில் அரச கம்பீரத்துடன் நடந்து வந்தவன், இவள் அருகே வந்து நின்றான்.

ஏதோ உயர்ரக'செண்ட்' மணம் இவளை எட்டிப் பிடித்தது.

கச்சிதமாய் சலவை செய்த உடைகள். நேற்றிரவு கார் ஓட்டிய அசதி சிறிதும் தெரியாத முகத் தெளிவு.

"எதற்கு இங்கே வந்தாய் வர்ணா? இதற்கா- இந்த ஆயா வேலை பார்க்கவா? உன் அழகுக்கு நீ ஒரே வருடத்துக்குள்

வரையேலும் பெரும்புள்ளி ஒருவனை மடக்கியிருப்பாய்னு நினைச்சேன். நீயானால் இப்படி பெருக்கி, கோலம் போட்டு துணி துவைச்ச.."

"இதுக்காக நான் வரலைதான் வசந்த்-வந்தது உன்னைப் பார்க்க" என்று அழவேண்டும் போலத்தான் இருந்தது.

ஆனால் முடியாது!

அழ மூச்செடுத்தவள், இயல்பாகக் கேட்டாள். "யார், பாஸ்கரனைப் பார்க்கணுமா? இருங்க வரச்சொல்றேன்."

"வேண்டே.. சில வாரங்கள் கழித்து பார்த்துக்கொள்ளும் இளம் தம்பதிகள் மதியத்திற்குமுன் எழுந்திருக்க மாட்டார்கள்-அது எனக்குத் தெரியும். அவர்கள் அறைக் கதவைத் தட்டக்கூடாதென்று இங்கிதமும் புரியும்" என்றான் சிறு கேலி சிரிப்புடன்.

வர்ணா முகம் சிவந்தாள். அடிவயிறு குறுகுறுவென்றது.

"இல்ல அப்பவே எழுந்து தோ.. தோசை சாப்பிட்டாச்சு"

"இப்போ மூடிய கதவுக்குப் பின்னே நீராடும் படலம் போல?"

அவளது முகம் மேலும் சிவந்தது. "அ.. அப்ப.. உங்களுக்கு யார் சொன்னரேட்டார்?"

"ஓ! இதுவும் உங்க கடமைகளில் ஒன்றா?" புருவம் உயர்த்தினான்.

இவனிடம் இயல்பாய் இருப்பது போல எல்லாம் வேடிக்கட்ட முடியாது என்பது புரிந்துபோக, "அப்ப எதுக்குத்தான் வந்தீங்க?" என்றாள் கன்னென்று.

"திருபன் சேத் உங்க எல்லாரையும் இன்றிரவு விருந்துக்கு அழைச்சிருக்கார். அதைச் சொல்லத்தான் வந்தேன்."

பேசும்போதே அவன் விழிகள் அவள் மீது சாவகாசமாய்



ஊர்ந்தன. சேலையை ஒழுங்காக்கிக்கொண்டாள். அவள் முகம் மேலும் இறுகியது.

"திருபன் சேத் யாருன்னு கேட்கவேயில்லையே வர்ணா, நீ?"

லீலா வீட்டாரைப் போலவே அவனும் அவளை 'வரு' என்றுதான் அழைப்பான். இப்போது 'வர்ணா' என்று சற்றே அழுந்த அழைப்பது அந்நியமாய் பட்டது.

ஆனால் அந்நியோன்யத்தைப் பழங்கதை ஆக்கியவளும் தானேதான் அல்லவா?

"யார்.. யார் அவர்?"

"ஒருவிதத்திலே எங்க முதலாளின்னு சொல்லலாம். அவர் பெருந்தன்மையாய் எங்களைக் கூட்டாளின்னுவார். இது அவர் வீடு. தச்சர்களும் அவர் சம்பளத்தில் வேலை பார்க்கறவங்க. இங்கே பெரிய கடையும் மரப் பொருட்களின் விற்பனைக் கூடமும் உண்டு."

"ம்ம்.."

"எங்க வேலை அவருக்குப் பிடிச்சுப்போனது. நாங்க கற்பனையில் காகிதத்தில் வரையும் வடிவங்களுக்கு மரத்தில் உயிர் கொடுத்து உண்மையாக்கிவிடுவார். நல்ல குழுவாய் அமைஞ்சாச்சு. நாங்கள் தயாரிப்பு உறுதியானவையா என்று பரிசோதித்துவிடுகிறோம். ஆக விற்பனை கூடியிருக்கு."

அவன் இத்தனை விபரமாய் தன்னிடம் பேசியது அவளை நெகிழ்த்தியது.

"சந்தோஷம்" என்று புன்னகைத்தாள்.

"இத்தனை பெரும் பணக்காரர் உன்னை விருந்துக்கு அழைத்ததிலும் சந்தோஷந்தானே?"

"என்ன இருந்தும்- அழைப்பு எனக்கில்லையாமினிக்கு"

"பாஸ்கரனின் குடும்பத்திற்கு- நீயும் அவர்களில் ஒருத்தியானே. குழந்தைகள் உன்னை 'சித்தி' என்று அழைக்கிறார்களே!"

"ஆனால் நீங்கள் அழைத்ததுதான் சரி. நான் வந்திருப்பது அவர்கள் ஆயாவாகத்தான். நான் பிரபு, பவியைப் பார்த்துக் கொண்டு வீட்டிலேயே இருந்திடறேன். விருந்து, கேளிக்கைகள் எனக்குப் பழக்கமில்லை... அவசியமுமில்லை" என்றாள் அழுத்தமாக.

## 13

வசந்தன் பேச்சை வளர்க்காமல் விலகிக் கொண்டான். ஆனால் பாஸ்கரனிடமிருந்து அதே போலப் பேசி தப்ப முடியவில்லை.

"நீ வராமல்? அது அழைப்பவரையும் எங்களையும் அவமரியாதை பண்றது போல." என்றான்.

"இல்லை.. இங்கே பல வேலை அதோடு..."

"வேலை பார்க்க மட்டுமாய் உன்னை அழைக்கலை. குழந்தைகளை கவனிப்பதில் யாமினிக்கு உதவி.. அதோடு பயணம் உனக்கும் ஒரு மாற்றமாய் இருக்கட்டுமென்று எண்ணம். ஒரு வடக்கத்திய குடும்பத்தை சந்தித்து பாரேன். இனிய அருமையான மனுஷங்க."

"யாமினியின் அறையை இன்னும் சுத்தம் பண்ணலை"

"என் ஆபீஸ் பொடியன் ஒருத்தனை அனுப்பறேன். வைத்து பெருக்கித் தட்டிக்கொள்ளுங்க. மாலை ஆறு மணிக்குக் கிளம்பினால் போதும்."

உதவி கிடைத்ததில் யாமினியின் படுக்கை அறையை சுத்தம் செய்யும் வேலை விரைந்தே நடந்தது.



மதியம் இவள் கூட்டுப் பொரியலை விரும்பியாய் அனைவரும் சாப்பிட்டு, "யப்பா.. இப்பத்தான் நாக்குக்கு உயிர் மீண்டது" என்று பாராட்டினார்கள்.

"எனக்கும் கொஞ்சம் அசதியாய் இருக்குது யாமினி."

"ஆக விருந்துக்கு வரலையாக்கும்? இப்பவே படுத்து எழுந்திரி. பிள்ளைங்க என்னோடு படுக்கட்டும். நாம கொண்டுவந்த அதிரசமும் முறுக்கும் போதும் சாயங்காலம் காபியோட கொறிக்க. இரவு சாப்பாடு தயாரிப்பு வேலையில்லை. பிறகென்ன?" என்று அவளைப் படுக்கத் தள்ளினாள் யாமினி.

படுக்கையில் சற்றுநேரம் புரண்டாலும் அசதி மீண்டும் அசத்தியது. தூங்கிப்போனாள்.

விழிப்புத் தட்டியபோது குழந்தைகள் இருவரும் சிங்காரித்து நின்றனர்.

"நல்லாயிருக்கா சித்தி?"

"ஓ.. பட்டுப் பாவாடையில் குட்டி ரதமாயிருக்கே பவி!"

"அப்ப நானு?"

"நீ எப்பவும் பிரபுதானேடா?"

காபி குடித்து மேலுக்குக் குளித்தபின் மீண்டும் குழப்பமானது. கண்டிப்பாய் போகத்தான் வேணுமா?

இனியும் மறுத்தால் கவுரவமாயிராது.

சரி போவது என்றால் எதைக் கட்டிக்கொள்வது?

பெட்டியிலிருந்த துணிமணிகளை ஓரமாய் நின்ற அலமாரியுள் அடுக்கியபடியே யோசனை செய்தாள். கொண்டுவந்திருந்த சேலைகளில் பெரும்பாலானவை எளிமையானவை. அதில் ஒன்று போதும்.

ஆனால் வசந்தன் அடிக்கடி 'ஆயா' என்றது குத்தியது

கிழிசலானாலும் 'அப்படியெல்லாம் இல்லை. பார்' என்று அழுத்த உணர்த்தலானாலும் நல்லதாய் உடுத்தலாம்.

போன தீபாவளிக்கு எடுத்த பட்டு?

கையில் எடுத்தால் கனமாய் இருந்தாலும் வழுவழுவென்று வழுக்கியது.

இளம் பச்சையில் கரை எங்கும் தங்கக் கிளிகள் நெய்த சரிகைப் பட்டு சிவப்பு அலகுகள் கொண்ட பச்சைக்கிளிகள் கண்ணைப் பறிக்கும்.

சேலைக்குப் பொருத்தமாய் முத்துச்சரத்தில் கோர்த்த பச்சைப் பதக்க அட்டிகை உண்டு. குடை ஜிமிக்கிகளோடு.

அன்று காலை அலசி உலர்த்திய கூந்தல் சிக்கெடுத்து மெல்லிய கரும்புப் பட்டாய் அது இடுப்பைத் தாண்டி தழைத்தது. சீராய் பின்னலிட்டாள்.

கவனமாய் சேலையைச் சுற்றினாள். நகைகளும் சேர... தன் அழகில் தானே ஒருகணம் பிரமித்துப்போனாள்.

அளவாய் நெற்றிப் பொட்டை அழுத்திய நேரம் யாமினி அறைக்குள் நுழைந்தாள்.

"அடடே... நாலு பிரஷ் பண்ணிட்டாலும் குறைவில்லாமல் ரெடியாயிட்டே..." என்றவளின் குரலில் சிறு பொறாமை தொனித்ததோ?

யாமினி உடுத்தி இருந்தது சரிகை அள்ளித் தெளித்த சிவப்பு காஞ்சிப் பட்டு. ரவிக்கையிலும் தங்கத் தெளிப்பு. அது அவளது பருத்த தேகத்திற்குப் பொருத்தமில்லை.

"எப்படித்தான் இப்படி... உடம்பை 'சிக்'குனு வைச்சிருக்கியோ?"

"பள்ளியிலும் வீட்டிலும் வேலை சரியாய்போகுதே"

"ம்ம்... எனக்கு எப்பவுமே வேலை செய்ய உடம்பு வளைஞ்சாதான். ஆனா உடம்பு இப்படி விரியுதே."



"ம்ம்... பார்ப்போம். உன்னைப் பார்க்கிறபோது மட்டும்தான் எனக்கு இளைக்கிற ஆசை வருது."

பாஸ்கரனோடு இவர்கள் நான்கு பேரும் போய் இறங்கிய வீடு, குட்டி மாளிகை போன்றிருந்தது.

எங்கும் பணச் செழுமை. அவர்கள் வியாபாரமே அதுதான் என்பதால் வீடு முழுக்க அலங்கார நாற்காலி மேசைகள். கதவுகள் உயரமாய் அகலமாய் பளபளத்து முகம் காட்டின.

டி.வி., தொலைபேசி வைக்கப்பட்டிருந்த சிறு மேசைகள்கூட வெகு நுணுக்கமான வேலைபாட்டுடன். அவற்றின் நேர்த்தியை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காகவே கொத்து கொத்தாய் லஸ்தர் விளக்குகள். விளக்கின் பிரகாசம் பளிங்கு தரையில் பட்டு பிரதிபலித்தது!

ஆனால் அத்தனைக்கும் சொந்தக்காரர் வெகு எளிமையாய் தோன்றினார்.

சற்றே குள்ளமான, கொழுத்த தேகம். பருத்தியிலான வேட்டி, ஜிப்பாதான். வித்தியாசமான வேட்டிக்கட்டு.

அறிமுகப்படுத்தப்பட்டபோது கரம் குவித்தார்.

பெண்கள் இருவரையும் பாசத்துடன் 'பேட்டி' என்றே அழைத்தவர், ஒரு மாதிரியான கரடுமுரடான ஆங்கிலத்தில் இவர்களுடன் உரையாடினார். அவர் மனைவி அதுவும் தெரியாததால், ஒரு சின்ன முறுவலுடன் இவர்களது சம்பாஷணையை மாறி மாறி பார்த்திருந்தாள். வகிட்டின் குங்குமமும், கொழுவிய கன்னங்களும், இடது மூக்கின் நத்தும் அவளை ஓவியம் போலாக்கின.

"இவளுக்கு ஆங்கிலம் தெரியாது. நானும் வியாபாரம்

நிமித்தம்தான் இத்தனை சுற்றுக்கொண்டது. ஆனால் பிள்ளைகள் இருவரையும் டெல்லி அனுப்பியிலேன் படிக்க. அவர்களுக்கு மொழித் தகராறு கிடையாது. எங்கே அவன்... தருண்!" குரல் நீட்டி மகனை அழைத்தான்.

வளைவான மாடிப்படிகளில் இறங்கி வந்தவன் பெரும்பாலான வடக்கத்திய இளைஞர்களைப் போலிருந்தான். தளர்ந்த பட்டு பைஜாமா, குர்தாவில் வளர்ச்சியான தோற்றம்.

"ஹலோ பாஸ்கரன், உங்க குடும்பத்தார் வந்தவுடனேயே உங்க முகத்தில் தனி களை தெரியுது" கேலிப் பேச்சுடன் குறுகுறுப்பானவின் கண்கள் வர்ணா மீதே மொய்த்தன.

"இவங்க?"

"என் மனைவியின் சிநேகிதி. தனியே பயணப்படுபவருக்குத் துணையாக வந்திருக்கிறார்கள்."

"ஓஹ்!" என்றவன் அப்படியே இவளுடன் சஷிக்-கொண்டான்!

அவளை முழுவதும், முழுதுமாய் ஒதுக்க முடியவில்லை. அசௌகர்யமாய் உணர்ந்தவள் குழந்தைகளைத் தன்னுடனே வைத்துக் கொண்டாள். ஆனாலும் நூறு கேள்விக் கணைகள் மூலம் ஓரளவு அவனது 'இல்லாத' குடும்பம், வேலை, நிலை பற்றி அறிந்து கொண்டாள்.

வசந்த் எங்கே? இந்தத் தருணின் அன்பு உபத்திரவம் ஓயாதா... என்றவள் அங்கலாய்த்த நேரம்தான் அப்பெண் அறைக்குள் வந்தாள்.

விழி மீட்கமுடியாது மலைக்கச் செய்யும் அழகு!

வந்தவள் பெரு கவர்ச்சியான அழகி.

வெண்பனிக்கு நிறம். அந்த குண்டு முகத்தில் துள்ளிய கருவிழிகள். மாதுளை உதடுகள்.



அலங்காரம், தோற்றத்தைத் தூக்கி நிறுத்தியது. சற்றே செம்பட்டை ஏற்றிய 'பம்'மென்று பொங்கிய கருள் கேசம். உடம்பை ஒட்டிய ஆடை... இவள் ஏதேனும் திரை-நட்சத்திரமோ?

"ஆ.. வாம்மா. இவள்தான் எம்மகள் தாரிகா" அறிமுகப்படுத்தினார் கிருபன்தாஸ்.

அனைவரோடும் சற்று பேசிய தாரிகா, இவர்கள் பக்கமாய் வர, "ஏது? வசந்த் இன்னைக்குத் தாமதமாய் வருவான்னு தெரிஞ்சுதான் அம்மணியும் ஆடி அசைஞ்சு வர்றீங்களாக்கும்?" கெக்கெப்பாய் கிண்டலித்தான் தருண்!

வர்ணாவிற்கு அந்த பிரகாசமான அறை மறுகணம் இருண்டே போனது!

## 14

நீள் பஞ்சு கன்னங்களில் ரோஜாக்கள் பூக்க சிரித்தாள் தாரிகா. பச்சரிசிப் பற்கள் பளிச்சிட்டன.

"போண்ணா. உனக்கு எப்போதும் கிண்டல்தான்- அதுவும் முதன்முதலாய் வந்திருக்கும் விருந்தாளி முன்னே!"

"உனக்கு தெரியுமா? மிஸ். வர்ணாவிற்கு வசந்தை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே பழக்கமாம். ஒரே ஊர், கல்லூரி, தெரு என்று நல்ல நெருக்கம்."

"ஓகோ?" தாரிகா புருவம் உயர்த்தினாள். ஆனால் விழிகள் சற்றே காட்டமாயின. "வசந்த் உங்களைப் பற்றி பேசியதில்லையே?"

இவளுக்குள் 'நச்'சென்று வலித்தது.

கண்ணுக்கு 'குளுகுளு' வென்று இப்படி ஒரு பெண்

அருகி அருகே இருக்க, எப்போதோ உதறிவிட்ட காதலியின் நினைவு வருமாக்கும்?

ஆனால் தன் ஆத்திரத்தில்-உதறித் தள்ளியது தான்தான் என்பது அவனுக்கு மறந்தேபோனது!

தன் தப்பை மறந்து பிறரது குறைகளையே துருவி மெல்வது மனித இயல்புதானே!

"சரி, சாப்பிடலாமா?"

"இல்லைப்பா. இன்னும் நிமிடம் பொறுப்போம். வசந்த் வந்துடறேன்னு சொல்லியிருக்கார்..." தாரிகா கொஞ்சலாய் கெஞ்சிய நேரம் வசந்த் வாசற்படியேறினான்!

அவனை வரவேற்க தாரிகா ஆவலாய் விரைய, அப்போதுதான் அவனை முதன்முறையாகப் பார்ப்பவன் போன்று வெறித்தான் வர்ணா. மனசுக்குள் பொறாமைக் கங்குகளின் பொசுங்கல்.

அந்நேரம் தருண் இவனிடம், "நீங்கள் பிரபல தென்னிந்திய மாடல் என்றே நினைத்தேன். பள்ளி ஆசிரியை என்பதை இன்னும் என்னால் ஏற்க முடியவில்லை. அதிலும் இந்தச் சேலையில் பக்கிளியேதான். இப்படி ஓர் அப்சரஸ் ஆசிரியையாய் வர..." அச்சபிச்சென்று தருண் உளறியதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தான் வர்ணா.

தன்னில் கொழுந்துவிடும் பொறாமைத் தீ வசந்தனிடமும் எழும்பட்டுமே என்ற நோக்கில்!

அதில் அவனுக்கு முழு ஏமாற்றமில்லை. ஒருகணம் திகைத்து இவனைச் சூடாய் பார்த்தவன் தாரிகாவுடன் பேசினான்.

நல்லவசி. ஆனால் புலால், கறி வகைகள் அனைத்திலும், அசட்டுத் தித்திப்பு ருசி. நெய் வழிந்தது. ஊறுகாயிலும்கூட வெல்லம். தயிர் நல்லா கெட்டியாயிருந்தது. ஆனால் அதிலும்



சர்க்கரை! ஆனாலும் புது சுவையை ருசித்து சாப்பிட்டார்கள். குழந்தைகளைக் கவனிக்கும் சாக்கில் சற்று ஒதுங்கியே நின்ற வர்ணாவின் பார்வை மட்டும் அவ்வப்போது வசந்த் தாரிகா மீது மேய்ந்தது. அருகருகே இருவரையும் பார்க்க, இதயத்தை யாரோ முரட்டுத்தனமாய் மூறுக்கிய வேதனை!

தாரிகா அவனுடன் வெகு அன்னியோன்யமாய் பேசினாள். அவளது ஒவ்வொரு அசைவிற்கும் அவளது ஆடையில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடி வட்டங்கள் கண்சிமிட்டின. பளபளவென்று பல்காட்டின. இளரோஜா உடை அவள் சருமத்தை மேலும் வெளுப்பாய், மென்மையாய் காட்டியது.

'நம்ம ஊர் சிகப்புத் தோலைப் பார்த்தலே இந்த ஆம்பளைகளுக்குத் தாங்காது. இது வெள்ளி வெளுப்பு... கேட்கணுமா?' என்று வர்ணா தனக்குள்ளேயே பொருமித் தீர்த்தான்.

தாரிகா கொஞ்லாய் தலையசைத்தபோதெல்லாம் அவளது காதிலிருந்த வைரங்கள் அவள் கன்னத்தில் பிரதிபலித்த ஜோரில் தானே சொக்கியபோது ஆண் எம்மாத்திரம்?

வர்ணா அழகு நிலையங்களுக்குப் போனதே இல்லை. அவள் தன்னைக் கறுப்போடு சேர்த்தி என்று கொண்டாலும் அவள் சருமம் இதமான இஞ்சி நிறம். கழுவிய இஞ்சி போன்ற தேன்பழுப்பு. சராசரிக்கு மேலான உயரம். அதனால் வழித்துவிட்டது போன்ற சீரான உடல்வாகு.

அவள் தாயின் சாயலைக் கொண்டிருந்தாள். மிக வசீகரமான முகம். பளபளக்கும் நீள்விழிகளும், ஈர உதடுகளும் அதில் தனி அழகு. அவள் பேசுகையில் அலை அசையும் வித்தையை யாரும் கண்விலக்காமல் பார்த்திருப்பர்.

தலைமுடியைப் பிரித்துக் கோதினால் கண்படும். ஆனால்

இல்லை அழகில் வர்ணா கர்வம் கொண்டதில்லை. காரணம் அதை அவள் முழுதாய் உணராததாலும்கூட இருக்கலாம்.

அப்பா இருந்தவரை அவருக்குப் பிடித்த ஊரை, எம்பதியின், தயிர் என்பதை இவள் தானும் சேர்த்துக் கொண்டதில் அவளது அழகு ஆரோக்கியமாயும் இருந்தது.

பள்ளி முடிந்து வீடு வருபவள் சிறிது தயிரில் கடலைமாவைக் கலந்து முகம், உடம்பு பூராவும் தேய்த்து ஊறவிட்டு குளிப்பாள்- அத்தனை அழுக்கும் போய்விடும். எதிர்காலம் அவள் எடுத்துக்கொண்ட சிரத்தை அவ்வளவுதான்.

ஆனால் தாரிகாவை, அவள் அலங்காரத்தைப் பார்த்தபோது நெருடியது. பெண்மன மருகல்.

'நானும் அழகு நிலையங்களுக்குப் போயிருக்கலாம். முன்னுச்சி முடியை கொத்தாய் கொஞ்சம் வெட்டி நறுக்கியிருக்கலாம் முகம் வெளுக்க சாயம் பூசி... வேறேதும் வேண்டுமானாலும் செய்திருக்க வேணும்!'

தேய்த்து நிறுத்திய மரகதச் சிலை போல தானிருப்பதை உணராமல் தவித்தாள் அப்போது.

"உங்க இரண்டு வார விடுமுறையில் ஏற்கனவே நாலு நாட்கள் போயாச்சு. இன்னும் பத்து நாள்தான் நீங்க எல்லாம் இங்கே இருக்கப் போறதும்!" என்றார் கிருபல் சேத்.

"இல்லைப்பா... இந்த வருடம் முழுக்க அங்க இங்கேதான்"

"என்னென்னவோ சொல்றே!"

"இந்த வருடம் முடிய இன்னும் பத்தே நாள்தானே!"

அத்தனைபேரும் சிரிக்க, வர்ணாவும் வசந்தனும் மட்டும் சிரிக்கவில்லை. அவர்கள் விழிகள் ஒன்றையொன்று ஏதேதோ சொல்லிக்கொண்டு கவ்வி நின்றன.



## 15

அன்றிரவு மங்கு அவளிடம் வந்து கெக்கலிப்பாள், "மாஜி- நீங்க ரொம்ப அழகு- சுத்திப்போட்டேன்" என்றபடி ஏதோ சுற்றி சுழற்றி விட்டுப் போனாள்.

ஆனால் அழகு என்பது ஆபத்து என்பது சில நாட்களிலேயே தெரிந்தது. தினம் தருண் இவளைப் பார்க்க வந்து போனான். வருவதற்கு முன்னதாக ஒரு போன் வேறு.

"வரட்டுமா? வரும்போது உனக்காக என்ன வாங்கிவரட்டும்?"

"நீ இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாய்? என்ன சேலையில்?" என்பது போன்ற அசட்டு பிசட்டுப் பேச்சு.

சோதனைகள் வரிசை அமைத்து தனித்தனியே வருவதில்லை போலும்-மொத்தமாய் வந்து மோதின.

சின்ன பவிக்கு வயிற்றுப் போக்கு. நான்கு முறை கழிப்பறை போனதுமே குழந்தை பாதியாகிவிட்டது போல தோன்றினாள். அவளுக்கு காட்டாறிய தண்ணீரில் சர்க்கரை, உப்பு கலந்து புகட்டியவள் பழங்களும் உண்ண வைத்தாள்.

பிரபு சதா வெற்றுக் காலுடன் அழுக்கு நீரிலும், மண்தரையிலுமாய் அலைந்ததாலோ என்னவோ கடுமையான சளி. மார்ச்சளி மூச்சிழுக்கும்போதெல்லாம் தான் இருப்பதை அனைவருக்கும் தெரியப்படுத்திக்கொண்டு.

"சாக்ஸ் போட்டு செருப்பை மாட்டிக்கோ, பிரபு"

"இந்த ஸ்வெட்டர் எல்லாம் எதுக்கு, வாங்கி வந்திருக்கோம்? அடுக்கி, அழகு பார்க்கவா? போடுடா"

"இந்தப் பாலைக் குடி. ஏன் மஞ்சளா இருக்கா? மஞ்சத்தூள், மிளகு போட்டு காய்ச்சிருக்கேன்"

இப்படி பிள்ளைகளுடன் வர்ணா திரைந்தபோது யாமினி மறுபக்கம் பிய்த்துக்கொண்டு பாய்ந்தாள்.

"பிங்க் சிட்டி, கடைகண்ணிகளைப் பார்க்கலாம். ஏதேதோ வாங்கலாம். ஆயிரம் வருடத்திய கோட்டை, அரண்மனைன்னு சொன்னதெல்லாம் வெறுமனே காதுக்குத்தான் போல. கண்ணுக்கு எதையும் காட்டலை. இதோ இந்த நாலு வருடத்திய பழங்கட்டிடத்து நாலு சுவரைத் தவிர.." என்று கணவனிடம் சீறினாள்.

பாஸ்கரனது பேயறைந்த முகத்தைப் பார்த்த வர்ணாவிற்கு சிரிப்புதான். மறுபுறம் யாமினியைப் பற்றி வெறுப்புத் திரண்டது.

தாய்மை, அதன் தன்னலமற்ற அன்பு என்பதெல்லாம் மாயையோ? பலர் கண்ணை ஏய்க்கும் ஜிகினா தோற்றம்தானோ?

யாமினிக்கு நினைப்பெல்லாம் தன்னைப் பற்றியேதான்- தன் சவுகரியம், தேவை, விருப்பு வெறுப்புகள் பற்றி மட்டும்தான்.

உலகத்தாரின் தேவை, தவிப்புகளைத் தன் மீது தூக்கித் தாங்கும் அன்னை தெரசா போலிருக்க எல்லாராலும் சாத்தியமில்லை தான்.

ஆனால் குழந்தைகளின் ஆரோக்கியத்தைவிட தன் சுகத்திற்காக முனையும் இது-

தன்னைப் பெற்றவள் இவளினும் மோசம் என்ற எண்ணமும் மறுகணம் மின்ந்தது. உலக வசதிகளுக்காக குடும்பத்தைக் கைகழுவியவள் அல்லவா தன் தாய்..? அதோடு போய் தொலைந்ததுதான் குடும்பமானம்.

அன்றிரவு உணவு மேசையிலும் யாமினியின் அங்கலாய்ப்பு ஓயவில்லை. "இன்னைக்கும் ரசந்தானா?"



"அப்பளம், வடகம் வறுத்து வைச்சிருக்கேனே யாமினி."

"வீட்டிலேன்னா சமையக்கார பாட்டி தினமும் இராத்திரி கோழிக் குழம்பு இல்லை சாப்ஸ் வைச்சிடும்.. ஊகும்.. இன்னும் ஒரு வாரத்துக்கு நாக்கைக் கருட்டி வைச்சிட வேண்டியதுதான்."

"பிரபுக்கு ஜலதோஷம்-வாய்க்குத் தோதாம் இருக்கட்டுமேன்னு செய்தேன்." தான் எதற்கு இப்படி நயந்து பேசி, முதுகொடிய உழைக்கவேணும்? என்று வர்ணாவிற்கு ஆயாசந்தான்.

ஆனால் வசந்தைக் கண்நிறையப் பார்க்க செய்ததற்கே இவள் காலுக்குச் செருப்பாகலாம் என்று பொறுத்துப் போனாள்.

"இன்னைக்கு பவி, பிரபுவுக்கு தேவலை இல்லையா வர்ணா?" பாஸ்கர் கேட்டான்.

"நாளைக்கு முழுசாய் தேறிடுவாங்க."

"நல்லது. நாளை நாம ஜெய்ப்பூர் கோட்டை போகலாம்."

"அதான் ஆயிரம் வருடம் முந்தி கட்டினதாப்பா?"

"ஆமா. அங்கே எப்படிப் போகப்போறோம் தெரியுமா?"

"எப்படி?"

"யானை மேலேறி!"

"ஹை!" பவி குட்டி முகம் மலர்ந்தது.

"காதல் கோட்டை படத்தில் அஜித் போகலை!"

"சிவப்பு லோலாக்கு குலுங்குது குலுங்குதுன்னு பாடிட்டே..?"

"நீயும் பாடிட்டே போகலாம்."

யானை சவாரியும் யானை முட்டி நின்ற அம்பர் கோட்டையும் வெகு புதுமைதான். கூட வசந்தனும் வந்ததில் மகிழ்வுதான். குத்தல் பேச்சு பேசினாலும்... அவனோடு இத்தனை அழகிய சரித்திர அற்புதத்தைச் சேர்ந்து பார்க்கும் திருப்தி போதும் என்றே நினைத்தாள்.

"வசந்த் இருந்தால் நாம 'கைட்'க்குத் தரவேண்டிய ஐம்பது நூறு மிச்சம்" என்றான் பாஸ்கர்.

"இதென்ன கோட்டை சுவரில் ஓட்டை?"

"எதிரிகள் வர்றாங்களான்னு இதன் மூலம் கண்காணிக்க. வந்தால் இது வழியாய் வெந்நீர் கொதிக்கும் எண்ணெய் கூட ஊத்துவாங்க!"

"அடேடே... இதென்ன?"

"உலகின் மிகப்பெரிய பீரங்கி- கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. காக்கில் மகாராஜா நிறுவியதாம். இதன் பெயர் ஜெய்வானா. எடை-250 டன். எட்டு உலோகங்களால் உருவானது."

"அப்பா... இதை எப்படி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு போறது?"

"முப்பத்தாறு யானைகள் இழுத்துப்போகும்... பெண்களின் மனதைப் போல பீரங்கிகள் அழுத்தமானது இல்லை- இடம் மாற்றலாம்."

ஆக அவன் வார்த்தைக் கத்திகள் அவ்வப்போது செருகப்படும்!

"இது வெடிக்குதா?"

"ஒரே ஒரு தடவை, பிரபு. அதனால் முப்பத்தைந்து கிலோமீட்டர் தள்ளி ஒரு கிலோமீட்டர் அகலத்துக்கு ஒரு குளமே உருவாகிட்டது. பலர் காதும் கிழிந்து சென்றதாம்."



"அச்சச்சோ..."

பத்தாயிரம் வீரர்கள் வாழ்ந்திருந்த அந்த கோட்டையைச் சுற்றி வந்ததும் மனதிற்கு விநோத சுகமாயிருந்தது.

பழங்கதவுகள் இன்னும் அப்படியே இருந்தன. இரு கதவுகள் சங்கிலியால் இணைக்கப்பட்டு மேலே நிலையோடு சேர்த்து பூட்டப்பட்டிருந்தன. குதிரை, யானை, வாயங்கள், சின்ன நீர்நிலைகள்...

"அதென்ன அங்கே கூட்டம்?"

"தண்ணீர் குடிக்க."

"தண்ணிப் பஞ்சமா என்ன?"

"இல்லை. அந்தக்காலத்தில் குடிநீருக்காய் அமைக்கப்பட்ட இடம் இது. மழைத் தண்ணீர் அங்கே சேர்ந்து, ஒவ்வொரு நிலையாய் வடிகட்டப்பட்டு சுத்தமாகி கீழே தேங்கிவிடும். அதை மொண்டு தர்றாங்க- குடிச்சால் கற்கண்டு கலந்த இளநீர் போலிருக்கும்."

"அடேடே... பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னேயே எத்தனை யோசனை... சவுக்கியமாத்தான் வாழ்ந்திருக்காங்க."

வர்ணா பிரமித்து போனாள். இந்தப் பழங்கோட்டை எத்தனை போர்களை, காதல்களைக் கண்டிருக்கும்? இதனை அவன் வசந்தனோடு இணைந்து பார்க்க நேர்ந்ததில் நெகிழ்ந்திருந்தது அவள் மனம்.

## 16

உள்ளே பல கடைகள் இருந்தன.

"இங்கே எதுவும் வாங்கறது உசிதமில்லை. மாலை பஜாருக்குப் போய் பார்க்கலாம்" என்று யாமினியைத் தடுத்துவிட்டான் வசந்தன்.

மாலை முழுக்க சாமியின் கடைத்தெருவை அளந்துவிட்டுதே வீடு திரும்பினர். அனைவருக்கும் அசதி. ஆனால் அதுவரை கொண்டாட்டம்தான்.

இட்லி செய்து எடுத்துப்போயிருந்த வர்ணா, டவுனில் சிறு மண்சட்டிகளில் விற்கும் 'மிட்டா தயி' அதாவது இனிப்புதோய்ந்த தயிரை வாங்கி குழந்தைகளுக்கு அதை இட்லியில் தோய்த்து ஊட்டினாள்.

வானில் ஆங்காங்கே கலர் பட்டங்கள் கட்டி சிறுவர்களைப் போல உற்சாகமாய் பறந்து அலைந்தன.

சாலைகளில் அடிக்கடி ஒட்டகங்கள் இழுத்துச் சென்ற வண்டிகளைப் பார்த்தனர். முதல் இரண்டு, மூன்று- 'ஐயோ.. சித்தி பாருங்களேன்-ஒட்டகம்.. எவ்ளோ பெருசு!'

"அய்ய.. அசிங்கமா இருக்குது.."

"ஆனா வாய் பக்கம் சிரிக்கறது போலில்லை?"

"ம்ம்.. சிரிப்புதான் தோ.. பாருப்பா-ஊரைவிட்டு இருபது மைல் கூட பிரயாணம் செய்யாத சிலர் ரெண்டாயிரம் மைல் ஓடி வந்திருக்காங்களேன்ற சிரிப்பு" நைச்சியமாய் நையாண்டி பேசினான் வசந்த்.

இப்புதிய மிருகத்தை விழி விரிய பார்த்தார்கள் என்றால் விரைவிலேயே நாணி முகம் மூடிய சந்தர்ப்பமும் வந்தது.

"ஐய.. வெக்கம்.. சீச்சீ வெக்கம்.." குட்டி பவி பிஞ்சு விரல்களால் முகம் பொத்த. அத்திசையில் நோக்கிய பெண்கள் இருவரும் விழி விலக்கி முகம் கனித்தனர்.

"இதுவுங்கூட இங்கே சகஜம்தான்" என்றான் பாஸ்கரன்.

"ஏன் அந்த ஆளுக்கு டிரஸ் இல்லையா.. இல்ல போட்டுக்க மறந்துட்டாரா?"

"அவர் 'பக்கிர்' - சாமியார் போலேன்னு வையேன்."



"சாமியார்னா சிகப்பு பட்டு அங்கியில்ல போட்டுக்கணும்?"

"அதெல்லாம் வேற மாதிரியான சாமியார்கள்! இது முற்றும் துறந்த வகை!"

நிர்வாணம் பற்றிய பிரக்ஞையே அற்று சாமியார்கள் நடந்து போனாலும், பார்த்த இவர்களுக்கு கூசியது.

அசதி நீங்க, வீடு வந்து 'சில்'லென்ற கலங்கல் தண்ணீரில் உடம்பு கழுவிய நேரம், வர்ணாவின் கதவு தட்டப்பட்டது.

"யாரு?"

"நான்தான் மாஜீ-மங்கு."

"வா.. என்ன சமாச்சாரம்?"

"உங்களுக்குத் தபாலுங்கோ."

"அடடே.. தா தா."

ஆவலுடன் வாங்கிப் பிரித்தவளின் சோர்வு நிமிடத்தில் புன்னகையாய் மாறிப் போனது.

புதுவருட வாழ்த்தட்டையோடு, அன்பாய் கடிதம் எழுதியிருந்தவர் வார்டன் அம்மாதான்.

இவளை நினைத்து, எழுதி விசாரிப்பதற்கும் ஒரு ஜீவன் இந்த உலகில் இல்லாமல் இல்லை.. உணர்ச்சி பெருக கடிதத்தை நெஞ்சோடு அணைத்தாள்.

"ஆங். லவ்வரா மாஜீ?"

"சே.. என்ன பேச்சு-போ தூங்கு மங்கு" செல்லச் சிரிப்புடன்.

விரட்டியவளுக்கு அரவிந்தனின் நினைப்பும் தலை-தூக்கியது. அவனிடம் இல்லியாசம் தானில்லை. இல்லை-யென்றால் தருணின் தொல்லை போதாதென்று அரவிந்தனின்

கடிதங்களும் அவளைக் கொத்தி எடுத்திருக்கும்-தவிர மற்றவும் வேறு புரியாமல் கேலி பேசுகிறான்.

"மாதி, லவ்வர் தினம் தினம் கடிதாசி போடுது- ரொம்ப லவ் ஜாஸ்தி" என்று நோண்டி எடுப்பான்.

நிதானமாய் கடிதத்தை வாசித்தாள். விசேஷ தகவல் எதுமில்லை ஆனால் அதில் தொனித்த பிரியம் நெகிழ்த்தியது. அட்டே.. இன்னும் வருடம் முடிய ஒரு வாரம்கூட இல்லையே என்று யோசிக்கச் செய்தது.

எட்டாம் நாள் மதுரையை நோக்கிப் பயணம்.

'எல்லாரும் போனார்கள் என்று நரியும் சந்தைக்குப் போன கதை'யாய் இவளும் இங்கு ஓடிவந்தது.. எதற்காக?

வசந்தனுக்கு இனி தான் தேவையில்லை என்பது புரியவதற்கா? அவனுக்குத்தான் வெள்ளிச் சிலை போல தாரிகா இருக்கிறாளே சதா கண் முன்பு.. கைபடும் தூரத்தில்.

'பளபள' பத்திரிக்கைகளில் எல்லாம் சிக்கன உடைகள் உடுத்திய சினிமாக் கிளிகள்தான்.

நம்மூர் ஆண்கள் அம்மொழுகு பதுமைகளைத் திரையில் கண்டு உருக, வசந்தன் மட்டும் விதிவிலக்காவானா?

அதுவும் இக்கிளி திரையில் அல்ல.. தோளருகே!

பொருமலில் அன்றிரவு தூக்கம் போய் துக்கம்தான் மிஞ்சியது அவளுக்கு.

மறுநாளும் யாமினி விடாப்பிடியாய் கடைகளுக்குக் கிளம்பிவிட்டாள். அங்கு விற்ற சேலைகள் வித்தியாசமாயும் இருந்தன. 'ஷிபான்' வகைகளை முறுக்கு போல சுருட்டி சுற்றி தொங்கவிட்டிருந்தனர்.

"துணி கசங்கிவிடாதா?" கவலையோடு கேட்ட யாமினி முன், சிறு வியப்பு சிரிப்போடு சேலையின் முறுக்கவிழ்த்தி



விரித்துக் காட்டினார். சிறு சுருக்கமுமின்றி மேகமாய் படர்ந்தது சேலை.

"ஐய்யோ.. பிரமாதம். இதிலே பத்தாவது எடுத்திடணும்" பறந்தாள் யாமினி.

பிள்ளைகளுக்குப் பொறுமையில்லை. "சித்தி.. வீட்டுக்குப் போகணும்.."

"போகலாம்.. அதுவரை வெளியே பட்டம் பறக்குதான்னு பார்க்கலாமா.. வா,வா."

வெளியே முதலில் கண்களில் பட்டவன் வசந்தன்!

"நீங்க எங்கே?"

"உங்களைக் கொண்டுவந்ததோடு பாஸ்கரன் வேலை முடிஞ்சது வீடு கொண்டுசேர்க்கிற பொறுப்பு என்னது" என்றான் புன்னகை இன்றி.

"ஓ.."

"ஹை.. ஆத்தோ!" பவி விரல் காட்டியது.

ஆட்டோக்களும் இங்கு வித்தியாசம்தான். எட்டு பேர் பயணிக்கக் கூடிய அளவு பெரியவை. சாலையைப் பார்த்தபடி பின்புறம் இருக்கைகள் வேறு.

"சித்தப்பா.. அதில் போலாமா?"

"ஓ.. நாளை 'ஹவா மஹால்' பார்க்கப் போகும்போது ஆட்டோ சவாரி."

இதென்ன புதுசாய் 'சித்தப்பா' அழைப்பு.. விழிகளில் குழப்பத்துடன் அவளை ஏறிட்ட வர்ணாவை சொல்லால் அடித்தான்.

"நீ இங்கே வந்ததே தப்பு வர்ணா. இப்போதான் நான் கொஞ்சம் நிம்மதியாய் வேலையில் மூழ்கி இருந்தேன். ஏன்? ஏன் வந்தே.. திரும்ப என்னை அலைக்கழிக்கவா?"

குழந்தைகள் கண்ணும் கருத்தும் வானில் வாலாட்டிப் பறந்த பட்டங்களில் பதித்திருந்தன.

"உங்க. உங்ககிட்ட விளக்கமாய் பேசணும்னு வந்தேன்." தடுமாறினான்.

"ஒரு கடிதம் போதுமே அதற்கு? உன் காதலன் கடிதம் இப்போது உன்னை இங்கே தேடிவருவதைப் போல.. நீயும் நாலு வரி எழுதிப் போட்டிருக்கலாம்- அது உனக்கு நிம்மதி தருமானால் இப்படி நேரே வரவேண்டிய அவசியமென்ன? நீ மேலும் அழகாகி இருப்பதை நான் பார்க்கணும்னா? இல்லை இந்த முட்டாள் எவ்வளவு காசு, பணம் சேர்த்திருக்கான்னு கணக்கிட வந்தியா? இங்கே காசுக்குக் குறைவில்லை.."

"ஆனா இந்தக் காசுக்கு உன் கதவு திறக்குமான்னு தெரியாது-"

உதடுகளை இகழ்வாய் மடித்தான்.

கையில் காசில்லாதவன் கடவுள் ஆனாலும் கதவைச் சாத்தடி!

வெடித்துக் கிளம்பிய கேவலை அடக்க முடியவில்லை அவனால்.

## 17

சாலையைப் பார்க்க அமர்ந்து பின்னோக்கி நழுவுவது போலத் தோன்றிய ஆட்டோ பயணம் புதுமைதான்.

"ஜாவான்னா காற்று. இந்த மாளிகையில் நூற்றுக் கணக்கான சன்னல்கள்."

"அப்ப ஜோராய் காத்து வீசும்னுதான் இந்தப் பேரா?"

"ம்."

மாளிகை வாசலில் நூற்றுக்கணக்கில் புறாக்கள் சுற்றித்



திரிந்தன. போவோர், வருவோர் வாங்கி வீசிய தினைத்தைக் கொத்தி கொறித்தபடி சாவகாசமாய் நடந்த அவற்றைப் பார்க்க சற்று பொறாமையாய்கூட இருந்தது.

ஜோடிப் புறாக்களில் ஒன்று இறந்தால் மற்றொன்றும் ஏங்கி மடியுமாமே.. அப்படியா? மனதால் வசந்தனை நிறைத்தபின்பு அரவிந்தனை மணப்பது— அப்படியானால் இப்புறாக்களுக்கு இருக்கும் நெறிகூட தனக்கு இல்லை என்றாகிப் போகாதா?

"புறாக்களின் கள்ளமில்லாத மனசும் வாழ்வும் உனக்கு அமையாது வர்ணா. வீண் கனவு காணாதே" காட்டமாய் குத்தியது வசந்தனின் குரல்!

பதில் பேசாது நகர்ந்தாள். இவன் நினைவுகளை எப்படி படித்து விடுகிறான்? மாளிகையின் வனப்பில் லயிக்க முடியவில்லை.

"அப்படியே கிருபன் சாரின் கடையையும் பார்த்துப் போகலாம்" என்று பாஸ்கரன் அழைக்கவே, அனைவரும் அந்நவீன பர்னிச்சர் கடைக்குள் நுழைந்தனர்.

பெரும் கண்ணாடிகளுக்குள் இருந்த கடை முழுதும் குளிரூட்டப் பட்டிருந்தது. சாதாரண நாற்காலிகள் ஏதுமில்லை. எல்லாம் சிம்மாசனங்களைப் போலவே உயர்ரக மரத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தன. சாப்பாட்டு மேசைகளில் பலவிதங்கள்- பிரகாச விளக்கொளியில், தச்சர்களின் கைநுணுக்கமும் கற்பனையும் அப்பட்டமாய் தெரிந்தன.

நீள்வட்ட வடிவ நிலைக்கண்ணாடி அவளைக் கவர்ந்தது.

அதைச் சுற்றி ஓடியது மரவேலை மட்டுமல்ல.. தந்தத்தாலான சிறு பூக்களும் வெள்ளிக் கனிகளும்- அவற்றில் விரல் நுனியை ஓட்டினாள்.

"அழகாயிருக்கு இல்லை.. இது வசந்தனது கற்பனை" என்றது தாரிகா!

"ஓ-ஆமா. நீங்க எப்போ வந்தீங்க?"

"இது எங்க கடை. தவிர நேற்றே உங்களையெல்லாம் இங்கு அழைத்து வருவதாய் பாஸ்கர் சொல்லியிருந்தார். கடை எப்படி?"

"பிரமாதமாய் இருக்குது. இந்த சோபாவில் இருப்பது புலித்தோலா?"

"இல்லை. புலித்தோலைப் போலவே அச்சிடப்பட்ட வெல்வெட். வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட துணி. வேலைப்பாடு அதிகமில்லாத 'வழவழ'வென்று மர இழைப்பிற்கு இதுபோன்ற துணி பொருந்தும்."

"உண்மைதான்."

"மாடிக்குப் போகலாமா? அங்கே முழுக்க வகைவகையான கட்டில்கள்."

படி ஒடுக்கமாய்த்தான் மேலேறியது. ஏறியதும் ஒரு விசையை அழுத்த, மாடி முழுக்க ஒளி விழிகள் திறந்தன.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கட்டில்கள். ரகம்ரகமாய். ஆனால் அத்தனையிலும் ஓர் ஒற்றுமை. அதன் விலைகள்தாம்-எதுவும் கால் லட்சத்திற்குக் குறைவில்லை.

"இந்தக் கட்டில் உங்கள் தென்னிந்திய அமைப்பு."

"ஆமா. முகப்பு கோபுரம் போலிருக்குது. இடையிடையே சிறு வெண்கல மணிகள்கூட!" வியந்து பாராட்டினான்.

"கட்டில் அசைய, மணிகள் குலுங்கும்-எப்படி?" தாரிகா கண்சிமிட்ட, இவன் முகம் சிவந்தது.

"இதையும் வடிவமைத்தவர் வசந்த்தான். எங்கப்பாவுக்குகூட வசந்த்மேல் தனிப் பிரியம். 'கற்பூர புத்தி. கூடவே கூடிய உழைப்பாளி' யென்பார். எங்கண்ணனாவையே எடுத்துக் கொண்ட கற்பனையும் சரி, உழைப்பும் சரி கம்மிதான். அவனுக்கு பெண்களைக் கண்டால் போதும்-வழிவான். அதுங்க



அழகாய், அப்சரசாய் இருக்க வேண்டியதுகூட இல்லை. அதுங்க பின்னாடியே திரிவான்.

வர்ணாவிற்குப் புரிந்தது-இது தனக்கான இடி என்பது.

"ஆனா வசந்த் அழுத்தமான ஆள்-எதற்கும் மரியாதவர். அவர் கருத்தெல்லாம் வேலையில் தான். எங்க உறவுக்காரங்க அமெரிக்காவில் கலிபோர்னியாவிலே உண்டு. அங்கேயும் இதேபோலொரு கடை ஆரம்பிக்க திட்டம் உண்டு. அதற்குப் பொறுப்பாய் வசந்தை அனுப்ப அப்பா அபிப்ராயப்பட்டார். என்ன? நானே பேசறேன் எதுவுமே பேசலை நீங்க!"

"அ- ஆ- நல்லதுதான். இத்தனை பெரிய சாமான்களை எப்படி பத்தாயிரம் மைல் கடந்து எடுத்துப்போறது?"

"பிரிச்சு கப்பல்லே ஏத்திடுவோம். அங்கே மறுபடி இணைச்சு, வார்னிஷ் பூசினா ஆச்சு."

"ஓகோ!"

"இந்திய பொருட்களுக்கு அங்கு ஏக வரவேற்பு-விலை பொருட்டே இல்லை. வசந்தின் விற்பனைத் திறன் வேற பட்டதில்லை. அதுவும் நானும் அவர்கூட இருந்தேன்னா, புது திட்டத்திற்கு முழு வெற்றிதான்!"

"அதற்கு என் வாழ்த்துக்கள்" தொண்டை அடைக்க வர்ணா வாழ்த்தினான்.

ஆக இங்கு வந்திருக்கவே வேண்டியதில்லை. வசந்த் இவளுக்காக மறுகிக் கிடக்கவில்லை. வேலையில் சாதித்திருக்கிறான். விரைவில் பெரிய இடத்து மருமகனாகக்கூடிய சாத்தியம் வேறு! அவனது பெயரை உச்சரிக்கும்போதே பனியாய் உருகும் ஒரு பால்நிற அழகி!

இவளுக்கு இனி அவன் வாழ்வில் இடமேயில்லை.

நல்லதோர் வீணையைத் தூக்கி புழுதியில் எறியமுடியுமா? கண்டெடுக்கும் யாரேனும் அதைத் துடைத்து மீட்டத்தான் செய்வார்கள்!

# 18

அன்று காலை குளித்த கையோடு பச்சரிசி குழைத்து வீடு முழுக்க கோலம் இழைத்தான்.

பவிக்குட்டியும் மாவினுள் விரலைத் தோய்த்து, 'பாம்பு ஓடு' என்று நெளிநெளியாய் இழுத்தது.

கைக்கு சதா வேலை தந்தால் மனதிற்கு கடிவாளமாகும் என்றே இவ்வேலையில் இறங்கி இருந்தான்.

அதிகாலையில் ஊதுபத்தி மணக்க, சற்றுநேரம் இறைவனை மனதில் நினைத்து தியானித்திருந்தான்.

'அத்தனையும் அவன் செயல்' என்ற நிம்மதி கிடைத்தது.

ஆனால் 'பணங்காசில்லாது நான் உன் கூட அல்லாடத் தயாரில்லை என்று அவனை நிராகரித்தது தான். தன் தவறுக்கு ஆண்டவனையும் உடந்தை ஆக்குவதா என்றும் மனம் குத்தியது.

இறைவனிடம் மனசார மன்னிப்பு கோரினான். வசந்தனிடமும் இதுபோல மன்னிப்பு கேட்டால் போதும். வந்திற்கு அது போதும் என்றது புத்தி.

பனை வெப்பில் பளபளத்த தாழ்வாரம் முழுக்க முத்துக் கோலங்கள்.

"டக்டக்டக்"

இது அவன் காலடி ஓசைதான்.

அவன் நிமிரவில்லை. விரல்கள் புள்ளிகளை லாவகமாய் இணைத்தபடி இருந்தன. மனம்தான் வலிக்காமல் திமிறியது.

"இன்று எல்லோரையும் அரண்மனைக்குக் கூட்டிப் போனோம்னு வந்தேன். யாமினிக்கு அசதியாய் இருக்குதாம். ஆக அவ வரலை. நீ வரியா?" கேட்டது வசந்தனின் குரல்.



இப்படியே அவன் கால்களைத் தழுவிக்கொண்டால் என்ன?

பாதம் தொட்டு கதறினால் அவன் மனம் இளகாதா?

"அங்க என்ன இருக்கும் சித்தப்பா?" வந்து நின்ற பிரபு கேட்டான்.

"உலகத்திலேயே பெரிய வெள்ளி கூஜா."

"அதுவும் கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்டிருக்கா?"

"ஆமா."

"எதுக்குப் பெரிய்ய கூஜா?"

"மகாராஜா ராணிக்குப் பின்னே தூக்கிட்டுப் போகத்தான்."

இவனுக்கு மனகனத்தையும் மீறி லேசாகப் புன்னகை அரும்பியது.

"ஆ... பொய் சொல்றீங்க" - பிரபு தலையை பலக்க ஆட்டினான்.

"கங்கைத் தண்ணீரை அதில் ஊற்றி வைப்பாங்களாம்."

"அப்புறம்... வேற?"

"பல்லக்கு இருக்கும்."

"அப்படின்னா?"

"சொகுசாய், பெரிய பெட்டி போலிருக்கும். அதுக்குள்ளே ராணி ராஜா உட்கார நாலு பேர் சுமந்திட்டுப் போவாங்க."

"ஹை-ஜாலி!"

"ச்சே... பாவம் அந்த நாலு பேரு"

"அது அப்படித்தான். வாழ்க்கை அப்படித்தான். ஒருத்தர் சந்தோஷப்பட்டா, வேற ரெண்டு பேருக்குத் துன்பந்தான்."

மாவு கிண்ணத்துடன் இவன் 'விருட்'டென உள்ளே போனான். அவன் காலடி ஓசை தொடர்ந்தது.

"வீடு தேடிவந்து 'வெளியே வர்றியா?'ன்னா இப்படிப் போகாமல் திரும்பிப் போறதுதான் பண்பா? ஓ-ஓ? உங்கிட்டே அன்பு, பரிவு பத்தியெல்லாம் பேசக்கூடாது. பணம்... அதுமட்டும்தான் செல்லுபடியாகும். இல்லையா?"

நொந்த நெஞ்சுக்குள் ஏன் இப்படி வேல் ஏற்றுகிறான்?

"இல்லை.தா..தான் உங்ககூட வரலை."

"அப்போ.. வேற யார்கூட போகப் போறே? இந்த அழகு பல்லக்கைத் தூக்கிச் சுமக்கும் பாக்கியம் எந்த தோளுக்கு?"

"த..தருண்கூட போய்க்கறேன்" விம்புக் குழந்தையைப் போல முறுக்கிக் கொண்டாள்.

"அடடே... அம்மாவுக்கு விசயம் தெரியாதா?" எள்ளலுடன் உயர்ந்தது அவனது குரல்.

வர்ணா விழிகளை கேள்வியுடன் உயர்த்தினாள்.

"அவனை பெரியவர் டெல்லிக்கு அனுப்பிட்டார். உன் பின் தன் மகன் தருண் சுத்தறது அவருக்குப் பிடிக்கலை. பித்தம் தலைக்கேறுவதற்குள் கலைச்சுடலாம்னு ஊரைவிட்டே கிளப்பிட்டார்."

அவமானத்தில் குறுகி நின்றாள். நாக்கு எழும்பவில்லை.

"அவங்க பிறரோடு கலவாத இனம். உறவுக்குள்ளேதான் திருமணம் செய்துக்குவாங்க. ஆக தருண் உம்பேரை சதா மந்திரமாய் உச்சரிக்க.. எல்லாம் ஒரு முன்னெச்சரிக்கைதான்!"

"போதும்" தாங்காமல் கை உயர்த்தினாள்.

"நீ பிடிக்க முயன்றது புளியங்கொம்புதான் வர்ணா. ஆனா இது நம்ப பிடிக்கு வளைஞ்சு வராது" கிண்டலடித்தான்.



"அப்படி... அப்படீன்னா தாரிகா மட்டும் உங்க கைக்கு சிக்கினது எப்படி?" இவள் சீற.

"வரு... என் தலைவலி தைலத்தைப் பார்த்தியா? சன்னலோரமாய் வைச்சிருந்தேன். காணலை" என்று அங்கு வந்தாள் யாமினி.

"இ-இல்லையே.. மங்கு எடுத்ததாய் ஞாபகம்."

"கொஞ்சம் தேடித் தாயேன்."

"இதோ."

சமையலறையில் மங்கு இல்லை. வெளிச்சமும் இல்லை. 'சன்னலைக்கூட திறந்து வைக்காமல் எங்கே போனாள்' என்ற முணங்கலுடன் சன்னலைத் திறக்க கை வைத்தவள் அலறினாள்.

"அ-ஆ!"

"என்ன.. என்னாச்சு?" முதலில் ஓடிவந்தது வசந்தன்தான்.

"என்னவோ குத்திடுச்சு.. முள்போலே."

"விளக்கைப் போட்டுக்கறதுக்கென்ன?"

"கரெண்ட் இல்லை."

தன் கால்சராயிலிருந்து சின்ன டார்ச்சை எடுத்து, சுவர் மீது ஒளி பாய்ச்சினான். சன்னலில் வால்தூக்கி ஒயிலாய் நின்றது ஒரு தேள்! வட்ட வெளிச்சத்தில் 'கேட்வாக்' செய்யும் மாடல்போல ஒயிலாய் சுவரில் ஊர்ந்தது!

வர்ணா மீண்டும் அலறினாள்.

# 19

"தேன்மடிக்கு மயக்கம் போடற பெண்ணை இப்பதான் பார்க்கிறேன்" பிரக்ஞை வந்ததும் கேட்டது அவனது கிண்டல் பேச்சுதான்!

ஆனால் அவனது முகத்தில் தெளித்த நீரை மிக மென்மையாய் ஒற்றி எடுத்தான். முகம் திருப்பிக் கொண்டபோதுதான் தான் படுத்திருப்பது அவன் மடியில் என்பது புரிய, பதறி எழ முயன்றாள்.

"என்ன.. என் மடியிலும் தேன் இருக்கா என்ன? துள்ளி குதிச்சு எழுந்துக்கறே?"

விரல் கடித்தது- மனதும்தான்.

அவளோ விடுவதாயில்லை. "அதான் கண்டபடி பேசக்கூடாதுங்கறது" என்றாள் கடுப்பான கேலியுடன்.

"யார்.. நானா கண்டபடி பேசறேன்?"

"தாரிகா பத்தி தகாததைப் பேசினியே"

'ஆகா! இவர் தன்னைத் தருணுடன் சம்பந்தப்படுத்தி பேசுவது புண்ணியம். தன் பேச்சு மட்டும் பாவம்..' உள்ளே குமுறியது.

மங்கு நீட்டிய கசாயத்தைக் குடித்தாள். தேய்த்துப் புளிப்பேற்றிய கொட்டை, கடுவாயில் அழுத்தப்பட, வலியின் தெறிப்பு குறைந்தது.

போட்ட மாத்திரையில், அன்று முழுக்க தூக்கத்திலேயே கழிந்தது. இடையே எழுந்து, குழந்தைகளைப் பற்றி கேட்டபோது,

"அவங்க சித்தப்பாவோட போயாச்சு மாஜி" என்றாள் மங்கு.



இதென்ன? சித்தப்பா என்றவனை அழைக்க குழந்தைகளுக்கு யார் சொல்லித் தந்தது..? யோசிப்பதற்குள் மறுபடியும் தூக்கம் செருகியது.

மறுநாள் காலை, ஆழ்ந்த உறக்கத்திலோ, குடித்த கசாயத்தாலோ உடம்பு கலகலவென்றிருந்தது.

எண்ணெய்த் தேய்த்து குளித்த சுகம் வேறு.

"இந்த ஊரில் கடுகு எண்ணெய்தான் தேய்க்கணும் மாஜி. மற்ற எண்ணெய் சளிபிடிக்கும். இதுன்னா சூடு. தேய்ச்சு, பத்து நிமிடம் வெயிலுபட நின்னு குளிச்சிட்டீங்க. தில்லுருக்கும்" இது மங்குவின் உபதேசம்.

அந்தந்த ஊரில் அதற்கேற்ற முறைப்படியே இருந்துவிடுவது நல்லது என்று அப்படியே குளித்தாள்.

சருமத்தில் தனி மெருகு ஏறியிருந்தது. ஆனாலும் கடுகு எண்ணெயின் வாடை நீங்குவதற்காய் தாராளமாய் சந்தன சோப்பினைத் தேய்த்து குளித்திருந்தாள். பிடரி காயாததால் கூந்தல் விரிந்தே கிடந்தது.

முன்தினம் மங்குவும், ஆபீஸ் பையனுமாக துவைத்து, உலர்த்தியிருந்த துணிகளை உருவி இஸ்திரி இடலானாள்.

"இஸ்திரி தேய்க்கையில் தலைமுடி இப்படி தோகை போல கிடக்கக்கூடாது. தவிர காலில் செருப்பு இருக்கணும்" எச்சரித்தது அவன் குரல்தான்.

"ரொம்ப அக்கறைதான்" அவள் முணங்கியது அவனை எட்டிவிட்டது போலும்.

"இன்னும் நாலு நாளில் ஊருக்குக் கிளம்பிடுவே. இருக்கற மூணு நாளில் வேறேதும் சிக்கல் வேண்டாமென்ற நல்லெண்ணம்தான்!"

இனி வம்புப் பேச்சு வளரும். அதைத் தாங்கும்

வழுவிக்கை விசையை தட்டி இஸ்திரியின் வெப்பு கண்களை அணைத்தான்.

அவளை நேரே பார்த்துப் பேசினான். "இதோ பாருங்க சாந்தி.. நான் இங்கு வந்தது உங்ககிட்ட மன்னிப்பு கேட்கறதுக்குத்தான். நான் பேசினது தப்பு. அது பதினெட்டு வயசின் அறியாமை. எங்கப்பாவின் பேச்சில்.. அவர் வாழ்ந்ததை பார்த்த தவிப்பில் பணம் பெரிசுங்கறாப்பல பேசிட்டேன். மன்னிச்சிடுங்க."

"ஆ..! மன்னிப்பு.. அதுவும் அஞ்சு வருடம் கழிச்சு. இத்தனைக் காலமும் நான்பட்ட துன்பம் லேசில்லை வர்ணா. ஆனா அதில் உன்னை மட்டும் குற்றம் சொல்லி பயனில்லை. என் குற்றமும் உண்டு. இருந்த சிக்கல் போதாதுன்னு மேலும் முறுமுடிச்சை போட்டவன் நான்.."

ஆத்திரத்தில் விடைத்த அவன் நாசியை அச்சமாய் பார்த்திருந்தாள்.

"என் கல்யாணத்தைச் சொல்றேன். சாவித்திரியை நான் கல்யாணம் செய்திருக்கக் கூடாது. ரெண்டு பேருமே அந்த தாம்பத்தியத்தால் சுகப்படலை. அவள் மனசிலேயும் வேற யாரோ. என் மனசிலே நீ இருந்ததுபோல.."

அவ்வார்த்தைகள் தித்தித்தன. அச்சத்தைத் துடைத்து மனதை ஆனந்திக்க வைத்தன.

"மகன் பிள்ளையும் மகள் பொண்ணும் மாலையும் கழுத்துமாய் சேர்ந்து நிக்கறதைப் பார்த்தாப் போதும்'னு என் பாட்டி படுக்கையிலே கிடந்தபடி பண்ணின அழிம்பிலே நடந்தது எங்க கல்யாணம். எம்மனசில நீ இருந்த அழுத்தத்தை சாவித்திரி குறைப்பாளோங்கற நப்பாசையிலே நான் பண்ணின தப்பு.. ஆனா அவள் மனசிலே என்ன இருக்கிறதை தெரிஞ்சுக்கலை. முட்டாள் நானு.. மரவேலை புரிஞ்ச அளவு பெண் மனசு புரியலை.. ப்ச்."



"சொல்லுங்க" இவள் குரல் நைந்து ஒலித்தது.

"அவள் மனசில வேறொருத்தன். வீட்டு மிரட்டலுக்கு பணிஞ்சு எனக்கு தலைகுனிஞ்சிட்டா. ஆனா மனசு படியலை. ரெண்டு பேருமே ஏதோ பேருக்கு வாழ்ந்தோம்-வரண்டு சக்கையாய் போச்சு நாளு."

"உங்க வேலை.. நீங்க அடிக்கடி வெளியூர் போக நேர்ந்தது பிடிக்காமத்தான் அவங்க.. விலகிட்டாங்கன்னு..?"

"மனசு ஒத்துப்போச்சுன்னா மற்றதெல்லாம் பிணைஞ்சு போகும். அதுவரை தடுமாறி நகர்ந்த எங்க வாழ்க்கை அந்த இராத்திரி விழுந்திடுச்சு.. நான்.."

அவன் காதுமடல்கள் சிவப்பதை அதிசயமாய் பார்த்திருந்தாள்.

"சொல்லுங்க"

"நான்.. அவளோட இருந்த இராத்திரியில்.. மயக்கத்தில் படுக்கையில் உம்பேரை சொல்லிட்டேன். மனசு முழுக்க நீ தளும்பின மயக்கத்தில் வாய் தடுமாறிடுச்சு. பேருக்கேனும் ஒட்டியிருந்த எங்க உறவு அன்னையோட அறுந்து போச்சு.

இன்னும் எம்மேல இருந்தும் உங்க மனசு இன்னும் அவன்மேல.. அது குத்தம்னு பழிக்கலை.. என்ன எந்நிலையும் ஏறக்குறைய அதுதான்.. சம்போகத்தில இல்லைன்னாலும், தனிமையிலே சதா அவன் நினைப்பு வருது. அதனாலே உங்ககூட இருக்கப்போ, மனசோட உடம்பையும் கட்டையாக்கி விறைச்சுட்டேன்.. வேணாம்- காலம் முழுக்க இந்த ஏமாத்து தாம்பத்தியம் தொடர வேணாம். இதுல பிறக்கற வம்சம்கூட தழைக்காது.. உறுத்தும்'ன்னா. எனக்கும் அது உண்மைன்னு பட்டுது."

"கேட்க கஷ்டமாயிருக்குது ஊரில் வேற பேச்சு புதுசா, உங்க அலைச்சல் பிடிக்காமத்தான் உங்களுக்குள்ள விரிசல்னு.."

"எது எப்படி இருந்தாலும் ஒட்டியே கிடக்கற அன்பு யாரை அலுத்திடில்லை. உனக்குமில்லை. ஆனா அவன்கிட்ட நான் அதை எதிர்பார்க்கலை. உன்கிட்டே எதிர்பார்த்தேன்."

பதிலொட்டியது அவன் பார்வை!

## 20

பிள்ளைகள் கவனமாய் படிப்பது ஒரு அவஸ்தை என்றால் அவர்கள் வால்முளைக்காத குரங்குகளாய் குதிப்பு பண்ணுவது வேறுவித தொல்லை!

"டவுனுக்குப் போய் 'மிட்டி தகி' வாங்கி சாப்பிடலாம் சித்தி"

"முடியாதே. அவ்வளவு தொலைவு நம்மை யார் கூட்டிப்போவா? நானே தயிரில் சர்க்கரை கலந்து தரேன்."

"வேண்டாம் இங்கே 'போர்' அடிக்குது"

"ஏதேனும் விளையாடு. பாரு பவிகுட்டி சோறு சமைக்கறா"

"சே.. மணல்லே அளையறா. நான் தாரிகா ஆன்ட்டி வீட்டுக்குப் போறேன்"

"போய்..!"

"அங்க தினமும் காலையில் தக்க அறைக்குப் போவாங்க."

"அன்னைக்கு ஒருநாள் நாம் போனோமே? படிகள்ல ஏறி இறங்கி.. பாதாள அறை போவ!"

"அங்கதான் அதிலே ஓரமாய் பந்து விளையாட பிங்பாங் மேசை கூட உண்டு நான் விளையாடலாம்."

"உன் உயரத்துக்கு எப்படி மேசை எட்டும்?"



"பெஞ்ச் மேலே ஏறி நின்னு பந்தை 'பட்பட்'டுன்னு அடிப்பேன்!"

"அந்த இடம் இங்கேயிருந்து அஞ்சு மைல் பிரபு."

"வசந்த் சித்தப்பா வீடும் பக்கத்தில்தான். அவரும் விளையாடுவாரு."

"அதுசரி. இப்பத்தான் வசமாச் சிக்கினே. சொல்லு முதல்ல வசந்தை 'அங்கிள்'ன்னுதான் கூப்பிட்டே பிறகென்ன இப்போ சித்தப்பா?"

"அது– அப்பாதான் அப்படி கூப்பிடச் சொன்னாங்க. அவங்களுக்கு த் தம்பி மாதிரியாம்."

அதுவரை இதயத் தசையை வண்டாகக் குடைந்த சந்தேகம், ஒருவேளை வசந்தனே.

'வர்ணா உங்களுக்கு சித்தின்னா நான் சித்தப்பா' என்று கொஞ்சலாய் பிள்ளைகளிடம் பேசியிருப்பானோ என்ற வெல்லக் குமிழ்.. இப்போது 'சப்'பென்று அடங்கியது.

"நீங்க கொண்டுபோய் விடுங்க சித்தி."

"இதோ பார். கொஞ்ச நேரத்தில் அம்மா-அப்பாவோட பவியும் புது வருடப்பிறப்பு விருந்துக்குக் கிளம்புறா. நீ போகவேண்டாமா?"

"விருந்து ஏழு மணிக்குமேல்தான்.. காலை முழுக்க இவங்க கடைத்தெருவில் சுத்துவாங்க- போர். நான்போகலை."

"பின்னே என்னதான் செய்யலாம்?"

விரல் நீட்டினான் பொடியன்.

அத்திசையில் நின்றது ஒரு மொபட்!

"சரி ஏறு. ஒரு சுத்து சுத்திட்டு இறங்கிடலாம். அதில் பெட்ரோல் இருக்குதோ இல்லியோ!"

"இருக்குதுன்னார் அப்பா. அதில் என்னை தாரிகா ஆன்ட்டி வீட்டுக்குக் கூட்டிப்போங்க."

"ஐயய்யோ! பஸ்ஸிலே இடிபடாமல் மதுரையில் நான் பள்ளிக்கூடம் போய் வரலாம்னு ஓட்ட கத்துகிட்டது. ஆனா தனியா சாலையில் ஓட்டற துணிச்சல் எல்லாம் எனக்கில்லைடா."

"நான்தான் துணைக்கு வர்றேனே."

"அடடே பெரிய மனுஷா! அதுதான் பயமே!"

"அப்ப, நான் ஆன்ட்டி வீட்டுக்குப்போன் பண்றேன். அவங்க வந்து என்னைக் கூட்டிப்பாங்க."

"போன் நம்பர் தெரியுமாடா, வாண்டு?"

"ஓ" என்றவன் எண்களைத் தட்டிவிட்டான்.

"ஊம்.. நான் வேலையில் சேர்ந்தபிறகுதான் அஞ்சி, தடுங்கி 'பேசி'யை உபயோகிக்கப் பழகினேன். நீயான்னா.. இந்தப் போடு போடறே!"

போனில் பேசிய தாரிகா பொடியனை வந்து அழைத்துப் போக சம்மதித்துவிட்டாள் போலும். பயலுக்கு வாயெல்லாம் பல்.

பிள்ளைகளிடம் மேலும் உற்சாகமாய் பேசினாலும் வர்ணாவிற்கு சிரிப்பே மறந்துபோனது-உடம்பும் வந்தியாயிற்று.

"நீங்களும் வாங்க சித்தி. அந்த கீழ் அறையில் நிறைய பேரு வேலை பாப்பாங்க. நாம பந்து ஆடலாம்."

"முதல்ல நீ போய் அம்மாகிட்ட போய்வர உத்தரவு வாங்கிக்கோ. உடுப்பு மாத்தி விடறேன்."

"நீங்க?"

"நம்ப பெட்டியெல்லாம் அடுக்க வேணாமா?"



"திரும்ப ரெயில்லேயா..அய்!"

குழப்பங்கள் இல்லாத குழந்தை மனது குதூகலித்தது.

இரு தினங்களுக்கு முன்பு வசந்தன் அவளிடம் மனம்விட்டுப் பேச நேர்ந்த சமயத்திலும் தாரிகா இடைபுகுந்துவிட்டாள்.

"நம்ப தொழிலாளர்களுக்கு புதுவருட பரிசுகள் வாங்கணும்னீங்களே வசந்த்? இங்கே என்ன கதை அடிச்சிட்டு நிக்கறீங்க. போகலாம்."

"நான் வரலை தாரிகா. பரிசு வாங்கறதில் பெண்கள் சாமர்த்தியம் தனி. எனக்கது இரும்படிக்கற வேலை போல. இந்த ஈக்கு அங்கே என்ன வேலை?"

"இந்த ஈக்கு அந்த ஈயின் துணை தேவைப்படுதே."

"இல்ல தாரிகா.."

அந்நேரம் பாஸ்கரனும் வர சூழ்நிலை மாறிப்போனது.

வேலை, வங்கி கடன், முதன்முதலில் வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டிய மாடல்கள் என்று ஆண்கள் இருவரும் பேச்சில் ஆழ, பிரபு அந்தப் பேச்சையே உன்னிப்பாய் கவனித்து நின்றான்.

கண்ணாடி தட்டில் இருந்த பிஸ்தாவை எடுத்து கொறித்த தாரிகா சிரித்தாள்.

"முளைக்கும்போதே அவங்கப்பா தொழில்ல ஆர்வம் பார்த்தீங்களா?"

"ஆமா.. நல்லதுதான்."

"எங்க குடித்தனம் பெரும்பாலும் அமெரிக்காவில்தான். பாஸ்கரனும் அங்கே அப்பப்போ வர நேரலாம். பொடியா, நீயும் வரணும். டிஸ்னிலாண்டில், வெளிநாட்டு ஐஸ்கிரீம்,

சாக்லேட் எல்லாம் அபார சுவையில். சாப்பிட்டுக்கிட்டே இருக்கலாம்."

"ஐயோ... ஆன்ட்டி வேணாம். அப்புறம் குண்டாயிடுவீங்க."

"என்ன சொல்றான்?"

தமிழ் புரியாத தாரிகாவிடம் விளக்கவேண்டியிருந்தது. "இது எங்க ஊர் டிவியில் வரும் விளம்பரம்." என்று.

தாரிகா ரசித்துச் சிரித்தாள்.

ஆனால் வர்ணாவின் நெஞ்சு உலர்ந்து கிடந்தது. தான் மட்டுமே நீராய் தனித்து மிதப்பது போன்ற துயரம்... தவிப்பு.

இன்னும் சில மணி நேரங்களில் புதுவருடம் பிறக்கப்போகிறது! ஆனால் அவளுக்கு அதில்... எந்த மகிழ்வும், எதிர்பார்ப்பும் இல்லையே.

## 21

பெட்டியில் மீண்டும் அடுக்கப்பட்ட சேலைகளில் பல உடுத்தப்படவேயில்லை.

குழந்தைகளது விளையாட்டுப் பொருட்கள், காலணி, குல்லாக்களைத் தேடி எடுத்து அடுக்கினாள்.

'மளுக்'கென விழி அணை உடைப்பெடுத்தது.

அத்தனையையும்விட உயர்ந்த பொக்கிஷத்தை விட்டுவிட்டல்லவா போக வேண்டும்!

வசந்தன் நன்றாக வாழ்ந்தால் சரி.

ஆனால் வந்ததில் ஒரு நன்மை நிச்சயம்.

அரவிந்தனை இனி மணக்கவே முடியாது. தன் மனதில்



வசந்தனைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்பது நிச்சயமாயிற்றே.

ஆக இது தனக்கும் வசந்தனுக்குமானது காமம் உணர்வல்ல காதல். மாறாத காதல் உண்மைக் காதல்.

தன் உணர்வுகளை அரவிந்தனிடம் முழுக்க சொல்லிவிட்டு வந்தது நல்லது. இல்லை என்றால் அவனுக்கு இது பலத்த ஏமாற்றமாய் போயிருக்கும்.

சொச்ச இரு நாட்களுக்கு வேண்டிய துணிமணிகளை மட்டுமே வெளியில் வைத்து பெட்டிகளை மூடினாள்.

அறை சற்று வெறுமையாய் தோன்றியது.

பனி, பெற்றோருடன் கிளம்பியாயிற்று. ஆக வீட்டில் மழலை ஆரவாரமும் இல்லை.

இன்றிரவின் கேளிக்கை விருந்திற்கு இவளுக்கு அழைப்பு இருந்தது. போகத்தான் மனமில்லை.

வெகு அபூர்வமாய் கிடைத்த இந்த அமைதியும் ஓய்வும் ஏனோ ரம்மியமாயில்லை. உடம்பு வலி, அசதி பல பொய் காரணங்களைப் பட்டியலிட்டு வீட்டில் இருந்து கொண்டாள்.

தனிமை பாரமாய் தோன்ற, யாமினியின் புத்தகம் ஒன்றை எடுத்து வாசிக்கலானாள்.

கதையின் சுவாரஸ்யத்தில் பக்கங்கள் புரண்டன. புத்தியும் அதில் அமிழ்ந்துகொண்டது.

எழுந்து விளக்கைத் தட்டியபோதுதான் இருட்டு புரிந்தது.

பாஸ்கரன், மனைவி மகளோடு நேரே விருந்துக்குப் போவதாகச் சொல்லியிருந்தான்.

பிரபு தாரிகாவோடு அதே விருந்துக்குப் போய்விடுவான். விருந்து நள்ளிரவு வரை போகுமாமே?

ஆக குட்டிப்பையனுக்கு கம்பளி சட்டை, குல்லாய் போட்டுத்தான் அனுப்ப வேண்டும்.

போகும் வழியில் தாரிகாவை இங்கு வந்து அவற்றை எடுத்துக் கொண்டு போகச் சொல்லிவிடலாம்.

தொலைபேசியில் எண்களைத் தட்டினான். "தாரிகாவா? நான் வர்ணா."

"என்ன விசயம்? நான் விருந்துக்குக் கிளம்பிட்டிருக்கேன். பேச நேரமில்லை" அலட்டலும் அலட்சியமுமாய் பதில் வந்தது.

"ஒரே விசயம். போகிற வழியில் பிரபுக்கு உரிய கம்பளி சட்டை, குல்லாவை எடுத்துட்டுப் போயிடறீங்களான்னு கேட்கத்தான்."

"நான் எதுக்கு எடுத்துக்கணும்? நான் ஆயா இல்லையே!" முகத்தில் அறைந்த பேச்சில் இவன் வெலவெலத்துப் போனான்.

"இல்லை... இல்லதான். ஆனா பிரபு அங்க இருக்கறதால..."

"அவன் இங்கே இல்லை."

"ஆங்! காலையில் வந்து கூட்டிட்டுப் போனீங்களே தாரிகா..."

பேசி முடிக்கும்முன் தொடர்பு அறுக்கப்பட்டது.

ஏன் இத்தனை காட்டமாய் தன்னிடம் பேச வேண்டும் தாரிகா?

அதைவிட முக்கியம்- பிரபு எங்கே?

ஏதோ கடுப்பில் அப்படி சொல்லிவிட்டாளோ?

அங்குதான் இருப்பான்... நடுங்கும் விரல்களால் மீண்டும் அதே எண்களை ஒத்தினான்.

"அலோ... தாரிகா..."



"மாஜி இங்கு இல்லை. விருந்துக்கு போய் இருக்கிறார்கள்" என்று வேலைக்காரி இந்தியில் பதிலளித்தாள்.

"சரி பிரபு எங்கே? இவனும் இந்தியில் கேட்டான். பதட்டத்தில் மொழிகூட ஓரளவு வந்துவிட்டது!"

வந்த தகவல் பதட்டப்படுத்தியது.

காலையில் இருந்தானாம். இப்போது இல்லையாம்.

எங்கே அவன்?

இவனது உடம்பு நடுங்கியது.

'கடவுளே... என்ன செய்வது' என்ற கேள்வி மண்டை முழுக்கக் காய்ந்தது.

தன்பொறுப்பில் கூட்டிப் போன சிறுவனைப் பற்றி தாரிகா அலட்சியமாய் இருக்கக்கூடும்.

ஆனால் தானும் அப்படியே இருக்க முடியாதே. வீட்டில் மங்குவும் இல்லை. சமையல் வேலை இல்லாத நிம்மதியில் உடுத்திக் கொண்டு வெளியே கிளம்பிவிட்டாள்.

தாரிகாவின் வீடு தெரியும்.

ஆனால் பிரபு அங்கு இல்லையாமே...

ஒருவேளை கூட்டிச்சென்ற தச்சறையிலே பிள்ளையை மறந்துவிட்டு விட்டு வந்துவிட்டாளா?

பூமியின் கீழே கட்டப்பட்ட அந்நிலவறையில் காற்றோ, வெளிச்சமோ வராதே.

விளையாடி அயர்ந்த குழந்தை, அங்கே கிடக்கும் பாதி இழைக்கப்பட்ட சோபாவிலே படுத்து உறங்கிப் போனானோ?

விருந்தைப் பற்றிய எதிர்பார்ப்பில், உற்சாகத்தில் யாரும் அவனைக் கவனியாது படியேறி, பூட்டிவிட்டு- ஆண்டவா... பிள்ளையைக் காப்பாற்று!

பிள்ளை இருட்டில் எழுந்தால் பயந்துபோவான்.

பசியும் புழுக்கமுமாய் சேர, அப்பா, அம்மா, சித்தி என்று கதறி, தன் இதயத் துடிப்பு முரசு போல தனக்கே கேட்க விண்ணா பரபரத்தான்.

ஸ்லெட்டரை மாட்டிக்கொண்டு கிளம்பினான். நடந்தே இந்த கிலோமீட்டர்களைக் கடக்க தாமதமாகும். தவிர பிரபுவை நடத்திக் கூட்டிவர முடியாது.

சமர்த்தாய் சாய்ந்து நின்ற மொபட் கண்ணில் பட்டது.

மீண்டும் வீட்டுக் கதவைத் திறந்து உள் சுவர் ஆணியில் தொங்கிய வாகனத்தின் சாவியை எடுத்துக் கொண்டான்.

குழந்தை மீதுள்ள அக்கறையில் அவனுக்குள் தன் ஆற்றல் ஊற்றெடுத்தது.

வாகனத்தில் ஏறி, கிளப்பி சாலைக்கு கொண்டு வந்தாயிற்று.

மதுரை சாலைகளைப் போல இங்கு எறும்புக் கூட்டமாய் மக்கள் நடமாட்டமில்லை. மாடு வண்டிகள், பஸ், லாரி, ரிக்ஷா என எல்லாமுமாய் கலந்து சதிராடவில்லை.

ஆக சற்று துணிவுடனேயே கிளம்பினான்.

ஒரே முறைதான் சென்றிருந்தாலும், அப்பாதை நினைவிருந்தது. வசந்தன் வீடும் பக்கம் என்பதால் இருக்கலாம்!

ஆக சற்று துணிவுடனேயே கிளம்பினான்.

ஆனால் வெகுவாய் இருட்டிவிட்டதால், பாதை பற்றிய சிறு குழப்பங்கள் தோன்றின.

ஆனால் வாகனம் முன்னேறியது.

எல்லாம்சரி-பாதைத் தவறினால் விசாரிக்கக்கூட மொழி



அறிவு போதாதே. யாரும் வழிமறித்தால், உதவிக்கு ஆள் வராத அந்து வானமாய் அல்லவா இருக்கிறது?

போகுமிடத்தில் சாவியுடன் காவல்காரர் யாருமில்லாவிட்டால் பிரபுவை எப்படி வெளியே கொண்டு வருவானாம்?

யோசிக்க, யோசிக்க உள்ளங்கைகள் வியர்த்து பிசுபிசுத்தன. 'மொபட்'டின் பிடி நழுவுவது போன்ற அச்சம்!

## 22

பாதையைத் தவறவிடவில்லை அவன்.

இன்னும் ஒரே திருப்பந்தான். ஏறக்குறைய நச்சப்பட்டறையை நெருங்கிவிட்ட சமயம் தான் அந்த சோதனை நேர்ந்தது.

ஆட்கள் கும்பலாய் நின்றிருந்தனர்.

வாட்டசாட்டமான தலைப்பாகை கட்டிய முரட்டு ஆண்கள். பாட்டும் கூச்சலுமாய்.. குடித்திருப்பார்களோ?

வெலவெலத்தது.

இவனை வழிமறித்தால்.. ஏதேனும் விசாரித்தால்?

இவன் மொழி புரியாத வேற்றூர்க்காரி என்று தெரிந்ததும், வேறு வெறி கிளம்பி- 'இவனை நாசம் பண்ணினால் கூட கேட்பாரில்லை' என்ற அலட்சியத்தில் இழுத்து போட்டு இந்த ஆளண்டா இருட்டில் இத்தனைப் பேருமாய் சேர்ந்து அவனை..

தொண்டை இறுகி அடைத்தது.

முதுகு ஓடைவழியே வியர்வை வழிசல்.

வாகனத்தில் வேகத்தை கூட்டினான்.

'அப்புறம் மொபட் உற்சாகமாய் எகிறி எம்பி பாய்ந்தது கும்பலைக் கடந்தபோது அத்தனை பேரும் கூச்சலிட்டனர்.

கைகளை உயர்த்தி ஆட்டி அவர்கள் கத்த இவளுக்குள் பயத்தில் இரத்தமெல்லாம் உறைந்து போனது.

அதே வேகத்தில் திருப்பத்தில் வாகனத்தை வளைத்த போதுதான்... அந்த விபத்து நடந்தது.

தறிகெட்டு தடுமாறிய வாகனம் சாலை ஓரமாய் கிடந்த பாறும் கல்லில் தட்டியது வந்த வேகம் லேசில்லை என்பதால் எம்பிப் பறந்தது.

'ஐயோ' - பந்தைப் போல எகிறி சாலைச் சரிவில் உருண்டாள்.

'இதற்குமேல் உன்னால் பதட்டம் தாங்கக்கூடாது பெண்ணே' என்பது போல மூளை அவளைக் கருணையுடன் மயக்கத்தில் ஆழ்த்தியது.

"வசு எப்படியிருக்கே.. கண்ணைத் திற.."

"ம்ம்.. பிரபு" நா குழறியது.

"அவன் நல்லாத்தான் இருக்கான்."

"எங்கே.. நான் அவனைத் தேடித்தான்.."

"அவன் அவங்கம்மா, அப்பாவோட புதுவருட விருந்துக்குப் போயாச்சு. அங்கே 'மேஜிக்ஷோ' -பயல் முகமெல்லாம் கண்ணாய் பார்த்திருக்கான்-போதுமா?"

"அப்போ.. தாரிகா ஏன் அப்படி சொன்னாங்க?"

"எப்படி?"

"பிரபு அங்கே இல்லைன்னு..!"

"பாங்கள் விருந்துக்குப் போற வழியில் பிரபுவைப் பார்த்திருக்கான்.. நீ இந்தப் பாலைக் குடி.."



சூடான பாலைக் குடித்தபின் புத்தி மேலும் தெளிவானது.

"சரி. ஆக இந்த அம்மா பிரபுவைத் தேடிப் போனீங்களாக்கும்? இது என்ன.. எவியைக் கரைமாள் புத்துலே தேடறாப்பல?"

"ஏன் அந்தத் தக்கப்பட்டறை அங்கேதானே இருக்குது. அதாவது உங்க வீட்டுப் பக்கம்? அங்கு போன பொடியன் உள்ளேயே தூங்கிட்டானோன்னு பார்க்கப் போனேன்!"

"பாதை மாறிட்ட.. அது அடுத்த திருப்பம்."

"ஓ..?" சற்றே அசடு வழிந்த முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்நிலையிலும் வசந்தனைப் பார்த்ததில் அவன் அருகே அமர்ந்திருந்ததில் மனதில் மகிழ்வுப் பூக்கள்!

"வீரதீரமான பெண்தான் நீ. ஆனா எனக்கு ஒரு போன் போட்டிருக்கலாம். இன்னின்ன பிரச்சனை, என்னென்ன பண்ணலான்னு கேட்டிருக்கலாம். விருந்திலே உன்னைத் தவிர எல்லாரும் இருக்கறதைப் பார்த்துட்டு, உனக்கு போன் போட்டேன். மணி அடிச்சுட்டே இருந்தது."

"உங்களுக்கு சிரமம் தரவேண்டாம்னுதான்."

"இப்படி இராத்திரி பதினொன்றுக்கு ரோட்டோரமாய் உடம்பெல்லாம் சிராய்த்து மயங்கிக் கிடப்பது அதைவிட சிரமம்-புரியுதா?"

"புரியுது. என்னால எல்லாருக்கும் எப்போதும் சிரமம்தான். பிரச்சினைதான்."

மெலிந்த தோள்கள் குலுங்க விம்மியவளை பார்த்து நின்றவன் மிருதுவாகப் பேசினான்.

"இல்லை.. அரவிந்தன் அப்படி நினைப்பதாய் தெரியவில்லை" என்று!

"ம்ம்.. யாரு?"

"அரவிந்தன் உன்னைத் தேடி நான் வீட்டுக்குப் போனால் அங்கே ஃபோன் அலறிட்டிருந்தது. கதவும் வெறுமே சாத்தியிருந்தது. எடுத்தால் அரவிந்தன் பேசினார்... டெல்லியிலிருந்து!"

"ஓ!"

மயக்கிலேயே கிடந்திருந்தால் நிம்மதி போல- இப்போது இது என்ன புது பிரச்சனை?

புதுதில்லி விமான நிலையத்திலிருந்து பேசினார். உடனே வாடகைக் காரில் ஜெய்ப்பூர் கிளம்பிட்டதாகவும் சொன்னார். உன்னைப் பார்க்கப் போகும் ஆவல்... ஆர்வம் அவர் பேச்சிலே கொப்பளித்தது"

"இப்போ... எதுக்கு இங்கே அவர் வரணும்?"

"புதுவருடத்தை உன்னோடு சேர்ந்து வரவேற்கவாய் இருக்கும். கடிதத்தில் தான் வருவது பற்றி எதுவும் குறிப்பிடலையா அவர்?"

என்ன சொல்கிறான்... குழம்பினாள்.

அறையில் அதிக வெளிச்சம் இல்லாததால் அவன் முகபாவனையை பகுத்தறிய இயலவில்லை. ஆனால் குரல் தாழ்ந்திருந்தது.

அதில் என்ன பொறாமையா... அல்லது வேதனையா?

தனக்கென்று யாருமில்லையே என இதுவரை புலம்பியவளுக்குத் தன்னைத் தேடி பறந்து வரும் அரவிந்தனை குறித்து கிஞ்சித்தும் ஆனந்தமில்லை.

"நா...நான் எங்கே இருக்கேன்?"

"ஆ்... இதுதான் கண்விழிச்சதும் பேசியிருக்க வேண்டிய முதல் வசனம்! இது என் வீடு அம்மணி!"

"நீங்க எப்படி என்னைத் தேடி...?"



"வீட்டிலே நீ இல்லைன்னதும் மறுபடி விருந்துக்குப் போக மனமில்லை. ஆக நம்ப வீட்டுக்கே போயிடலாம்னு இங்கே வந்தா வழியில நம்ம ஆட்களில் ரெண்டு பேர் சைக்கிளை பேயாய் மிதிச்சுட்டு வர்றாங்க."

இப்படி இயல்பாய் வசந்த் பேசி எத்தனை காலமாயிற்று- இப்போது அரவிந்தன் வேறு!

"அந்த ஆட்கள் யாரு இந்நேரம் சாலையில் செம கூச்சல் போட்டாங்க. அதில் மிரண்டுதான் நான் ஸ்கூட்டரின் வேகத்தைக் கூட்டினேன்."

"தப்பான சாலையிலும் திரும்பினியாக்கும்? அவங்க நம்ப தச்சு தொழிலாளிங்க. வேலையை முடிச்சு, விருந்துக்குக் கிளம்பினவங்க."

"ஏன் அப்படி கூச்சல் போட்டாங்க?" மறுபடியும் கேட்டாள்.

"அம்மணிக்கு புதுவருட வாழ்த்துதலைத் தெரிவிச்சிருக்காங்க. அது கூடவா உனக்குப் புரியலை?"

"எனக்குக் காதும் புத்தியும் பயத்தில் அடைச்சுப்போச்சு

"சரி, எழுந்திரு. உன்னை வீட்டில் கொண்டு சேர்த்திடறேன். நாளை ஒரு டி.டி. ஊசியும் போட்டுக்கணும்

போர்வையின் கதகதப்பை விலக்கி எழுந்தவளைக் குளிர் வந்து தழுவியது.

தடுமாறி நின்றாள்-நடுங்கியது.

குளிரும் அதிர்ச்சியும் கலந்த நடுக்கம்.

அந்நேரம் எங்கோ கிறிஸ்தவ ஆலய மணி ஒலிக்க அதிர்வேட்டுகள் சிதறி, சிரித்தன.

"அம்மா..." அலறி, அருகே நின்றவன் மீது சாய்ந்தாள்.

ஆதரவாய் அவன் கரங்கள் அவளைச் சுற்றின.

"புதுவருடம் பிறந்தாச்சு அதற்கான தடபுடல் வரவேற்பு ஓய்ந்தாச்சு" சமாதானப்படுத்தினான்.

புது ஆண்டின் ஆரம்ப நிமிடங்கள்- அவன் வீட்டில் அவன் அணைப்பில், 'இந்த இன்பம் இப்படியே தொடரட்டும் இறைவா'-அவள் மனமார ஆண்டவனை வேண்டினாள்.

## 23

காலை எழுந்தபோது அசதி மிச்சமிருந்தது.

வரவேற்பறையில் பேச்சுக் குரல்கள். சன்னல் வழியே தெரிந்த மங்குவை அழைத்தாள்.

"மங்கு."

"இதோ.. காபி எடுத்து வரேன் மாஜி."

"இல்லை.. முதல்ல நீ வா.."

ஆனால் மங்கு ஆவி பறக்கும் பானத்தோடுதான் வந்தாள்.

அதற்குள் முகம் கழுவி கேசத்தை ஒதுக்கியிருந்தாள் வர்ணா.

"யார் வந்திருக்கா?" மென்மை விசாரித்தாள்.

"வசந்த் சார் உங்க எல்லாரை கூட்டிட்டு வந்திருக்காரு."

"உஷ்.. ஏன் உளர்றே!"

"அப்படித்தான் யாமினிஜி சொன்னாங்கோ.."

அதற்குள் யாமினியும் எட்டிப் பார்த்தாள்.

"புதுவருட வாழ்த்துக்கள் வர்ணா-வந்திருக்கிறது யாருன்னு சொல்லு பார்ப்போம்!" பெரிய புன்னகையுடன் புதிர் போட்டாள்.

"அரவிந்தன்"



"அடடே.. இமே விழுந்ததில் உனக்கு ஞானதிருஷ்டி ஏற்பட்டிருச்சு போல.."

"ஏற்கனவே வசந்த் சொன்னார்."

"நல்லவேளை இத்தோட போச்சு- எத்தனை நன்றி சொல்லணும் நான் உனக்கு.." யாமினியின் குரல் கனிந்திருந்தது.

"நேற்றிரவே நூறுமுறை சொன்னதாய் நினைப்பு."

"ஒரு போன் போட்டு என்கிட்ட பேசியிருந்தால்.."

"விருந்து நடக்கற இடங்கூட எதுன்னு நான் கேட்டுக்கலையே யாமினி."

"உன்னைத் தனியே விட்டுப் போனதுதான் தப்பு- ரொம்ப அழுத்தி அழைக்க வேண்டாம்னு நினைச்சது தப்பாயிருச்சு. ஆனா உனக்கு எத்தனை பிரியமும் பொறுப்பும் இருந்தால்- தெரியாத ஊரில் இப்படி பிரபுக்காய் கிளம்பியிருப்பே!"

"யாராக இருந்தாலும் இதைத்தான் செய்திருப்பாங்க. இப்ப பிரபு எங்கே?"

"முதல்ல அரவிந்தனை வரச்சொல்றேன். உன்னைப் பார்க்க துடிக்கறார்."

"அது அப்புறமாய்.. முதல்ல குளிக்கறேனே?"

"இப்பவும் அழகாத்தான் இருக்கே."

"இன்னும் எவ்வளவு நேரந்தான் அரவிந்தனைக் காக்க வைப்பீங்க?" என்ற வசந்தன் கதவுகளை விரியத்திறக்க, அவளை ஆர்வமாய் பார்த்தபடி வாசலில் நின்றான் அரவிந்தன்.

"இதென்ன வர்ணா.. நெற்றி, முகம், கையெல்லாம் சிராய்ப்பு? இது.. இதற்கா இத்தனை தூரம் வந்தே..?" பாசத்துடன் பதறினான்.

"இது என் முட்டாள்தனம் அரவிந்த். வாங்க முன்னறையில் உட்காருங்க. ரெண்டு நிமிடத்தில் நானே வரேன்."

"முதல்ல படு வர்ணா. டாக்டர் வரட்டும். ரெண்டுநாள் அசையாதே மூணாம் நாள் நாம விமானம் மூலமாய் மதுரை போறோம்."

"நீங்களாக ஏதேதோ முடிவு செய்றீங்க? யாமினி எப்படிக் குழந்தைகளோடு தனியே திரும்புவா?"

"எங்க கவலையெல்லாம் உனக்கு வேணாம் வரு. அரவிந்தன் என்னிடம் எல்லா விவரமும் சொன்னார்."

"துரோ-என்னசொன்னான்?"

ஏதுக்குமாறாய் பேசி குட்டையை மேலும் குழப்பி-விட்டானா?

அவளைப் பரிசோதித்த மருத்துவர்-

"பயப்பட ஏதுவுமில்லை-சிராய்ப்புகள்தான். ஊசி போடறேன். தர்ர மருந்தை மூணு நாள் சாப்பிடட்டும். இரத்த அழுத்தம் கொஞ்சம் அதிகமாய் தோணுது. அதற்குத் தேவை நல்ல ஓய்வுதான்" என்று புன்னகைத்துவிட்டுக் கிளம்பினான்.

"ஆங். உனக்கு அடுத்த விருந்தாளி வந்தாச்சு வர்ணா!"

"யாரு யாமினி?"

"விபத்தின் சேதி கேட்டு கையும் மெய்யும் பதறி, மலர்கொத்தோடு உன்னைக் காண வந்திருக்கிறார்."

"ஐயையோ.. யாரது?"

"கூடவே ஒரு பெட்டி இனிப்பும்.."

"தருண்! தருண்தானே!"

யாமினி சிரித்தாள் - "அவரேதான்"



இவள் எழுந்து வாசலுக்குப் போவதற்குள் இவளைத் தழுவாத குறையாக மேலே விழுந்து விசாரித்தான், தருண்.

"இல்ல.. எனக்கு ஒன்னுமில்லை."

"பள்ளத்தில் விழுந்து, உருண்டு, மயங்கிக் கிடந்தியாமே!"

"அது நேற்றிரவு. இப்போது நல்லா இருக்கேன்."

"மேலெல்லாம் கன்னிப்போச்சே.." தொட வந்தவனிடமிருந்து சுருங்கி ஒதுங்கினாள்.

"வர்ணாவிற்கு தேவை ஓய்வுதான் - நீங்க கிளம்பறீங்களா?" இடைபுகுந்தான் அரவிந்தன்.

"ஓகோ? நீங்க யாருன்னு தெரியலியே?" கடுப்புடன் தருணிடமிருந்து வந்த கேள்விக்கு-

"அவள் வருங்கால கணவன்" என முத்தாய்ப்பிட்டான் அரவிந்தன்.

இப்படி பக்கத்துக்கு ஒருவராய் பிய்த்திழுக்க, இவளுக்கு'ஓ' வென்று அலறலாம் போலிருந்தது.

வீட்டுப் படியிறங்கிக் கொண்டிருந்த வசந்தனை கையாலாகாத்தனத்துடன் பார்த்து நின்றாள்.

"வசந்த்.."

திரும்பினான்.

"சாயங்காலமாய் வருவீங்கள்ல..?"

தலையசைத்தான்.

ஒருவழியாக யாமினி இவளை இரு ஆடவரின் நடுவேயிருந்தும் உருவி காப்பாற்றினாள்.

வர்ணாவிற்கு படுக்கையிலேயே உணவு பரிமாறி படுக்கச் செய்தாள்.

"மன்னிக்கணும் யாமினி. உனக்கு உதவ வந்தேன். இப்போ என்னால் உனக்கு சிரமம்."

"எனக்கு உதவிட்டியே வசு."

"என்ன சொல்றே?"

"நல்ல புத்தி வரச் செய்திருக்கியே.. இவர்கூட என்னை குத்திக் கிட்டார். பிள்ளைகளை பெற்ற உன்னைவிட பொறுப்பாய் வசனா பிள்ளைகளை கவனிச்சுக்கறான்னு"

"நீ அவங்க தாய் யாமினி."

"பெத்துட்டது பெரிசில்லை. கவனமும் கரிசனையுமாய் வளர்க்கணுமே' என் நல்ல மனசுக்குத்தான் இத்தனை அமோகமான வாழ்வு அமைஞ்சிருக்குது'"

சோர்ந்த விழிகளை கேள்வியுடன் நிமிர்த்தினான்.

"அர்த்தனை சொல்றேன்.."

"வசனா சற்றுநேரமேனும் ஓய்வெடுக்கட்டும் யாமி." பார்வையாது அழைப்பு வர. 'அப்புறமாய் பேசலாம்' என்றவளுடன் கிளம்பினான்.

உடம்பு புரண்டு தவித்தது. புத்தியின் அல்லாட்டமோ அதற்கும் மேல். மனம் கனிந்த யாமினியிடம் மொத்தமும் சொல்லிவிடலாமா..?

"நான் உன்னுடன் கிளம்பியது என் காதலைப் பார்க்கத்தான் என் மனஉணர்வுகளை அனுமானித்தபின் மனம் திரும்பி வசந்தனை மணப்பதாகத்தான் திட்டம். ஆனால் நினைத்தபடி எதும் நடக்கவில்லை. உருகிய மனமெழுகில் அவன் மட்டுமே பதிவாகிருந்தான். வேறு யாருக்காகவும் இடம் மறுபடி பாகாய் கரையவில்லை.. ஆனால் இத்தனை நாள் புரிந்து பயனில்லை. அவனை தாரிகா தனதாக்கி கொண்டாள்.

மேலே யோசிக்கவும் பொறுக்கவில்லை.



குறுகிப் படுத்து அழுதான்- தலையணை நனைந்து போனது.

மதிய உணவை சாப்பிட்டு முடித்தவள் குழந்தைகளை அழைத்தாள்.

"சீட்டு ஆடலாமா?"

"அம்மா, உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு- சொல்லியிருக்காங்க."

"நீங்களா தொந்தரவு? உங்களோடு இருக்கறதுதான் அமைதி."

குழந்தைகளை இறுக்கி முத்தமிட்டவள் கட்டிலில் சீட்டுக்கட்டைப் பிரித்து போட்டாள்.

"எல்லாம் என்னாலதான்" - உதட்டைப் பிதுக்கினான் பிரபு

"பெரியமனுஷர் என்ன சொல்றார்?"

"அப்பாவும் திட்டினாங்க-யாரு உன்னை தாரிகா வீட்டுக்குப் போகச் சொன்னான்னு."

"நானும், அம்மாவும் சம்மதிச்சதாலேடா போனே!"

"ஆனா.. அங்க.. எனக்குப் பிடிக்கலை"

"ஏனாம்?"

"அந்த ஆன்ட்டி சதா உங்களைப் பத்தி பேசினாங்க.. கேள்வியா கேட்டாங்க. எதுவும் விளையாட விடலை.. அப்புறம் வசந்த் சித்தப்பா வீட்டுக்குப் போனோம். அங்கேயும் அவங்க ரெண்டு பேருமே பேசினாங்க. செமபோர்! கடைசியில் அவங்களுக்கு இடையே சண்டை வந்துச்சு. ஆன்ட்டி கத்திட்டு. காரிலே ஏறிட்டாங்க. நானும் ஏறினேன் 'நீ வேறயா?' ன்னு கத்தினாங்க. ஆனா நான் வேற என்ன பண்றது! நல்லவேளை பாதி வழியில் அப்பா காரைப் பாத்தேன் இறங்கி அவங்ககிட்ட போயிட்டேன்- கெட்ட ஆன்ட்டி."

"அவங்களுக்கு என்ன பிரச்சினையோ? சரி இப்போ யார் முதல் சீட்டை இறக்கறது?"

"அதுசரி. இங்கே அரவிந்தன் உனக்காய் காத்திருக்க நீ இதுகளோட உக்கார்ந்தாச்சா-கிளம்பு."

"இல்லை. யாமினி."

"பின்னைக்கே கிளம்புங்க. உங்களுக்காக நாலு சட்டி இனிப்புத் தயிர் பிரிட்ஜிலே இருக்குது."

"ஹைய்யா!"

"யாமினி உங்கிட்டே கொஞ்சம் பேசணும்." இழுத்தாள் வர்ணா.

"முதல்ல அவர்கிட்டே பேசு."

"இதையேதான் அரவிந்தனிடமும் சொல்லப் போறேன். இது ஒரு ஒத்திகைன்னு வையேன்."

சற்றுமுன் நினைத்தவற்றை, வார்த்தைகளைக் கோர்த்தாள் வர்ணா. கடைசியில் யாமினி சொன்னாள் "அதாவது உம்மனசை முழுக்க இன்னும் வசந்தன்தான். வேறு யாருக்கும் அதில் இடமில்லை!"

"ம்ம். வார்டனம்மா சொல்வாங்க- மனுஷனின் விலா எலும்பை உருவி உருவாக்கப்பட்டவள் மனுஷின்னு. நான் வசந்தனிடமிருந்து. அவருக்காய் உருவாக்கப்பட்டவள், வேறு எவரும் பொருந்தமாட்டேன்." இதைத்தான் அரவிந்தனிடம் சொல்லணும்."

அத்தனையையும் அறைவாசலில் நின்றே கேட்டுவிட்ட அரவிந்தன் சிலையானது போல நின்றான்!



# 24

வீடு அமைதியாய் நின்றது.

சந்தர்ப்பம் புரிந்தவர்களாய் குழந்தைகள் கூட ஆறரைக்கே படுக்கப் போய்விட்டனர்.

முன்தின இரவு வெகுநேரம் கண்விழித்ததும் காரணம் போல.

"ச்சே.. போகும்போது அரவிந்தன் முகத்தைப் பார்க்க சகிக்கலை வர்ணா- அழவிருக்கிற குழந்தை போல இருந்தார்."

"உஷ்... அவனை ஏன் குற்றம்சாட்டறே?" பாஸ்கரன் குறுக்கிட்டான்.

"அப்படி இல்லைங்க. எதிர்பார்ப்போடு முகமெல்லாம் பூரிக்கவந்த மனுசன் உடைஞ்சு போயிட்டார்.

"சில சங்கடங்களை எதிர்நோக்கத்தான் வேண்டியிருக்கு- அதான் வாழ்க்கை."

"ஆனா பாஸ்கர், தனக்குக் கிடைச்ச சொத்து விசயத்தைப் பற்றி அரவிந்த் இவள்கிட்டே மூச்சும் விடலையே. அதுதான் ஆச்சரியம்."

"இதிலென்ன ஆச்சரியம்? மேலும் ரெண்டு கோடி பெறுமானமுள்ள கடை, சொத்து தனக்கு சேர்ந்திருக்குன்னு தெரிஞ்சால் மனம் மாறிடற பெண்ணில்லை வர்ணாங்கறது அரவிந்தனுக்குத் தெரியும்."

"எனக்கும் புரியாறாப்பல பேசுங்களேன்" வர்ணா கெஞ்சினாள்.

"காலையிலேயே சொல்ல வந்தேன். நீ அலுப்பாய் இருந்தே. அதாவது அரவிந்தனுடைய பெரியப்பா இறந்திட்டார். இவருக்குக் குடும்பம் ஏதும் இல்லாததாலே இவர்

சொத்தும் அரவிந்தனுக்கு வந்து சேர்ந்துவிட்டது. நீ இந்த செல்வியை உங்கிட்டே சொல்லி, உன்னை ஊருக்கு அழைக்கப் போக வந்தார். நீ வந்த வேளைதான் இந்த அதிருஷ்டம்னு அவர் அம்மா சொன்னாங்களாம்."

"தப்பு யாமினி. நான் அதிருஷ்டக் கட்டை. அவர் பெரியப்பா இறந்ததுக்கு நான் காரணம்னு சொல்லாதது அவங்க பெருந்தன்மை. என்னை நேசிக்கிறவங்களுக்கு நான் தந்ததெல்லாம் துன்பமும் ஏமாற்றமும்தான்."

"அழாதேம்மா. ஏற்கனவே ரெண்டு கண்ணும் கோவைப் பழமாட்டம் வெந்திருக்குது."

"அரவிந்தன் நல்ல மனுஷர். கவுரவமாய் விலகிட்டார். அதிலும் நீங்க சொன்னது போல, தனக்குக் கிடைச்ச சொத்து விவகாரத்தைச் சொல்லாம விலகினது... ரொம்ப கண்ணியம். எத்தனை கோடிகளின் முன்னும் காதல் தோன்றாது... தோற்காது! அது புரிஞ்சவர். எனக்கும் புரியுது... ஆனால் காலம் கடந்துதான் புரியுது!"

"என்ன காலம்? கிழவியா ஆயிட்டே? நாளை மாலை கிளம்பறோம். காலையில் வசந்தனை வரவழைக்க."

"யாமினி... இப்போ... உடனே நான் அவரைப் பார்க்க முடியாதா?" கெஞ்சியவளை இருவரும் பச்சாதாபத்துடன் பார்த்து எழுந்து கொண்டனர்.

"கிளம்பும்மா-போகலாம்."

"நேற்றிரவு இதே சாலையில் மோட்டலில் போனவள் நீ!"

"அதெல்லாம் போன யுகம் நடந்தது போலிருக்குது. அதுக்குள்ளே எத்தனை சம்பவங்கள்!"

"முழுக்க உடம்பு தேறினபிறகு, காலையில் நீ இங்கே வந்திருக்கலாம்."

"வருடம் முழுக்க படிக்காமல் பரீட்சைக்கு முந்தின இரவு



முட்டி முட்டி படிக்கும் ரகம் போல உன் ஸ்டைல்!" பாஸ்கரன் பெருமூச்செறிந்தான்.

"அப்படி என்னவாம்?"

"வந்த ரெண்டு வாரம் 'உம்'முனு இருந்தாட்டு, இந்நேரம் வசந்தனைத் தேடி இப்படி ஓடறதால் சொல்றேன்... தவிர நீங்க ரெண்டு பேரும் இணையணுங்கற ஆசை எனக்கும் உண்டும்மா வர்ணா..."

"உங்... என்ன... எப்படி தெரியும்?"

"வசந்தன் என்கிட்ட எதுவும் மறைக்கலை. எனக்கவன் தம்பி போலத்தான். ஆனா அதற்காய் என் பிள்ளைகள் அவனை 'சித்தப்பா'ன்னு அழைக்கச் செய்யலை! நீ 'சித்தி'ன்னா அவனை அப்படி அழைக்கறது பொருத்தம்னு தான் சொன்னேன்."

"தாரிகா பற்றி தெரிஞ்ச பிறகும்... இப்படி பேசறீங்க."

"அவளைப் பற்றி என்ன தெரியணும்? அழகான பெண்ணுன்னாலும் அவள் குணம் அத்தனை நிறைவில்லை. கூடவே வயசுக் கோளாறு வேறென்ன?"

"வசந்த் மேலே அவளுக்குப் பிரியம். அவரும் அவளும் அமெரிக்காவில் புதுக்கடை திறந்து அங்கேயே குடும்பமும் அமைக்கப் போவதாய் சொன்னான்... அவர் நல்வாழ்வுக்கு நான் தடையாய்... நிற்கக் கூடாது?"

"உனக்கும் வசந்தனுக்கும் ரொம்ப ஒற்றுமையம்மா." சற்று கேலியாய் பேசினான்.

கார் குளிர்காற்றைக் கிழித்தபடி விரைந்தது.

"அவன் சவுகரியமாய் குடித்தனம் பண்ணட்டும்னு நீ நினைக்கறே. 'அரவிந்தன் என்னைவிட பணக்காரன் - ஆ... வர்ணா அவனையே கல்யாணம் செய்து சுகப்படட்டும்'னு அவன் சொல்றான்."

"அப்படின்னா... தாரிகா?"

"வயசுக் கோளாறுன்னு சொன்னேனே! வசந்தன் மீதொரு ஈர்ப்பு. அவன் எந்த அனர்த்தத்திற்கும் இடம் தராமத்தான் பழகினான். அதுகூட அவன் அப்பா மேலுள்ள மரியாதைக்காய். சாவித்திரி அதாவது..."

"அவரோட முதல் மனைவி."

"ஆம். இருந்தபோது தாரிகா அவனோடு நெருங்கிப் பழகினா. அப்போது தாரிகா கல்லூரி மாணவி. வசந்த் ஒரு சிலமுறை அவளைக் கல்லூரியில் இறக்கிவிட்டுப் போவதுண்டு. அவள் தோழிகள் இருவரையும் இணைத்துச் சீண்ட, தாரிகாவிற்கு இவன் மீது ஒரு மயக்கம். சாவித்திரியின் உப்புச்சப்பற்ற தாம்பத்தியத்தையும் அவள் நோட்டமிட்டு விட்டாள். சாவித்திரியிடம் 'உன்னால்தான் வசந்தனுடைய வாழ்வு பாழ்' என்று ஏதேதோ சொல்லி... பிரிவை தூண்டி, துரிதப்படுத்தி இருக்கிறாள்..!"

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? நாமாய் யூகம் பண்றது தப்பு."

"யூகமில்லை. அப்போது தாரிகா வீட்டிலேருந்த வேலைக்கார பெண் நம்ப மங்குவிற்கு சிநேகம். அவளுக்கு ஓரளவு ஆங்கிலம் புரியும்."

"ஆக கேட்டதையெல்லாம் மங்குகிட்ட சொல்லிட்டாளாமா!"

"மங்கு கொஞ்சம் சோம்பேறிதான். ஆனா பொய் சொல்லமாட்டா. விசயம் எங்க வரையில் கசிஞ்சது தெரிஞ்சதும் அந்த வேலைக்கார பொண்ணுக்கு வேலை போயிடுச்சு."

"நீங்க இதையெல்லாம் விளக்கி... சாவித்திரியை மறுபடி இவரோடு சேர்த்து வைக்க முயற்சி செய்யலையா?"

"நாரதர் கலகம் நன்மையில் முடியறது போல தாலிமுடியில் ஊசலாடிய உறவை, தாரிகா ஒட்ட அறுத்துட்டா. அதிலே யாரை நோக... தவிர..."

"சொல்லுங்க..." குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல வர்ணாவின் குரல் தணிந்திருந்தது.

"விலகின மூன்றாம் மாதமே அவர்களுக்கிடையே விவாகரத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பித்தாயிற்று. ஒரு வருட பிரிவின் பிறகு சாவித்திரியின் மறுகல்யாணமும் நடந்தது."

"ஓ..!"

"இந்தத் துணிவு அந்தப் பெண்ணுக்கு ஆரம்பத்திலேயே இருந்திருந்தால் இத்தனை குழப்பம்... வருத்தமில்லை."

"பலருக்கு பட்டுத்தானே புரியுது!"

"அப்போ நிச்சயமாய் இவர்... இவருக்குத் தாரிகா மேல..!"

"வசந்தன் வீட்டிலே விளக்கெரியுது. தெரியுது அவன் நிழல்தான். ஆக வீட்டில் இருக்கறான். இறங்கும்மா..."

"நீங்க?"

"பூஜை நேரத்திலே ஒன்னுக்கு ரெண்டா எதுக்கு கரடிங்க?!"

## 25

கார் வாகாய் திரும்பி இவன் நடந்து போக ஒளி வீ[illegible] நின்றது.

தன் இதயம் இத்தனை வலுவாய் எகிறி துடிக்க, கதவை தட்டவே கூட அவசியமேயில்லை என்று தோன்றியது.

அதுபோல தட்டாமலேயே... கதவு திறந்தது!

காரின் ஒலி, அவன் கவனத்தை கவர்ந்திருந்தது போலும். ஆனால் நிற்பவன் முகத்து உணர்ச்சிகள் புரியவில்லை.

கோபமா, என்னமோ, அதிர்ச்சியோ, ஆச்சரியமா... என்ன அது?

"வசந்த்..." என்றாள் மெள்ள.

"உள்ளே வா... அது பாஸ்கரன் கார்தானே- அவன் ஏன் வரலை?"

"அவர்... காரு... அ-வந்து அப்புறமாய் வர்றாராம்..."

"அப்போ நீ ஏன் வந்தே?"

அவனது விறைப்பைப் பார்த்தவளுக்கு ஏனோ சிரிப்பாய் வந்தது!

காதல், கல்யாண போட்டிக்கு தற்போது அவன் பட்டியலில் வேறு பெண் இல்லை என்ற தைரியம்!

அவன் மனதில் தனக்கு எப்போதும் ஓரிடம் இருந்திருக்கிறது என்பதில் எழுந்த காதல் கர்வம்!

மெள்ள போய் அமர்ந்தாள்.

அந்த சோபா அழகானது மட்டுமல்ல வெகு சவுகர்யமும்கூட... அவனது படைப்பாக இருக்கும்.

வசதியாக சாய்ந்துகொண்டாள். ஏதோ அவன் மனசிம்மாசனத்திலேயே அழுந்த அமர்ந்த ஆனந்தம்!

"வர்ணா... என் இது? இப்போ எதுக்கு வந்தேன்னு..."

"சொல்றேன். நான் குறிக்கத்தான்."

"நீ ஊர் கிளம்ப, ஏற்கனவே தேதி குறிச்சாச்சு-நாளை."

"துணையில்லாமல் நான் போறதாயில்லை."

"யாமினி... குழந்தைகள் வர்றாங்க."



"நான் என் வாழ்க்கைத் துணையைச் சொன்னேன்." சற்று சவடாலாகப் பேசினாள்.

அவளையே ஊன்றி பார்த்தான்.

"ஆக வம்பு பண்ணவே வந்திருக்கே?"

"இல்லை வசந்தன்-காதல் பண்ண!"

முகத்தில் கோபம் கூடியது "அரவிந்தன் எங்கே?"

"அவரை அனுப்பிட்டுத்தான் வர்றேன்."

"புரியலை..."

"புரியும்படியாய் எல்லாம் சொல்றேன் வசந்த். இனியும் நமக்கிடையே திரை அவசியமில்லை. வீட்டுக்கு வர்றதாய் சொன்னீங்க... ஏன் வரலை?" உரிமையாய் அதட்டினாள்.

"ஊரிலிருந்து அவர், அரவிந்த் வந்திருந்த சமயம்... நானெதுக்கு?"

"திரையை கிழிச்சிடலாமா? நான் செய்த தப்புக்கு ஏற்கெனவே உங்களிடம் மன்னிப்பு கேட்டுட்டேன். இப்போ தப்பெண்ணங்களையும் விட்டுடலாம். என் மனசில் உங்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை... இடந்தர முடியலை. நீங்க சாவித்திரிக்கு இடந்தர முயன்றதில் உங்களுக்கும் அவஸ்தை. அவளும் நொந்து போனாள்."

அவன் பேசவில்லை. தொண்டைக்குழியில் மட்டுமே அசைவு.

"நீங்க தாரிகாவை கல்யாணம் செய்துக்கப் போறதா நினைச்சேன். நான் நினைக்கறது போல நீங்களும் நடந்துக்க முயற்சி பண்ணுனீங்க. அதான் இதுவரை இத்தனை உடைச்சுப் பேசலை..."

"அரவிந்தன் கடிதத்தை நீ ஆசையாய் அணைச்சதா..."

"மங்கு விளம்பினாளாக்கும்? அது எங்க ப...

வார்டனம்மா எனக்கு எழுதினது. எனக்குன்னு யாருமில்லை-ங்கிற வேதனை ஏங்கி மருகின நேரம் கிடைச்ச ஆறுதல் மருந்து அது. புத்தாண்டு வாழ்த்து கடிதம். அதான் நெஞ்சார அணைச்சேன்... விவரம் தெரியாத வயதில் பேசினதுக்கு இத்தனை காலம் தண்டனை நான் அனுபவிச்சாச்சு வசந்தன்... போதுமே?" குரல் குழைந்து கெஞ்சியது.

"ஆனா கூடவே நானும் அனுபவிச்சேனே?"

உடல் நடுங்க எழுந்தான்.

இவன் வேசில் மசிவதாய் தெரியவில்லையே?

"நீயில்லாத தனிமையின் கொடுமையை..." மெள்ள முடித்தான்!

அவர்களிடம் தயக்கம் விலகி முதல் புன்னகை மொட்டுவிட்டது.

"நீ மனம்விட்டு மன்னிப்பு கேட்ட அன்றிலிருந்து என் மனமுட்கள் அத்தனையும் மலராயிடுச்சு வரு. பழைய முட்களும்கூட வெறுப்பால் இல்லை... நேசித்த நீ ஒதுக்கின ஏமாற்றத்தில் கூரானவை. நம் பேச்சைத் தொடர முடியலை... அதே நேரம் பெரியவர், நம் வியாபாரத்தை வெளிநாட்டில் விஸ்தரிக்க என்னிடம் பொறுப்பைத் தந்திருந்தார். அவ்வேலைகள் நிறைவடையும் சமயம். அதை நல்லபடி முடித்தால் எனக்கு சில ஆயிரம் டாலர்கள் கமிஷன் வரும். அது ஏறக்குறைய இரண்டு இலட்சரூபாய். இதுவரை சேர்த்த பணத்தை சென்னையில் முதலீடு செய்திருக்கிறேன். கடைக்குத் தோதாய் நிலம் வாங்கி, கட்டிடம் பாதி எழும்பியாயிற்று..."

"ரொம்ப சந்தோஷம்"

"இந்த இரண்டு இலட்சம் வந்தால் உனக்கு ஏதேனும் பரிசு வாங்கித் தந்து கல்யாண பேச்சை எடுக்கலாம்னு..."

"அதாவது பணம், பரிசு காட்டினாத்தான் நான் வருவேன்னு..."



"இல்லை... ஆம்பளைக் கர்வம். எனக்குப் பழைய அடி முழுசாய் மறக்கணும்னா, உன்னை அசத்தாப்போல ஒரு பரிசைக் கொடுத்துதான் கல்யாணம் பேசணும்ங்கற வெறி. வைரமும் முத்தும் இழைச்ச மாலை ஒண்ணுக்கு 'ஆர்டர்' தந்துட்டேன். அதுக்கிடையே அரவிந்தனைப் பற்றிய தகவல் ஹா குழப்பம்..! நேற்று தாரிகாவும் என்னிடம் தாறுமாறாய் இழைந்தாள். அப்போதுதான் என் மனசில் நீ மட்டும்தான் என்பதை அவள்கிட்ட சொல்ல நேர்ந்தது... அந்த ஆத்திரத்தில்தான் பிரபு அங்கில்லைன்னு மொட்டையாய் பேசி உன்னை அலைக்கழிச்சுட்டா."

அவன் முகத்தை விரல்களால் மெள்ள தடவி ஆராய்ந்தாள்.

"அரவிந்தன் பல கோடிகளுக்கு அதிபதி, வர்ணா. யோசிச்சே முடிவெடு. காலம், உனக்கெப்படி பணம் மட்டுமே முக்கியமில்லைன்னு சொல்லி தந்திருக்கோ, அதேபோல எனக்கு... செல்வம் தனி சுகம், பலம் என்கிறதைக் கற்று தந்திருக்கிறது!"

தலைகவிழ்ந்தாள்.

"ஏய்... வரு அழறியா?"

"தண்டனை போதும்ப்பா இன்னும் குத்திக் கிழிக்கணுமா?"

"அப்போ நிச்சயமாய் உன்..."

"என் வானம் நீங்கதான். இந்த நிலவுக்கு வேறேது வானம்?"

"ம்ம்... கவிதையா?" விழி நிறைய பார்த்தவன் அவளை இழுத்து நெருக்கினான்.

"நானும் அப்போ அப்படியே பேசறேன்."

"எப்படியோ?" விழிகள் கொக்கியிட்டு அவனை இழுத்தன. "கவி கவிதையாய்."

"ஒரு வார்த்தையே தடுமாறுது?"

"நீ கண்ணை மூடிக்கோ வரு. அது 'ஜிவுஜிவு'ன்னு என்னைப் பார்த்தா பேச்சு வரலை."

"சரி" - விழிகள் சிப்பியாய் மூடின.

அவன் கைகளை தன் நெஞ்சில் வைத்து அழுத்தினான்.

"இங்கும் வேறு நிலவுக்கு இடமில்லை. பால்நிலா, வெள்ளிநிலான்னுவாங்க- நீ என் வர்ண நிலா!"

மென்மையாய் மூடிய அவள் விழிகளில் முத்தமிட்டான். அச்சிறு அழுத்தமும் தாங்காமல் விழிகளில் திரண்டு நின்ற நீர் முத்தாய் சொட்டியது.